

கப்பலில் தீ

பக். 06



வெறியாட்டம்

பக். 07



சம்பியன்

பக். 22



முதலிடத்தில்

பக். 23




கூடிய வெப்பநிலை 33 °c

குறைந்த வெப்பநிலை 27 °c

வெப்பமான காலநிலை


# உதயன்

பக்கம் : 24

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 | கதிர்: 093 | வள்ளுவர் ஆண்டு: 2045 | மாசி 15, வியாழன் 27.02.2014


# பா.ஜ.க ஆட்சியமைத்தால் 3 மாதங்களுக்குள் தீர்வு

## இலங்கைத் தமிழர்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்கிறார் ஜஸ்வந் சின்ஹா

கொழும்பு.பெப்.27

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி மூன்று மாதங்களுக்குள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்றும் அதற்குரிய முழு நடவடிக்கைகளையும் தமது அரசு மேற்கொள்ளும் எனவும் இந்தியாவின் முன்னாள் வெளிவிகார அமைச்சரும் பா.ஜ.கவின் மூத்த தலைவர்களுள் ஒருவருமான ஜஸ்வந் சின்ஹா தெரிவித்துள்ளார்

*“நான் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலத்தில் இலங்கையைக் கையாள்வதில் எந்தப் பிரச்சினையும் இருக்க வில்லை.*



சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு அதிதி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க அரசு ஆட்சியைக் கைப்பற்றி மூன்று மாதங்களுக்குள் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கும், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு காணப்படும்.

21 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் கைதிகள் விடுதலை குறித்து முறையிடுவதை தடுத்த தளபதி

யாழ்ப்பாணம்.பெப்.27

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தேரரிடம் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கோரிக்கை விடுக்கப்பட்ட போது, சமயம் சார்ந்த நிகழ்வை அரசியலாக்கவேண்டாம் என்று இராணுவத் தளபதி அதனைத் தடுக்க முற்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் ஆலோசகரும் பௌத்த விவகாரங்களுக்கான இணைப்பாளருமான உதுஹம ரத்னபால சிறிபுத்தரகித்த மகாநாயக்க தேரர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்து நல்லை ஆதீனத்தில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

வடமராட்சியைச் சேர்ந்த தமிழ் அரசியல்கைதியான கோபிதாஸ்

21 ஆம் பக்கம் பார்க்க

## உலகம் முழுதும் இலவசமாக இணைய சேவை

*கொழும்பு, பெப் 26*

*உலகின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்கும் செயற்கைக் கோள் மூலமான இணையத் தரவு சேவைகளை (Free WidFi) வழங்க அமெரிக்க நிறுவனம் ஒன்று திட்டமிட்டுள்ளது.*

*நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும், இலாப நோக்கற்ற நிறுவனமான எம்.டி.ஐ.எவ் வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், எவ்விதத் தடைகளும் இன்றி உலகிலுள்ள அனைத்து மக்களுக்குமான இலவச இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.*

*நூற்றுக்கணக்கான செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவி அதன் மூலமாகத் தொலைபேசி மற்றும் கணினிப் பாவனையாளர்களுக்கான இணைய*

21 ஆம் பக்கம் பார்க்க

## தீர்மானத்துக்கு ஆதரவை திரட்ட பிரிட்டன் - அமெ. கூட்டு முயற்சி

கொழும்பு.பெப்.27

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் காட்டமான தீர்மான வரைவை அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ளதால், அதற்கான ஆதரவை திரட்டுவதற்காகப் பிரிட்டன் - அமெரிக்கத் தூதுவர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

இலங்கையிலுள்ள இரு நாடுகளின் தூதுவர்களும் நேரடியாகக் களத்தில் இறங்கி இந்த ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

**இலங்கை வழியில் பிரிட்டன்**

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

21 ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடுத் திட்டத்தை செயற்படுத்த வேண்டாம்

### முதலமைச்சருக்கு நிபுணர் குழு அறிக்கை

யாழ்ப்பாணம்.பெப்.27

இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டாம் என்று அது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

முதலமைச்சரிடம் இந்த அறிக்கை கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை- இந்திய மீனவர் பேச்சு இரண்டாம் கட்டம் கொழும்பில்

### மார்ச் 10 ஆம் திகதி நடக்கும்

கொழும்பு.பெப்.27

இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய இரண்டாம் கட்ட பேச்சு எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளதாகக் கடற்றொழில் நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய மீனவர்கள் எல்லை

21 ஆம் பக்கம் பார்க்க



*மகஸின் சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான கோபிதாஸின் உடல் புலோலியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (த-21)*

## இலங்கையின் மனித உரிமைகள் நிலை; மற்றொரு அறிக்கை இன்று வெளிவரும்

### அதிரடி காட்டுகிறது அமெரிக்கா

கொழும்பு.பெப்.27

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பிலான மற்றொரு அறிக்கை இன்று அமெரிக்காவினால் வெளியிடப்படவுள்ளது. இதில் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலை தொடர்பில் கடுமையாகச் சாடியதாகவே இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு தினங்களுக்கு முன்னர் ஐ.நா. மனித உரிமை ஆணை

21 ஆம் பக்கம் பார்க்க

## விவசாயிகள் பாதிக்கப்படாவண்ணம் இரணைமடுத் திட்டம் குறித்து முடிவு

### கிளிநொச்சியில் கூறினார் சம்பந்தன்

கிளிநொச்சி.பெப் 27

கிளிநொச்சி விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் இரணைமடுத் திட்டம் குறித்து முடிவு எடுக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இரணைமடுக் குளத்தின் கீழான விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளைச் சந்தித்த பின்னர் உதயனுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இரணைமடுத் திட்டம் குறித்து கிளிநொச்சியில் விவசாய மக்

21 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவரின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.27

87 தமிழக மீனவர்களின் விளக்கமறியலை இரண்டாவது முறையாகவும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் நீடித்துள்ளது. இதன் மூலம் 116 இந்திய மீனவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் இரண்டாம் வாரம் வரை தடுத்து வைக்கப்படவுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில்

21 ஆம் பக்கம் பார்க்க

## மகனின் விடுதலையில் நீதியமைச்சர் பாராமுகம்

### உயிரிழந்த கைதியின் தந்தை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்.பெப்.27

நீதியமைச்சர் தனது மகனின் விடுதலை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கோபிதாஸின் தந்தை குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரிட்டனுக்கு அவரை மாற்றுவதற்குரிய ஒழுங்குகள் தொடர்பில் நீதியமைச்சரிடம் தெரிவித்தும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை' என்று கோபிதாஸின் தந்தை விஸ்வலிங்கம் கூறினார்.

மகஸின் சிறைச்சாலையில் கடந்த திங்கட்கிழமை காலை கோபிதாஸ் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். மர்மமான முறையில் அவர் உயிரிழந்திருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இருப்பினும் உடற்கூற்றுப் பரிசோதனைகளில் அவர் மாரடைப்பினா

21 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வவுனியா இளைஞர் நேற்று சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப் 27

யாழ்ப்பாணத்தில் ரயில் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்திய நிறுவனத்தைச் சேர்ந்த வவுனியா இளைஞர் ஒருவர் அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவருடையது எனக் கருதப்படும் உடுப்புகளும் எரிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவைச் சேர்ந்த லெனின் ருகன் (வயது - 26) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்.நாவலர் வீதியில் உள்ள வாடகை வீடு ஒன்றில் குறித்த நிறுவனப் பணியாளர்கள் தங்கியிருக்கின்றனர். அங்கிருந்தே அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார். அது தொடர்பில் யாழ்.பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர்.

அவருடைது என்று கூறப்படும் உடுப்புகள் சில எரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தனர். (த-4-17)

# தங்கூசி வலைகளுக்கு ஏப்ரல் 1 முதல் தடை

## *கடற்றொழில் திணைக்களம் அறிவிப்பு*

யாழ்ப்பாணம்.பெப்.27

குடாக்கடலில் தங்கூசி வலைப் பாவனை மற்றும் டைனமற் பாவித்து மீன் பிடித்தல் என்பன எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியுடன் தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கிராமியக் கடற்றொழில் மீனவச் சங்கங்களுக்கான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குடாக்கடலில் கடல் வளத்தைப் பாதிக்கும் வகையில் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடவேண்டாம் என ஏற்கனவே மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் தங்கூசி வலைப் பாவனை மற்றும் டைனமற் பயன்படுத்தி மீன் படியில் ஈடுபடுதல் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியுடன் தங்கூசி வலைப் பாவனை, மற்றும் டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்தல், கூடு பயன்படுத்தி மீன் பிடித்தல், சங்கிலி, குண்டு பயன் படுத்தி மீன் பிடித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. இதற்கு இடைப்பட்ட காலத்தில் மாற்று ஏற்பாடுகளை மீனவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் நீரியல் வளத் திணைக்களம் மற்றும் கிராமிய சம்மேளனங்களில் தெரிவு செய்யப்பட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் கடற்படையினர் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வர் - என்றார். (த-14)

## பௌத்தமும் இந்துவும் ஒன்றுதான்

# ஜனாதிபதியின் ஆலோசகர் புத்தரகித்த தேரர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.27

பௌத்தமும் இந்துவும் ஒன்றுதான் என்று யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் ஆலோசகரும் பௌத்த விவகாரங்களுக்கான இணைப்பாளருமான உதுஹம ரத்ன பால சிறிபுத்தரகித்த மகாநாயக்க தேரர், அதன் பின்னர் யாழ். நகரில் இராணுவ முகாமில் அமைக்கப்பட்டிருந்த புதிய விகாரையைத் திறந்து வைத்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதியின் ஆலோசகரும் பௌத்த விவகாரங்களுக்கான இணைப்பாளருமான உதுஹம ரத்ன பால சிறி புத்தரகித்த மகாநாயக்க தேரர் நல்லூர் கோயிலில் வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன் பின்னர் நல்லை ஆதீனத்தில் ஆதீன முதல்வர் மற்றும் அகில இலங்கை இந்துமா மன்றத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில், பௌத்தமும் இந்துவும் ஒன்று என்று அவர் குறிப்பிட்டார். இந்த இரு மதங்கள் மாத்திரமே மத மாற்றம் செய்வதில்லை. இரு மதங்களின் தலைவர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் யாழ்.கடற்கரை வீதி, குருநகரில் இராணுவத்தினரின் முகாமில் அமைக்கப்பட்டிருந்த புதிய விகாரையை அவர் திறந்து வைத்தார். (த-5)

# வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயற்பட தயார்

## *மாநகர சபை முதல்வர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.பெப்.27

கட்சி பேதமின்றி எல்லோரும் ஒன்றிணைந்து வடக்கு மாகண சபையுடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மாநகர சபை தயாராகவுள்ளது என்று யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

> “யாழ்.மாநகர சபை மற்றும் மாகாண சபை ஊடாக மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் பணிக்காகக் கட்சி பேதமின்றிச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுச் சபையின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விவாதம் நடத்தினர். இதன்போது பேசிய முதல்வர், யாழ்.மாநகர சபை மற்றும் மாகாண சபை ஊடாக மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் பணிக்காகக் கட்சி பேதமின்றிச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

வடக்கு மாகாண சபையுடன் இணைந்து கட்சி பேதமின்றி அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு மாநகர சபை தயாராகவுள்ளது - என்றார். (த-14-7)

## இரண்டு கடைகளின் உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

யாழ்ப்பாணம், பெப் 27

கடைகளில் விற்பனைப் பொருள்களின் விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாத இரண்டு பேருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

புங்குடுதீவில் உள்ள இரண்டு கடைகளின் உரிமையாளர்களுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டப் பாவனையாளர் அதிகார சபையினரால் குறித்த இரண்டு கடைக்காரர்களுக்கும் எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. நீதிமன்றில் இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

# மாநகர சபையை மட்டும் நம்பியிராமல் மாகாண சபையிடமும் நிதி கேளுங்கள்

## *ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினரிடம் காட்டம்*

யாழ்ப்பாணம்.பெப்.27

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வீதிகளைத் திருத்துவதற்கு எல்லாம் சபையை நம்பி இருக்காமல் மாகாண சபையிடம்போய் நிதியைக் கேளுங்கள். அவர்களும் உங்கள் கட்சி தானே என்று யாழ்.மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதிர்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து காட்டமாகக் கூறினர்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது எதிர்க்கட்சி உறுப்பினர் சு.சோதிலிங்கம், தனது வட்டாரத்துக்கு உட்பட்ட வீதிகளைப் புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தபோதும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனச் சபையில் கூறினார். இதன்போது குறுக்கிட்டுப் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் து.இளங்கோ, மாநகர சபையை மட்டும் நம்பி இருக்க வேண்டாம். வடக்கு மாகாண சபையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடையது தானே. அங்கு போய் நிதி கேளுங்கள். அவர்களும் உங் கள் கட்சி தானே. செய்து தரு வார்கள் - என்றார்.

மாநகர சபை ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையை மட்டும் நிறைவேற்றிக் கொடுக்கிறது. ஏன் எங்களுடைய கோரிக்கைகளை மட்டும் நிறைவேற்றப்படவில்லை என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் விசனம் வெளியிட்டனர். (த-14-7)

# அனுமதியின்றி மதுபான நிலையம் நடத்தியவருக்கு 1 லட்சம் அபராதம்

யாழ்ப்பாணம், பெப் 27

யாழ்.நகரில் வைத்தியசாலை வீதியில் 5 வருடங்களாக அனுமதிப்பத்திரமின்றி மதுபான நிலையம் ஒன்றை நடத்தி வந்த நபருக்குச் சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றத்துக்காக யாழ்.நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

5 வருடங்களாக அந்த மதுபான நிலையம் அனுமதிப்பத்திரமின்றி இயங்கி வந்தபோதும் எவரது கண்களுக்கும் அது தென்பட்டிருக்கவில்லையா என்பது தெரியவில்லை.

அந்த மதுபான விற்பனை நிலையத்தை நடத்தி வந்தவர், அனுமதிப்பத்திரமின்றி மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது எவ்வளவு காலமாக மதுபான நிலையம் இயங்கி வருகிறது என்று நீதிமன்றினால் கேட்கப்பட்டது. இதன்போதே அவர் 5 வருடங்களாக இயங்கிவருகிறது என்று தெரிவித்தார்.

அவர் சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிமன்று அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது. அபராதம் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது. (4)

## மாணவர்களை கண்டிப்பதில்லை என ஆசிரியர்கள் முடிவு

கொழும்பு, பெப்.27

எதிர்வரும் காலங்களில் மாணவர்களை கண்டிக்கப் போவதில்லை என குருநாகல் மாவட்ட அதிபர், ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சென்.ஜோன் வித்தியாலய அதிபருக்கு எதிரான முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைளை கண்டித்து குருநாகலில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே சங்கத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். (ஜ)

# எம்.ஜி.ஆருக்கு மட்டுமல்ல ஜெயலலிதாவுக்கும் சிலை

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் எம்.ஜி.ஆருக்குச் சிலை வைப்பதானால் ஜெயலலிதாவுக்கும் சிலை வைக்கவேண்டும் என்று யாழ்.மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் ஜனாப்.மொ.மீ.முஸ்தபா சபையில் கிண்டலடித்தார்.

> “பயங்கரவாதத்தை இலங்கையில் ஏற்படுத்தியதற்கு எம்.ஜி. ஆரும் காரணமாக இருந்தவர். எனவே அவருக்குச் சிலை வைக்க முடியாது

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கல்வியங்காட்டுச் சந்தியில் எம்.ஜி.ஆருக்கு ஆறரை அடி உயரத்தில் சிலை அமைப்பதற்கு எம்.ஜி.ஆர் கழகத்தால் அனுமதி கோரப்பட்டுள்ளமை தொடர்பாகச் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக உறுப்பினர்கள் விவாதித்துக்கொண்டிருந்தபோது எம்.ஜி.ஆருக்குச் சிலை வைப்பதானால் அவருடன் நடித்த ஜெயலலிதாவுக்கும் சிலை வைக்கவேண்டும் என முஸ்தபா கிண்டலாகக் கூறினார்.

பயங்கரவாதத்தை இலங்கையில் ஏற்படுத்தியதற்கு எம்.ஜி. ஆரும் காரணமாக இருந்தவர். எனவே அவருக்குச் சிலை வைக்க முடியாது என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

எம்.ஜி.ஆரின் படங்களை நீங்கள் இரசித்து பார்க்கவில்லையா? சிலை வைப்பதற்கு மட்டும் எதிர்ப்பு தெரிவியுங்கள் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ந.இராஜதேவன் கிண்டலாகக் கூறினார். (த-14-7)

## மீனவர் ஒருவரின் மோ.சைக்கிளுக்கு நேற்று தீ வைப்பு

யாழ்ப்பாணம், பெப் 27

கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.குருநகர் பகுதியில் 5 மாடிக் கட்டடத்தை அண்மித்து நேற்று அதிகாலை சம்பவம் இடம்பெற்றது.

தொழிலுக்குச் செல்லும் பொருட்டு குறித்த மீனவர் தனது நண்பர் ஒருவரின் வீட்டின் முன்புறமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டுச் சென்றிருந்தார். திரும்பி வந்து பார்த்த போது அது எரியூட்டப்பட்டி ருந்ததாகத் தெரிவித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# மாநகர சபையின் புதிய கட்டடம் எமது ஆட்சியிலேயே அமையும்

## *முதல்வர் யோகேஸ்வரி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.பெப்.28

யாழ்.மாநகர சபைக்கான 3 மாடிகள் கொண்ட புதிய கட்டடம் எமது ஆட்சிக் காலத்திலேயே அமைக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது புதிய கட்டடம் அமைத்தல் தொடர்பாக உறுப்பினர்களால் கேள்வி எழுப்பப்பட்ட போது அதற்குப் பதில் அளித்த முதல்வர் மேலும் தெரிவித்ததாவது:-.

யாழ்.மாநகர சபைக்கான புதிய மூன்று மாடிக்கட்டடம் 7 கோடி ரூபா நிதியில் கட்டப்படவுள்ளது. கடந்த காலங்களைப் போன்று கட்டடங்களை உடனடியாக அமைக்க முடியாது. அதற்கான தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக மண் பரிசோதனை, கடல் நீர் மட்டம் என்பன கவனிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

தற்போது தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்காக 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சிகள் முடிவடைந்த பின்னர் கட்டடத்துக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுப் பொருந்தமான கட்டடம் அமைக்கப்படும் - என்றார். (த-14-7)

# மன்னார் பெரிய கடை மக்கள் நேற்றுப் பேரணி

## மது விற்பனை நிலையத்தை அகற்றக் கோரி

மன்னார், பெப்.27
மன்னார் பெரிய கடை கிராமத்தில் மக்களின் குடியிருப்புகளுக்கு அருகில் கடந்த 6 ஆம் திகதி புதிதாக அமைக்கப்பட்ட மது விற்பனை நிலையத்தை அகற்றக்கோரி பெரியகடை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கிராம மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்புப் பேரணி ஒன்றை நேற்று நடத்தினர்.

நேற்று புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் உப்பள வீதியில் ஒன்று கூடிய நூற்றுக் கணக்கான கிராம மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டனர்.

அதன் போது குறித்த பதாகைகளில் 'அகற்று அகற்று எமது கிராமத்தை விட்டு மதுபான சாலையை அகற்று', 'அடிக்காதே அடிக்காதே ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே' போன்ற பல வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டனர்.

உப்பள வீதியில் ஆரம்பமான பேரணி பிரதான வீதியூடாகச் சென்று மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சென்றடைந்தது. அங்கு கோரிக்கை அடங்கிய மனுவை கிராம மக்கள் மன்னார் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி துஸார தலுவத்தையிடம் கையளித்தனர்.

தொடர்ந்தும் பேரணியாக மன்னார் மாவட்டச் செயலகத்துக்குச்சென்றுமன்னார்மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரியவிடமும் மனுவைக் கொடுத்தனர். பின்னர் அங்கிருந்து பிரதேச செயலகத்தில் மனுவைக் கையளிக்கச் சென்றனர்.



பேரணியில் ஈடுபட்ட மக்கள்

பிரதேச செயலர் எஸ்.தயானந்தா சற்றுத் தாமதித்து வெளியில் வந்தார் என்றும் அவர் அங்கு கூடியிருந்தவர்களிடம் 'என்ன பிரச்சினை' எனக் கேட்டார் என்றும் மக்கள் தெரிவித்தனர். பின்னர் பிரதேச செயலரிடம் தமது பிரச்சினை தொடர்பாக மக்கள் விளக்கிக் கூறினார்கள்.

**மக்களுக்கு அசௌகரியம்**

தற்போது குறித்த மது விற்பனை நிலையம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். பெண்கள் மாலை நேரத்தில் குறித்த வீதியூடாகச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. குறித்த மது விற்பனை நிலையத்தில் மதுபானத்தை வாங்கிக் குடித்த பின்னர் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி தமக்குள் சண்டையிடுகின்றனர்.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என அனைவரும் வெறுப்படைந்துள்ளனர்.

எனவே, உடனடியாக குறித்த மது விற்பனை நிலையத்தை அகற்றி வேறு இடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மக்கள் மன்னார் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதற்குப் பதிலளித்த பிரதேச செயலர்:-

பெரிய கடைப் பகுதியில் மது விற்பனை நிலையத்தை அமைக்க முழுமையான அனுமதியை நான் வழங்கினேன். அவர்கள் முழு ஆதாரத்தோடு வந்தார்கள். இதனால் அனுமதியை வழங்கினேன். வேறு இடத்துக்கு மது விற்பனை நிலையத்தை மாற்ற வேண்டும் என்றால் பெரிய கடை கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பிறிதொரு இடத்தைத் தெரிவு செய்து எழுத்து மூலம் கோர வேண்டும். அதன் பின்னர் இதனை இடம்மாற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றேன் எனத் தெரிவித்தார்.

**பிரதேச செயலரின் கருத்துக்கு எதிர்ப்பு**

இதே வேளை குறித்த பெரிய கடை கிராமத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளில் மது விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அதனைக் கட்டுப்படுத்தவே மது விற்பனை நிலையத்தை அவ்விடத்தில் அமைக்க அனுமதி வழங்கியதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

பிரதேச செயலரின் கருத்துக்கு பெரிய கடை கிராம மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மேலும் பிரதேச செயலர் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களைச் சுமார் 15 நிமிடங்கள் வரை தனது கையடக்கத்தொலைபேசியின் மூலம் புகைப்படம் எடுத்தார். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. பின்னர் மன்னார் நகர சபைத் தலைவர் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டார்.

இதன்போது மன்னார் பிரதேச செயலரிடம் குறித்த மது விற்பனை நிலையத்தை அமைக்க யார் அனுமதி வழங்கியது என நகர சபைத் தலைவர் கேட்ட போது அதற்கான அனுமதியை பிரதேச செயலர் என்ற வகையில் நானே வழங்கினேன், அதற்கான அதிகாரம் எனக்கு மட்டுமே உண்டு" என்றார். இந்த நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத் தலைமையக பொறுப்பதிகாரி துஸார தலுவத்தை சம்பவ இடத்துக்கு வந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

மன்னார் பொலிஸாரினால் குறித்த மது விற்பனை நிலையத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது.

எனினும் அந்தக் கிராம மக்களின் நலன் கருதி தன்னால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த மது விற்பனை நிலையத்தை அகற்ற உடன் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து குறித்த கிராம மக்கள் மன்னார் நகர சபைக்குச் சென்று மன்னார் நகர சபை தலைவர் எஸ். ஞானப்பிரகாசத்திடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

மன்னார் பிரதேச செயலர் மக்களுடன் நடந்து கொண்ட விதம் குறித்து பெரியகடை கிராம மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (ஓ-56)

## வீதி அமைப்பதைத் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

மல்லாவி, பெப்.27
மல்லாவி மருத்துவமனை சந்தியிலிருந்து பிரதான வீதிக்கு அருகில் புதிதாக வீதி அமைப்பதைத் தடுத்து நிறுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட பிரதான வீதியிலிருந்து நாலரை அடிக்கு கீழே புதிய வீதி அமைக்கப்படுவதால் வர்த்தகர்களுக்கு பலத்த பாதிப்பு ஏற்படலாம் என்று அந்தப் பகுதி வர்த்தகர் சங்கத் தலைவர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

பிரதான வீதி மிக உயரமாக அமைக்கப்பட்டதால்அதிலிருந்து உட்செல்லும் மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பிரதான வீதிக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சுமார் ஒன்றரை கிலோமீற்றர் நீளமான துணை வீதி அமைத்து மல்லாவி சந்திவரை புதிய வீதி அமைக்கப்படவுள்ளதாக மற்றொரு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

## சைக்கிள்களை வீதியோரங்களில் நிறுத்தாதீர்

நல்லூர், பெப்.27
திருநெல்வேலி சந்தைப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதியோரங்களில் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்த வேண்டாம் என்று நல்லூர் பிரதேச சபை பொதுமக்களைக் கேட்டுள்ளது.

"பாதுகாப்பு நிலையங்கள் உள்ளன. அங்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்துங்கள்.

அங்கு நிறுத்துவதுதான் பாதுகாப்பும் கூட" என்றும் பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-7)

## சட்டம் தந்ததைக் கூடப் பறிக்க முயல்கிறது அரசு

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, பெப்.27
சட்டம் எமக்கு தந்துள்ளதைக் கூடப் பறித்தெடுக்க அரசு முயன்று வருகின்றது என்று வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாந்தை பிரதேச சபையின் கீழ் உள்ள நட்டாங்கண்டல் பகுதியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 9.7 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தையை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மாகாண முதலமைச்சர் திறந்து வைத்தார். இதன்போது அவர் உரை நிகழ்த்து கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

> இன்று எங்கள் பாரம்பரியம் மறுக்கப் படுகின்றது. புதிய வாழ்க்கை முறைகள் உட்புகுத்தப்படுகின்றன. உழைத்துப் பணம் பெறவேண்டும் என்ற எண்ணம் எங்களை விட்டோடி எவ்வாறு உழைக் காது பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் மேலோங்கி வருகின்றது.

"மாந்தை மக்களைக் கண்டு உறவாட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையடுத்து மகிழ்ச்சி அடைகின்றேன். மாந்தை கிழக்குப் பிரதேசம் விவசாயப் பூமி. பல நவீன வசதிகளைப் பெற தாமதமேற்பட்டாலும் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்திருக்கும் உங்கள் வாழ்க்கையானது மிகவும் மேம்பட்ட வாழ்க்கை என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் நெல்சிப் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட இந்தச்சந்தை யானது உங்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்வில் ஒரு திருப்பத்தை உருவாக்கியுள்ளது.

இன்று எங்கள் பாரம்பரியம் மறுக்கப்படுகின்றது. புதிய வாழ்க்கை முறைகள் உட்புகுத்தப்படுகின்றன. உழைத்துப்பணம்பெறவேண்டும்என்ற எண்ணம் எங்களை விட்டோடி எவ்வாறுஉழைக்காமல் பணம் சம்பாதிக்கலாம் என்கின்ற எண்ணம் மேலோங்கி வருகின்றது. இது துரதிர்ஷ்டவசமானது. உழைப்பது சுமையுடையது தான். ஆனால் அந்தச் சுமையை சுமப்பதில் தான் அதற்கான மரியாதையும் மகிழ்வும் தங்கியிருக்கின்றன.

நாங்களாக நினைத்து எது சரியோ எது முறையோ அதைச்செய்வது தான் ஜனநாயகம். அதாவது மக்கள் நாய கர்களாக வரும் விதத்தில் ஆட்சி பரிணாமம் பெறுவதே ஜனநாயகம். எமது மக்களின் ஆசைகளையும் அபிலாசைகளையும் நாம் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும். அதை விட்டு விட்டு நலன்களைப் பிரத்தியேகமாகப் பெறும் பொருட்டு மக்களை அடக்கியாள முற்பட்டால் அங்கு எதேச்சாதிகாரமே உருவெடுக்கும். இலங்கையில் மத்திய அரசு இருக்கும் அதே நேரம் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கின்றது சட்டம். அவ்வாறு பகிர்ந்து கொடுத்துள்ள அளவுப் பிரமாணம் எமக்குப் போதுமானதாக இல்லாதிருப்பினும் சட்டம் எமக்குத் தந்துள்ளதைக் கூடப்பறித்தெடுக்க அல்லது தராது பறிக்க அரசு முயன்று வருகின்றது - என்றார்.

(வ)



பறிமுதல் செய்யப்பட்ட வலைகள்

## கொக்கிளாய் கடலில் சட்டவிரோத மீன்பிடி

### தடைசெய்யப்பட்ட வலைகளுடன் மாட்டினர் இருவர்

கொக்கிளாய் கடல் நீரேரியில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்துக் கொண்டிருந்த இருவரைச் சுற்றி வளைத்துப் பிடித்த திணைக்கள அதிகாரிகள் வலைகளைக் கைப்பற்றியதுடன் இருவரையும் கைது செய்து முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். நீதிவான் இருவருக்கும் தலா 5000 ரூபா அபராதம் விதித்ததுடன் வலைகளை அரச உடைமையாக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கடல் நீரேரியில் சட்டவிரோதமான முறையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தலைமையில் சென்ற அதிகாரிகள் குறித்த கடற் பிரதேசத்தைச் சுற்றி வளைத்துத் தேடியபோது மீன்பிடித்துக் கொண்டிருந்த இருவரைக் கண்டுபிடித்தனர். (வ-115)

# இலங்கைக்கு எதிராக தனி தீர்மானம் நிறைவேற்றுக

## ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, பெப்.27

மார்ச் மாதம் நடக்க உள்ள ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா தனியாகவோ அல்லது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்தோ கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



ராமதாஸ்

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கைப்போரின் போது நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் மீது அங்கு நடைபெறும் விசாரணைகளை கடந்த ஆண்டு நேரில் ஆய்வு செய்த ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை, அவரது இறுதி அறிக்கையை ஐ.நா. மனிதப் பேரவையில் அடுத்த மாதம் 26 ஆம் திகதி தாக்கல் செய்ய விருக்கிறார். முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ள அவரது அறிக்கையில், இலங்கை அரசு நடத்திய போர்க்குற்ற விசாரணை ஐ.நா.வுக்கு திருப்தியளிக்கவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

இலங்கை இராணுவத்தினர் இலங்கையில் நடத்தியது திட்டமிடப்பட்ட இன அழிப்பு போர் என்றும், இது குறித்து சர்வதேச போர்க்குற்ற மற்றும் இனப்படுகொலை விசாரணை நடத்துவதன்மூலம் தான் ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்க முடியும் என்று கடந்த ஐந்து ஆண்டுகளாகவே வலியுறுத்தி வருகிறேன். என்னால் நிறுவப்பட்ட பசுமைத் தாயகம் அமைப் பின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் பங்கேற்கும் பிரதிநிதிகளும் இதே கருத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

ஐ.நா. மனித உரிமைப்பேரவையின் 24 ஆவது கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் மத்திய அமைச்சரும், பா.ம.க. இளைஞர் அணித் தலைவருமான அன்புமணி, இலங்கைப் போருக்கு பின்னரும் அங்கு நடை பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப் படுகொலைகளை பட்டியலிட்டு, அதுகுறித்து சுதந்திரமான சர்வதேசவிசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று வலியுறுத் தியிருந்தார். தமிழகத்திலுள்ள பெரும்பாலான கட்சிகள் மற்றும் அமைப்புகளின் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளின் குற்றச்சாட்டை உறுதி செய்யும் வகையிலேயே ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையின் இறுதி அறிக்கையும்அமைந்திருக்கிறது.

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறு கட்டுமான வசதிகளைச் செய்து தருவதில் ஓரளவு முன் னேற்றம் எட்டப்பட்டிருக்கும் நிலையிலும் இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான, நம்பக ரமான விசாரணை நடத் தப்பட வேண்டும் என்ற ஐ.நா.வின் கோரிக்கையை நிறிவேற்றும் வகையிலோ, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் வகையிலோ எந்த நடவடிக்கையையும் இலங்கை மேற்கொள்ள வில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்கள் இந்தியாவைத் தமது தந்தை நாடாக கருதும் நிலையில், அவர்களுக்குஇழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி பெற்றுத் தர வேண்டியது மத்திய அரசின் கடமையாகும். எனவே, இலங்கை அரசு மீதான போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை குற்றச்சாற்றுகள் குறித்து நேர்மையான, சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையின் 25 ஆவது கூட்டத்தில் இந்தியா தனியாகவோ அல்லது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்தோ கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். (வ)

## பத்திரிகை அலுவலகம் மீது மீண்டும் தாக்குதல்

வவுனியா, பெப்.27

வவுனியாவிலிருந்து வெளிவரும் வாராந்தப் பத்திரிகை அலுவலகத்தை இனந்தெரியாத நபர்கள் எரியூட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 7.30 மணிக்கு குறித்த பத்திரிகையின் அலுவலகத்தில் 3 ஊழியர்கள் கடமையில் இருந்த வேளை அங்கு வந்த இனந் தெரியாதநபர்கள் அலுவலக முன்பகுதிக்கு தீமூட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் எரியூட்டப்பட்ட இடத்தையும் பத்திரிகைகளையும் பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி குறித்த பத்திரிகை அலுவலகத்தின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டிருந்த நிலையில் இரண்டாவது தாக்குதல் சம்பவமாக தீ மூட்டல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-402-400)

## வவுனியாவில் 10 வீடுகளுக்கு தீ மூட்டிய விசமிகள்

வவுனியா, பெப்.27

வவுனியா இராசேந்திர குளம் பகுதியில் தமிழர்களுக்கு சொந்தமான 10 வீடுகள் இனந் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை காலை இந்தச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

குறித்த வீடுகளின் உரிமையாளர்கள் வெளியில் சென்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த வருடம் குறித்த பகுதியில் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்து தமிழர்களுக்குச் சொந்தமான சில வீடுகள் தீ வைக்கப்பட்டன. ஆனால் இது தொடர்பாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்றும் அதே பாணியில் மீளவும் வீடுகளுக்கு தீ மூட்டப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

முறுகல் நிலை நீண்ட காலமாகத் தொடர்வதால் சில குடும்பங்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று விட்டன. எஞ்சியுள்ளவர்களும் இரவு வேளைகளில் வீட்டில் தங்க அச்சம் காரணமாக வெளியிடங்களில் தங்கி விட்டு வர வேண்டியுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை சாதகமாகப் பயன்படுத்திய இனந்தெரியாத சிலர் வீடுகளுக்கு தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-400-402)

## நைஜீரிய அதிகாரிகளை முகாமில் வைத்துப் பூட்டிய இலங்கையர்கள்

திருச்சி மத்திய சிறையில் உள்ள சிறப்பு முகாமில் இருக்கும் இலங்கை தமி ழர்கள் குழு ஒன்று அங்கு சென்ற மூன்று நைஜீரிய அதிகாரிகள் வெளியில் செல்ல முடியாதபடி நுழைவு கதவை உட்பக்கமாகப் பூட்டியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 8 நைஜீரிய பிரஜைகளின் தடுப்புக் காவல் காலம் முடிந்து அவர்களை திருப்பி அனுப்புவதற்கான குடிவரவு நடைமுறைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த அதிகாரிகள்முகாமுக்குச்சென்றிருந்தனர்.

இலங்கைத் தமிழர்கள் தம்முடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளி யான ஒருவருக்கு சிறப்பு வசதிகள் மற்றும் மேற்கத்தேய கழிவறை வசதிகளை செய்து கொடுக்குமாறு கோரி வந்தனர்.

நைஜீரிய அதிகாரிகள் தடுப்பு காவலில் இருந்த தமது நாட்டைசேர்ந்தவர்களை புகைப் படம் எடுத்துள்ளனர். அதனையடுத்தே இலங்கை தமிழர்கள் நுழைவுக் கதவைப் பூட்டியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில், தடுப்புக் காவலில் இருந்த நைஜீரியர்களின் உதவியுடன் கல்லைக் கொண்டு பூட்டை உடைத்து நைஜீரிய அதிகாரிகள் வெளியில் வந்துள்ளனர். (வ)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

வேலை வாய்ப்பு
கல்வி சார்ந்த விடயமாக வெளியில் சென்று கடமையாற்றக்கூடியவர்கள் தேவை.
★ 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும். ★ மாற்று வலுவுள்ளவர்களும் ஓய்வூதியர்களும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புகொள்க:- 0777 637067

பிற்போடல்
ஏழாலை தெற்கு, மயிலங்காடு ஞானவைரவர் ஆலய கட்டட வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டு வரை ஒத்தி வைக்கப் பட்டுள்ளது. என்பதை மிக்க மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.
ஆலய பரிபாலன சபையினர்.
தொடர்புகளுக்கு:- 0777 578851
(Senthur)

## வேற்றுநாட்டு விவகாரங்களில் அமெ. பயன் இல்லாது ஈடுபடாது

### பழ.நெடுமாறன் தெரிவிப்பு

சென்னை, பெப்.27

வேற்று நாட்டு விவகாரங்களில் ஆதாயம் இல்லாமல் அமெரிக்கா ஈடுபடாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு உலகத் தமிழர் பேரமைப்பு இயக்கத்தின் தலைவரும், தஞ்சாவூர் முள்ளி வாய்க்கால் முற்றம் நினைவாலயத்தின் மூலவேருமான பழ. நெடுமாறன் தெரி வித்தார்.

சென்னையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் பேசுகையில்:-

"உலக வணிகப் போக்குவரத்தில் இந்து மகா சமுத்திரம் முக்கிய கடல் மார்க்கமாகத் திகழ்கின்றது. இதில் இலங்கையின் பேராதரவுடன் சீனா ஆதிக்கம் செலுத்துகின்றது. இதனைத் தடுக்கும் நோக்கமாகவே இலங்கைக்கு எதிராக அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டு வருகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னரும் இந்தக் கடல் பிரதேசம் இந்தியாவின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. தற்போது யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல, இந்தி யாவின் மத்திய காங்கிரஸ் கட்சி இந்த கடல் விவகாரத்தில் அக்கறை செலுத்தாமலே உள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு தொலைநோக்குப்பார்வைஇல்லை. நாட்டைக் காக்க வேண்டும் என்ற அக்கறையும் இல்லை.

முன்னாள் பிரதமர்களான இந்திரா காந்தி, வாஜ்பாய் ஆகியோர் நாட்டின் பிரதமர்களாக இருந்தபோது இந்தியாவின் பாதுகாப்பில் மிகுந்த அக்கறையாக கொண்டவர்களாக இருந்தார்கள். அதனால் தான் இலங்கையில் இருந்த தமிழர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள். அந்த உணர்வு தற்போது உள்ள காங்கிரஸ் கட்சித்தலைவர்களுக்குஇல்லை.

சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளால் இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கும் ஆபத்து ஏற்படும்.

இராணுவ தொழிற்சாலைகளை ஜவகர்லால் நேரு இந்தியாவின் தென் மாநிலங்களில் நிறுவியுள்ளார்.

தற்போது தென் மாநிலங்களில் சுமார் 630 இராணுவத் தளபாடங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. தனக்கு எதிராக அமெரிக்கா ஐக்கியநாடுகள் சபையில் தீர்மானம் கொண்டு வந்து விட்டது என்ற ஆத்திரத்தில், சீனாவின் உதவியுடன் இலங்கை இந்தியாமீது அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டால் தமிழகம் உட்பட இந்தியாவின் தென் மாநிலங்களே அதிகம் பாதிக்கப் படும் ஆபத்து உள்ளது. மிகுந்த பேராபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை தமிழகத்திற்கு நிச்சயம் ஏற்படும்"- என்றார். (வ)

## வட மாகாண சபை ஊழியர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.27

வடமாகாண இணைந்த சேவை அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் வெளியாகியுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த இடமாற்றப் பட்டியலில் 683 பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இருந்து 241 பேரும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலிருந்து 262 பேரும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 16 பேரும், சாரதிகள் 30 பேரும், அலுவலகப் பணியாளர்கள் 34 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள் இடமாற்றம் தொடர்பான பட்டியலை கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உதயன் பணிமனையில் இன்று முதல் பார்வையிடலாம். (ஐ-400-288)

## மானுஸ்தீவு முகாம் மூடப்படவேண்டும்

### மனித உரிமை நடவடிக்கையாளர்கள் கோரிக்கை

பப்புவா நியூகினி மானுஸ் தீவு முகாமின் பொறுப்பை இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி ஏற்றுள்ளதாக வெளியான தகவலை அடுத்து அதனை மூடி விடுமாறு ஆஸ்திரேலிய மனித உரிமை நடவடிக்கையாளர்கள் கோரியுள்ளனர்.

மனுஸ் தீவில் நடவடிக்கை களுக்கு பொறுப்பாக இருப் பவர் தினேஸ் பெரேரா என்பவரே என்று ஆஸ்திரேலிய அரசு அறிவித்திருந்தது. எனினும் அவருடைய முன்னைய பதவியான இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி என்பதை ஆஸ்திரேலிய அரசு வெளியிடவில்லை.

மானுஸ் தீவு முகாம், அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட பப்புவா நியூகினியின் வடக்குக் கரையோர பிரதேசமாகும்.

அங்கு ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சென்ற அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான், இலங்கை, ஈராக், ஈரான் உட்பட்ட பல நாட்டு அகதிகள் அந்தமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில்தினேஸ்பெரேரா, ஜி4எஸ் என்ற சர்வதேச பாதுகாப்பு நிறுவனத்தில் பணியாற்றியவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை மானுஸ் தீவின் வசதிகள் உட்பட்ட விடயங்கள் மனிதாபிமானமற்ற வகையில் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதர் எமலி ஹெய்வி குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்கிடையில் அண்மைக் காலமாக மானுஸ் தீவு முகாமில் கலவரங்கள் ஏற்பட்டு பலர் காயமடைந்த நிலையிலேயே தினேஸ் பெரேரா என்பவர் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. (வ)

# உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி

**குருந்தத்தில் சிகிச்சை பெற விரும்பாதவர்**

தென்மராட்சி, பெப்.27

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் குருந்தம் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற விரும்பாத வடமராட்சி வாசி உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த குடும்பஸ்தரை போதைப் பொருள் பாவனையிலிருந்து விடுவிப்பதற்காக அவரது குடும்பத்தினர் மருத்துவமனை விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் சேர்த்திருந்தனர்.

குருந்தம் பிரிவில் தங்கி சிகிச்சை பெற விரும்பாத குறித்த நபர் நேற்றுமுன்தினம் விடுதியிலிருந்து எவருக்கும் தெரியாமல் வெளியேறி மீசாலைப் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று நேற்று முன்தினம் காலை உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

அவரை உறவினர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் மீண்டும் கொண்டு வந்து சேர்த்தனர். மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கிய பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (வ-9)

# யாழ்.மாநகர சபை வாகனங்களுக்கு முதன் முதலாக கண்காணிப்புக் கருவி

## அவற்றின் நடமாட்டம் குறித்து அறிவதற்கு

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்.மாநகரசபையின் பாவனையில் உள்ள ஐந்து வாகனங்களுக்கு முதற்கட்டமாக அவற்றின் நடமாட்டங்களைக் கண்காணிக்கும் கருவியைப் (M TRACT DEVICE)பொருத்துவதற்கு மாநகரசபை உறுப்பினர்கள் நேற்றையதினம் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் ஏகோபித்த அனுமதியை வழங்கியுள்ளனர்.

இந்தக் கருவியைப் பொருத்துவதன் மூலமாக வாகனங்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்ட ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் இதனால் எரிபொருள் வீண் விரயமாவதைத் தவிர்க்க முடியுமெனவும், வாகனங்களை அவசிய தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியுமெனவும் தெரிவித்தார்.

**இந்தக் கருவியைப் பொருத்துவதன் மூலமாக வாகனங்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும்.**

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

இந்தக் கருவியின் மூலமாக வாகனங்கள் பயன்படுத்தப்பட்ட விவரங்கள், நிறுத்தப்பட்ட இடங்களின் விவரங்கள் போன்றவற்றை ஒரு வருடத்தின் பின்னர் கூடத் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். வாகனங்களைத் தவறான முறையில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். ஒரு வாகனத்தில் குறிப்பிட்ட கருவியைப் பொருத்த 1,300 ரூபா மட்டுமே செலவாகின்றது. அனைத்து வாகனங்களுக்கும் இக் கருவியைப் பொருத்துவதால் நல்ல பயனைப் பெற முடியும். முதற்கட்டமாக ஐந்து வாகனங்களுக்கு இதனைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச திணைக் களங்களைப் பொறுத்த வரையில் இலங்கையில் முதற் தடவையாக யாழ்.மாநகர சபையே இக் கருவியைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளது-என்றார்.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (க-7-14)

# நகுலேஸ்வரத்தில் இன்று தேர்த்திருவிழா


சரித்திரப் பிரசித்தி பெற்றதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய தேர்திருவிழா இந்துக்களின் புனித சிவராத்திரி விரத தினமான இன்று நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு நகுலேஸ்வரப் பெருமான் தேரில் ஆரோகணித்து திருவீதி வலம் வருவார். பிற்பகல் 3 மணிக்கு பச்சைசாத்தப்பட்டு தேரிலிருந்து பெருமான் அவரோகணித்து ஆலயம் சேர்வார்.

மகா சிவராத்திரியை முன்னிட்டு இரவு நான்கு சாமமும் விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெறும். பின்னிரவு ஒரு மணிக்கு இடபத்தில் பெருமான் வெளிவீதியுலா வருதலும் நிகழும்.

நாளை வெள்ளிக்கிழமை விடிகாலையில் கண்டகி தீர்த்தத்தில் பெருமான் தீர்த்த மாடுவார். இரவு கொடியிறக்கம் நடைபெறும். (ஒ)

(சிறப்பிதழ் 12,13 ஆம் பக்கங்களில்)



வீசியெறியப்பட்டுள்ள வெற்று பியர் ரின்கள்

# மதுப்பிரியர்களின் அடாவடி

## ஆலய வளாகத்தில்

யாழ்ப்பாணம், பெப். 27

நல்லூர் முருகன் ஆலயத்துக்கு பின்புறமாகவுள்ள பிள்ளையார் ஆலயத்தின் தெற்குப் பக்கமாக இரவு வேளைகளில் ஒன்று கூடும் இளைஞர் கும்பல் அவ்விடத்தில் மது அருந்திவிட்டு அங்கேயே வெற்று ரின்களை வீசி வருவதாகவும் பலராலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆலயத்துக்கு மாலை வேளைகளில் செல்லும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்த பின்னர் அவ்விடத்தில் அமர்ந்து நண்பர்களோடு உரையாடுவதையும் அவதானித்த விசமத்தனமான செயல்களில் ஈடுபடும் கும்பல்கள் அவ்விடத்தில் பக்தர்கள் போல் அமர்ந்திருந்து பியரை அருந்தி விட்டு வெற்று ரின்களை ஆலயச் சுவர்ஓரமாக போட்டுவிட்டு போதை தலைக்கேற அட்டகாசம் புரிந்தவாறு செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை அண்மையில் போதை தலைக்கேறிய இந்தக் கும்பல் கூட்டம் சுண்டல் விற்கும் வண்டி ஒன்றின் நான்கு பக்கக் கண்ணாடிகளையும் உடைத்ததோடு மட்டுமல்லாது வேறிடங்களில் நின்ற ஏனைய இரு வண்டில்களின் கண்ணாடிகளையும் உடைத்துச் சேதப்படுத்தியதனையும் அவதானிக்க முடிந்தது.

எனவே, இவ்விடத்தில் நீதியை நிலை நாட்டும் அமைப்புக்கள் உரிய கவனம் எடுத்து அந்தக் குடும்பலின் அட்டகாசத்தை அடக்க வேண்டும் என்று பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-288)

# பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கு பெயர்ப் பலகை

வலி.தென்மேற்கு, பெப்.27

வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தை மக்கள் இலகுவாக அடையாளம் காண்பதற்கு வசதியாகப் பெயர்ப் பலகை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மானிப்பாய் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் சுமார் 4 கோடி ரூபா செலவில் நவீனமான முறையில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

தலைமை அலுவலகத்துக்குப் பெயர்ப் பலகை அமைக்கப்படாமையால் அங்கு வரும் மக்கள் அதனை அடையாளம் காண்பதில் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

இந்த நிலை குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பதில் தவிசாளர் கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்து, பெயர்ப் பலகை அமைப்பதற்குச் சபை அனுமதி வழங்கியுள்ளது. (வ-115)

# வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்ட ச.ச.நிலையம் மீது அராஜகம்

**கழிவு ஒயில் வீசி விஷமிகள் கைவரிசை**

வலி.தென்மேற்கு, பெப். 27

இதுவரை காலமும் அரசியலுடன் தொடர்புடையவர்களை வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் அவர்களின் வீடுகளுக்குக் கழிவு ஒயில் ஊற்றும் வழக்கம் குடாநாட்டில் இடம்பெற்று வந்தது. தற்பொழுது இந்த நிலை மாறி மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி அறிவுப் பசியைத் தீர்க்கும் சனசமூக நிலையம் மீது கழிவு ஒயில் ஊற்றும் கலா சாரம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கீழ்த்தரமான வேலையில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த முன்வருமாறு பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

சுதுமலை வடக்கிலுள்ள நாமகள் சனசமூக நிலையம் தான் கழிவு ஒயில் அபிஷேகத்துக்கு இலக்கானது.

மேற்படி சனசமூக நிலையம் சில இளைஞர்களின் முயற்சியினால் கடந்த சில மாதங்களுக்கு முன் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட குரோதம் உச்சக் கட்டத்தை அடைந்ததைத் தொடர்ந்து இரவு நேரம் பூட்டப்பட்டிருந்த சனசமூக நிலையம் இனம் தெரியாதவர்களின் கழிவு ஒயில் வீச்சுக்கு இலக்கானது. (ஒ-115)

# விபத்தில் இருவர் காயம்

வலி.வடக்கு, பெப்.27

சுன்னாகத்தில் நேற்றுப் பகல் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதில் இருவரும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் ஜெற் மோட்டோஸ் ஒழுங்கையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் பிரதான வீதியில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த ஞானகரன் லக்ஷன் (வயது -33) மற்றும் ஏழாலையைச் சேர்ந்த எஸ்.பார்த்தீபன் (வயது -30) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (வ-86)

# மாநகர சபைக் கட்டடத்தை அமைப்பது குறித்து சிந்தியுங்கள்

**சபை எதிரணி உறுப்பினர் முதல்வருக்குத் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், பெப்.27

பெரியார்களுக்கான சிலை அமைப்பது குறித்து சிந்திக்கலாம். அதற்கு முன்பாக மாநகர சபைக்கான கட்டடத்தை முதலில் அமைத்து முடிக்க நடவடிக்கை எடுங்கள் என்று யாழ். மாநகர சபை எதிரணி உறுப்பினர் இ.இராஜதேவன் குறிப்பிட்டார். யாழ்.மாநகர சபையின் பேரவரி மாதாந்தக் கூட்டம் உறுப்பினர்கள் கூட்டம் நேற்று புதன்கிழமை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் கல்வியங்காடு பகுதியில் தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனின் சிலையை அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக முதல்வர் அறிவித்தார். அது தொடர்பாக உறுப்பினர்கள் தமது ஒருமித்த ஆதரவை வழங்கியதை அடுத்து ஆளும் கட்சி உறுப்பினரும் சுகாதாரக் குழுத் தலைவருமான எம்.மங்களநேசன் மறைந்த மாநகரசபை முதல்வர்களான அல்பிரட் துரையப்பா, திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன், ரவிராஜ் மற்றும் உறுப்பினர்களான சிவபாலன், சுபத்திரன், பசீர். யேசுதாசன் போன்றவர்களுக்கும் அவர்கள் மக்களுக்கு ஆற் றிய பணியை நினைவு கூரும் வகையில் உருவச் சிலைகளை அமைக்க முன்வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் இராஜதேவன் எல்லோருக்குமே சிலை அமைப்பதென்றால் மாநகர சபை முழுவதும் சிலைகள் மயமாகிவிடும். அது அவசியமில்லை. முதலில் நீண்ட காலத்தின் முன் அழிக்கப்பட்ட மாநகரசபைக் கட்டடத்துக்குப் பதிலாக புதிய கட்டடத்தை அமைப்பது தொடர்பாக நடவடிக்கைளை முன்னெடுங்கள்" என்று குறிப்பிட்டார்.

இதேவேளை வண.தாவீது அடிகளாருக்குச் சிலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சபை ஏற்றுக் கொண்டது. (வ-7)

# செயல் திறனற்றவர் நரேந்திர மோடி

## குர்ஷித் விமர்சனம்

புதுடில்லி, பெப்.27
பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி செயல் திறனற்றவர் என்று விமர்சித்துள்ளார் சல்மான் குர்ஷித்.

உத்தரபிரதேச மாநிலம் பரூக்காபாத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"2002-ம் ஆண்டு குஜராத் கலவரத்தை அடக்க மோடி தவறிவிட்டார். கலவரத்தின் போது தாக்குதலுக்குள்ளான மக்களைக் காக்கத் தவறியவர் தான்மோடி அவர்பலவீனமானவர். அப்பாவி மக்களைக் கொன்றவர்களை மோடியால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதால் அவர் செயல்திறன் அற்றவர்தான்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை குர்ஷித்தின் கருத்துக்குக் கடும் கண்டனம்வெளியிட்டுள்ளது பா.ஜ.க. குர்ஷித் இரண்டாம் தர வார்த்தைகளைப் பயன்படுத்தி விமர்சித்துள்ளார். அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. சல்மான் குர்ஷித் தனது கருத்துகளுக்காக உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது பா.ஜ.க. குர்ஷித்தின் கருத்துக்கு பல்வேறு அரசியல் தலைவர்களும் தமது எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளனர். (ற)

# நீர்மூழ்கிக் கப்பலில் தீ

## இந்தியக் கடற்படையினர் ஐவர் காயம்



ஐ.என்.எஸ். சிந்துரத்னா

ஹைதராபாத், பெப்.27
மும்பைக் கடற்பகுதியில் தரித்து நின்ற இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதில் 5 கடற்படையினர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

ஐ.என்.எஸ். சிந்துரத்னா என்ற அந்த நீர்மூழ்கிக் கப்பலில் நேற்று அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் கடற்படையினர் 5 பேருக்கு சிறிய அளவில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. காயமடைந்தவர்கள் ஹெலிகொப்டரின் உதவியுடன் மீட்கப்பட்டு மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்தால் நீர்மூழ்கிக் கப்பலுக்குப் பெரியளவில் சேதங்கள் ஏற்படவில்லை என்று இந்திய கடற்படையின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்துக் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்தியக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பல்களில் தீ விபத்து ஏற்படுவது இது 3ஆவது முறையாகும். கடந்த ஆண்டு ஐ.என்.எஸ். சிந்துரக்ஷக் நீர்மூழ்கிக் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் உயிரிழந்திருந்தனர். (ற)

# தண்ணீர் ஆய்வில் இணையும் நாஸா-இஸ்ரோ

வொஷிங்டன், பெப்.27
தண்ணீர்தொடர்பானஆராய்ச்சியில் இந்தியாவின் இஸ்ரோ அமைப்புடன் இணைந்து செயற்படபோவதாக அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

நாஸா மற்றும் இஸ்ரோ அமைப்பு ஆகியவை அடுத்து வரும் ஏழு ஆண்டுகளில் தண்ணீர் மற்றும் அது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட உள்ளன. அதன் முன்னோடியாக செயற்கைகோள்களைத் தயாரிக்க அவை முடிவு செய்துள்ளன. நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையம் இந்த ஆண்டு மூன்று செயற்கைக் கோள்களைத் தயாரிக்க உள்ளது. அவை தண்ணீர் சுழற்சி மற்றும் தண்ணீர் தொடர்பான தேசிய கொள்கை முடிவுகளின் பங்களிப்பாக அமையும் விதத்தில் இருக்கும் எனத் தெரிவித்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்தும் வகையிலான இந்த ஆராய்ச்சி மூலம் கிடைக்கும் புதிய தகவல்களால் தண்ணீர் சுழற்சி மற்றும் நீர் வள மேலாண்மை பற்றிய கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. இத்தகைய ஆராய்ச்சிகள் மூலம் விவசாயத்துறையில் குறுகிய கால வானிலை மற்றும் நீண்ட கால பருவ மாற்றம் பற்றியும், வெள்ளம் மற்றும் மக்களின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய வறட்சி உட்பட பல்வேறு தொடர்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் உதவியாக அமையும் என நாஸா தெரிவித்துள்ளது. (ற)

# தி.மு.க. தனித்தே போட்டியிடும்



தர்மபுரி, பெப்.27
நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதே தொண்டர்களின் விருப்பமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்டாலின்.

தர்மபுரியில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க. தனித்துப் போட்டியிட வேண்டும் என்றே தொண்டர்கள் விரும்புகின்றனர். தற்போதுள்ள தி.மு.க. கூட்டணியே நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணி" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

# நாம் தமிழர் - காங். மோதல்

## போர்க்களமானது சத்தியமூர்த்தி பவன்



நேருக்கு நேர் மோதிக் கொள்ளும் நாம் தமிழர் - காங்கிரஸ் கட்சியினர்

சென்னை, பெப்.27
தமிழக காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனை முற்றுகையிட முயன்ற நாம் தமிழர் கட்சியினருக்கும், காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து அந்த இடம் போர்க்களம் போல் காட்சியளித்தது.

தமிழர்கள் ஏழு பேரின் விடுதலைக்கு தடை போடும் காங்கிரஸ் கட்சியை கண்டித்து நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் அறிவுச்செல்வம் தலைமையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த 200 பேர் நேற்றுக் காலை தமிழக காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது தமிழர்களுக்கு விரோதமாக காங்கிரஸ் கட்சி செயற்படுகின்றது என்று கோஷமிட்ட நாம் தமிழர் கட்சியினர், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரின் உருவப்பொம்மைகளை எரித்தனர். அப்போது அங்கிருந்த காங்கிரஸ் பாதாகை ஒன்றும் தீ வைத்து எரிக்கப்பட்டது.

அதையடுத்து சத்தியமூர்த்தி பவனில் இருந்த தென் சென்னை மாவட்ட தலைவர் கராத்தே தியாகராஜன், மத்திய சென்னை மாவட்டத் தலைவர் ரங்கபாஷ்யம் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம் மற்றும் வீதி மறியலில் ஈடுபட்டனர். அப்போது நாம் தமிழர் கட்சியினரை நோக்கி அவர்கள் கற்களை வீசினர். பதிலுக்கு நாம் தமிழர் கட்சியினரும் தாக்குதல் நடத்தினர். அதையடுத்து அந்த இடம் போர்க்களம் போல் மாறியது. நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த ஒருவரை பிடித்துக் கொண்ட காங்கிரஸ் கட்சியினர் அவர் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். அங்கிருந்த பொலிஸார் அவரை ஒருவாறு மீட்டனர்.

மோதல்களை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாம் தமிழர் கட்சியை சேர்ந்த 200 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் சமூக நல கட்டடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இந்த அமளியால் அந்தப் பகுதியே பெரும் போர்க்களம் போல் காட்சியளித்தது. (ற)

# ஊழலை தடுக்க முடியாது

## - பா.ஜ.க.

புதுடில்லி, பெப்.27
நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் சட்டங்களால் ஊழல்களைத் தடுக்கமுடியாது. அரசியல்வாதிகள் நினைத்தால் மட்டுமே ஊழலைத் தடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவைச் சேர்ந்த ரவி சங்கர் பிரசாத்.

ஊழலுக்கு எதிரான சட்டத் திருத்தங்களை அவசர அவசரமாக இயற்றுவதற்கு இந்திய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு முயற்சித்து வருவது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"காங்கிரஸ் கட்சியின் சட்டங்களால் ஒன்றும் செய்யமுடியாது. முதலில் ஊழல் புரியும் அரசியல்வாதிகளை தமது கட்சியில் இருந்து நீக்குவது குறித்து அந்தக் கட்சி யோசிக்கட்டும்" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)



காஷ்மீரில் குப்ரா மாவட்டத்தில் உள்ள லால்போரா நகரில் பொலிஸாருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்தது. பொலிஸார் மீது கற்கள் கொண்டு கடும் தாக்குதல்களை நடத்தினர் அந்தப் பகுதி மக்கள். அதனால் அந்தப் பகுதி பெரும் போர்க்களமானது. (ற)

# தெலுங்கானா எதிர்ப்பு மனு தள்ளுபடி

சென்னை, பெப்.27
ஆந்திர மாநிலத்தைப் பிரித்துத் தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பி.ஆர். கிருஷ்ணனால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், "ஆந்திர மாநிலம் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கையில் அரசியல் அமைப்பு வழிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை. ஜனாதிபதி சுயமாக முடிவு எடுக்க வேண்டும். அமைச்சரவை அறிவுரையை ஏற்கக்கூடாது. ஆந்திரா மாநிலம் பிரிக்கப்பட்டமை அரசியல் வழிமுறை மீறல். எனவே, ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரித்ததை இரத்துச் செய்ய வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

மனுவை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் குறித்த மனு, விசாரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. (ற)



## கதிர்வீச்சு

அமெரிக்காவின் புதிய மெக்ஸிகோவில் உள்ள முதல் நிலத்தடி அணுக்கழிவுக் கிடங்கை சுற்றியுள்ள பகுதிகளில் அளவுக்கு அதிகமான கதிர்வீச்சு காணப்படுகின்றது என்று அந்நாட்டின் எரிசக்தித்துறை தெரிவித்துள்ளது. "புதிய மெக்ஸிகோவின் கால்ஸ்பேட் அருகிலுள்ள அணுக்கழிவுக் கிடங்கிலும், அதனைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களிலும் உள்ள காற்று மாசு கண்காணிப்பு நிலையங்கள் கடந்த வாரம் சேகரித்த மாதிரிகளில் அளவுக்கு அதிகமாக கதிர் வீச்சு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது" என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, துறைசார் நிபுணர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ற)

# நைஜீரியாவில் வெறியாட்டம்

## தீவிரவாதத் தாக்குதலில் மாணவர்கள் உட்பட 29 பேர் சாவு

புனியாடி, பெப்.27

நைஜீரியாவில் பாடசாலை விடுதி ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் மாணவர்கள் உட்பட 29 பேர் உயிரிழந்துள்ளனர். யோப் மாகாணம் புனி யாடி என்னுமிடத்தில் உள்ள அரச பாடசாலை விடுதி மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதிகாலை 2 மணி அளவில் விடுதியில் மாணவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது உள்ளே நுழைந்த தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த யோப் மாகாண பொலிஸ் தலைமை அதிகாரி சனூஸி ருஃபாய், "துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்கள் அனைவரும் மாணவர்களா என்பதை உடனடியாக உறுதி செய்ய இயலவில்லை" என்று தெரிவித் துள்ளார்.

இந்தத் தாக்குதலை பொக்கோ ஹரம் என்ற தீவிரவாத இயக்கமே நடத்தியுள்ளது என்று நம்பப் படுகின்றது. மேற்கத்திய கல் விக்குத் தடை என்ற கொள்கை யுடன் செயற்படும் இந்த இயக்கத்தினர் நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள பல பாடசாலைகளில் தொடர்ந்து தங்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் குஜ்பா மாகாணத்தின் யோபே நகரில் உள்ள விவசாய பயிற்சிக் கல்லூரியில் நடு இரவில் புகுந்து இந்த அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 40 மாணவர்கள் உயிரிழந்தனர்.

(ற)

# ஒப்பந்தம் இல்லையெனில் அமெரிக்கப் படை விலகும்

## ஆப்கனுக்கு எச்சரிக்கை

நியூயோர்க், பெப்.27

தம்முடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை எனில் ஆப்கனில் உள்ள அமெரிக்கத் துருப்பினர் அனைவரும் திருப்பி அழைக்கப்படுவர் என்று அந்நாட்டுக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளது அமெரிக்கா.

ஆப்கனில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்பினரை அடுத்தாண்டு வரை நீடிக்க வகை செய்யும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்து வருகின்றது ஆப்கன் அரசு. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமெரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளது.

"பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை ஆப்கன் அரசு தொடர்ந்து தட்டிக் கழித்து வருகின்றது. இந்தநிலை தொடருமானால் அந்த நாட்டில் உள்ள அமெரிக்கத் துருப்பினர் அனைவரும் இந்த ஆண்டு இறுதிக்குள் திருப்பி அழைக்கப்படுவர்" என அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஆப்கன் ஜனாதிபதி ஹமித் ஹர்சாயிடம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ற)

# அகதிகள் எண்ணிக்கையில் சிரியாவுக்கு முதலிடம்

நியூயோர்க், பெப்.27

சிரியாவில் உள்நாட்டு போர் தொடரும் நிலையில், உலக அகதிகளின் எண்ணிக்கையில் சிரிய மக்களே முத்லிடம் வகிப்பர் என்று எச்சரித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

ஐ.நா. கூட்டத் தொடரில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அகதிகளுககான ஐ.நா. ஆணையர், "இந்த ஆண்டு இறுதிக்குள் 40 லட்சம் சிரிய மக்கள் அகதிகளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலை தொடருமானால் உலக அகதிகள் எண்ணிக்கையில் சிரிய மக்களே முதலிடம் வகிப்பர்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சிரியாவில் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவநீதம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

(ற)

# வியட்நாம் - அமெரிக்கா இடையே அணுசக்தி ஒப்பந்தத்துக்கு அனுமதி

## பரிந்துரைத்தார் பராக் ஒபாமா

நியூயோர்க், பெப்.27

வியட்நாமுடனான அணு சக்தி ஒப்பந்தத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அனுமதி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்க அணுசக்தி துறையிடமிருந்து வியட்நாமுக்கு அணு உலைகள் விற்பனை செய்யப்படும் என்று கூறப்படுகின்றது.



ஒபாமா

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் வியட்னாம் கையெழுத்திட்டதை அடுத்தே வியட்நாமுக்கு அணு உலை வழங்கப்பட உள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த அணுசக்தி ஒப்பந்தம் கடந்த ஒக்ரோபர் மாதம் புரூணேயடில் நடைபெற்ற கிழக்காசிய நாடுகளின் மாநாட்டின் போது முடிவு செய்யப்பட்டது. ஒப்பந்தம் நிறைவேறும் பட்சத்தில் கிழக்காசிய நாடுகளில் சீனாவுக்கு அடுத்தபடியாக அணுசக்தி நாடாக வியட்நாம் இருக்கும்.

தற்போது எரிசக்தி பற்றாக் குறையால் அணுசக்தியை வியட்நாம் நாடியுள்ளது. முதலாவது அணு உலையின் வர்த்தக ரீதியான செயற்பாடு 2020ஆம் ஆண்டில் ஆரம்பமாகும் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அணுசக்தித் துறைக்கு ஒப்பந்தத்தை பரிந்துரைத்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இரு தரப்பு ஒப்பந்தமும் நல்ல முன் னேற்றத்தை அளிக்கும் என்ற உறுதியான நம்பிக்கையின் பேரில் பரிந்துரை செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

கம்யூனிச நாடான வியட்நாம் இதுவரை ரஷ்யாவோடு அணுசக்தி உடன்பாட்டை கொண்டிருந்தது. (ற)

# அமைதியை நிலைநாட்ட வேண்டும்

கராக்ஸ், பெப்.27

வெனிசுவேலாவில் அரச ஆதரவு மற்றும் எதிர்ப்புப் போராட்டங்கள் தொடரும் நிலையில், நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், "போராட்டம் மற்றும் உயிரிழப்புகளுக்கு காரணமானவர்களை தண்டிக்கும் வகையில் நாடாளுமன்றம் அமைத்துள்ள உண்மைக் குழுவை அனைவரும் ஆதரிக்க வேண்டும்"என்றும் கோரியுள்ளார்.

அதேவேளை, வெனிசுவேலா தூதரக அதிகாரிகள் மூன்று பேரை நாட்டை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. வெனிசுவேலாவில் சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பித்த அரச எதிர்ப்புப் போராட்டங்களுக்கு அமெரிக்காவே காரணம் எனக் குற்றம்சாட்டி வரும் வெனிசுவேலா அரசு, அமெரிக்க அதிகாரிகள் சிலர் போராட்டக்காரர்களை சந்தித்ததாகக் கூறி அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றியமையே அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்குக்காரணம் என்று கூறப்படுகின்றது. (ற)

# கர்ப்ப காலத்தில் மது அருந்தல் தண்டனைக்குரிய குற்றம்

## பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், பெப்.27

கர்ப்ப காலத்தில் பெண்கள் மது அருந்துவது தண்டனைக்குரிய குற்றம் என்று அறிவித்துள்ளது பிரிட்டன் நீதிமன்றம்.

பிரிட்டனில் பெரும்பாலான பெண்கள் மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள். அவர்கள் அந்தப் பழக்கத்தை கர்ப்ப காலத்திலும் தொடர்வது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது. கடந்த மூன்று வருடங்களில்பிறந்த குழந்தைகளில் மட்டும் தாயின் மதுப் பழக்கத்தினால், 50 சதவீத குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறந்ததாக தெரியவந்துள்ளது. தற்போது பிறக்கும் குழந்தைகளில் நூற்றில் ஒன்று, மதுவின் பாதிப்பினால் குறை பாடுடன் பிறப்பதாக அரசு சுகா தாரப் பிரிவின் புள்ளிவிவரங் கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் பெண் ஒருவர் கர்ப்பமாக இருந்த போது அளவுக்கு அதிகமாக மது அருந்தியதால் அவரது 6 வயது பெண் மூளைக்கோளாறுடன் பிறந்ததுடன், அது விவகாரத்தில் தொடரப்பட்ட வழக்கு மேல்முறையீட்டிற்காக நீதிமன்றத்திற்கு வந்தது. இந்தச் சம்பவத்திற்கு பின்னரே இதுபோன்ற செயற்பாடுகள் குற்றம் என கருதப்பட்டு சட்டங் கள் வலுவாக்கப்பட்டன.

இதுகுறித்து மனநல மருத்துவ ஆலோசகர் ராஜா முகர்ஜி கூறுகையில், "கர்ப்பகாலத்தில் மது அருந்துவதை முற்றிலுமாக தவிர்ப்பதே சிசுவைப் பாதுகாக்க சிறந்த வழியாகும்" எனத் தெரிவித்துள்ளார். (ற)

11 ஆவது பிறந்த தின
வாழ்த்துக்களும் பாராட்டுகளும்



Happy Birthday
Congratulations
Best Wishes

செல்வன் ர. மகீபன்
(யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)
இன்றைய தினம் (27.02.2014)
தனது பிறந்த தினத்தினை
கொண்டாடும் செல்வன் ர.மகீபன்
புலமைப் பரிசில் பரீட்சையில்
162 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமையிட்டு பாராட்டுவதுடன்
பிறந்ததின வாழ்த்துக்களையும் தெரிவித்து
தொடர்ந்து கல்வியில் சிறப்புடன்
உயர்ச்சியடைய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
தாத்தா, அப்பம்மா,
தயா சித்தப்பா குடும்பம்,
ஜெயா சித்தப்பா, அத்தைமார்.
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

After A/L
மருந்தாளர் பாடநெறி (வெளிவாரி)
Pharmacy Course (External)
(Group Classes)

* க.பொ.த (உ/த) கணித/விஞ்ஞான பாடத்தில் சித்தி
* அரச வைத்திய வித்தியாலயத்தினால் (Ceylon Medical College Council) நடத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்காக விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டது.
* முழுமையான செயன்முறை பயிற்சிகளை உள்ளடக்கியது.
* பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களுக்கு பகுதி நேர நிரந்தர தொழில் வாய்ப்பைத் தரக்கூடியது.

பதிவு செய்யப்பட்ட அனுபவம் வாய்ந்த தகுதியான மருந்தாளர்களினால் நடத்தப்படுகின்றது.

உடனடி வேலைவாய்ப்பு நிச்சயம்

ஆரம்பம்:
02.03.2014
ஞாயிறு 1.00p.m

இடம்:
70, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும்
076 668 8287
(45118) (7.6)

DIEU ET MON DROIT

# அறிவித்தல்

## பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம்

இலங்கையில் வாழும் அல்லது விஜயம் செய்யும் பிரித்தானிய நாட்டவர்களுக்காகக் கொழும்பிலுள்ள, பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் ஒரு தூதரக ஆலோசனைச் சேவையை 2014, மார்ச் முதலாம் திகதி முற்பகல் 10.00 மணியிலிருந்து பிற்பகல் 12.30 வரை பிட்ஸ் காட்சிகூடம் (Fits Pavilion), இல. 40, கண்டி வீதி (A9), யாழ்ப்பாணம், சுண்டுக்குழி எனும் முகவரியில் நடத்தவுள்ளது.

தூதரகக் குழுவொன்று உங்களது கேள்விகளுக்கான பதில்களை அளிக்குமென்பதுடன் பின்வருபவை தொடர்பாக உங்களுக்கு ஆலோசனை அளிக்கும்:

★ தூதரக ஊழியர்களின் வகிபாகம்
★ வெளிநாடுகளிலுள்ள பிரித்தானிய நாட்டவர்களுக்கு உதவுவதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் மற்றும் முடியாது
★ நெருக்கடியான நிலைமைகளின் போது எங்களின் வகிபாகம்

குறிப்பு: நுழைவிசைவுடன் (வீசா) தொடர்புபட்ட விசாரணைகளைத் தூதரகக் குழு கையாளமாட்டாது என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு
www.gov.uk/government/ world/sri-lanka
எனும் முகவரியில் உள்ள எங்களது இணையத்தளத்திற்கு செல்லவும்.
(C/12246)(2.6)

# சிவராத்திரி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.27

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சிவராத்திரி விழா இன்று வியாழன் மாலை 6 மணிக்கு உடுவில் பிரதேச நரசிங்க வைரவர் ஆலய மண்டபத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்றைய சிவராத்திரி விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக இணுவில் இளந்தொண்டர் சபையினரின் 'பக்த நந்தனார்' நாடகம், பட்டிமன்றம், மற்றும் அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

♦ ♦ ♦

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை இந்து மாமன்றம் நடத்தும் சிவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கோமாதா அற நெறிப் பாடசாலை அதிபர் சு.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் கோகுலம் அறநெறிப் பாடசாலை மற்றும் கோமாதா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பாட்டு, நடனம், நாடகம் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். (ஒ)

♦ ♦ ♦

பண்ணாகம் பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் தற்காப்புக் கலைப் பயிற்சி மாணவர்களினால் நடத்தப்படும் மகா சிவராத்திரி விழா இன்று வியாழன் மாலை 6 மணிக்கு தற்காப்புக் கலைப் பயிற்சி மாணவன் மு.பாபுஜி தலைமையில் பண்ணாகம் அம்பாள் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது தற்காப்பு கலைப் பயிற்சி பிரதம பயிற்றுவிப்பாளர் சென்சி பெனடிற் றேமன் அவர்களினால் தற்காப்பு கலைப் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கலும், அ.முருகதாசன் தலைமையில் சிறப்பு பட்டிமன்றமும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-28)

♦♦♦

மகா சிவராத்திரி தினமான இன்று, கொக்குவில் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையமான சாயி மந்திரில் மாலை 6 மணி முதல் நாளை காலை 6 மணிவரை பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

♦♦♦

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்தில் இன்று வியாழன் இரவு 7 மணிக்கு சிவராத்திரி விழா இடம்பெறவுள்ளது. இதன்போது சிவலிங்கப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகங்களுடன் நான்கு சாமப் பூசைகளும் இடம்பெறும்.

இதன்போது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும், 2013 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (ஒ-9)

♦ ♦ ♦

காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயிலில் சிவராத்திரி விழா நிகழ்வில் காரைநகர் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் நிகழ்வுகளும், பரிசளிப்பு வைபவமும் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் சு.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும்.

♦ ♦ ♦

குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய பரிபாலன சபையும் அற நெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் சிவராத்திரி விழாவில் நடைபெறவுள்ள சமய மற்றும் கலை நிகழ்வுகள் ஆலயப் பரிபாலன சபையின் செயலாளர் பொன்.சந்திரவேல் தலைமையில் நடைபெறும். (ஒ-29)

♦ ♦ ♦

கீரிமலை சிவபூமி மடத்தில் சிவராத்திரி நிகழ்ச்சியாக இணுவில் இளம் தொண்டர் சபை வழங்கும் 'வள்ளி திருமணம்' இசை நாடகமும் காத்தவராயன் கூத்தும் மற்றும் ஆன்மிக சுடர் தொண்டுநாதன் சுவாமிகளின் ஆன்மிக சொற்பொழி வும் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும். .(ஒ)

## சமய சந்நிதி

துன்னாலை கோயிற்கடவை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

சப்பரத்திருவிழா நாளை வெள்ளிக் கிழமை அதிகாலை 3 மணிக்கும், தேர்த்திருவிழா அன்றைய தினம் மாலை 2மணிக்கும், தீர்த்தத் திருவிழா எதிர் வரும் முதலாம் திகதி சனிக் கிழமை நண்பகல் 12 மணிக்கும் நடைபெறவுள்ளன.

பெருந்திருவிழாவை சைவப் புலவர், சைவசித் தாந்த பண்டிதர் சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச் சாரியார் பிரதமகுருவாக இருந்து நடத்தி வருவ துடன், திருவிழாக் காலங்களில் "விநாயகர் புராணம்" என்னும்தலைப்பில் தொடர் சொற்பொழி வும் நிகழ்த்தி வருகின்றார். (வ-173)

மணமகள் தேவை

* பிறப்பு - 1980 இந்து புலோலி
* நட்சத்திரம் - பூராடம் 3ஆம்பாதம்
* கிரகபாவம் - 47/2செவ்வாய்
* உயரம் - 5' 7''
* தகைமை - B.A.,LLB - மாணவன் திறந்தபல்கலைக் கழகம்.
* தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்

எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் அல்லது பட்டதாரி, சட்டத்தரணி

தொ.பே. 021 226 3246
E- Mail - Kdayalini@Gmail
(சி.12307) (45.6)

காணி விற்பனைக்கு

மீசாலை கேணியடி வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-0771 365 981
(29775)(6.2)

வீடு வாடகைக்கு தேவை

காங்கேசன்துறை வீதிக்கு அண்மித்ததாக யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்திக்கும், தெல்லிப்பழைச் சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.தொடர்பு:-0777 784 314
(45151)(6.2)

வீடுவளவு விற்பனைக்கு

சாவகச்சேரி வீதி, அல்லாரை தெற்கு, கொடிகாமத்தில் 6 பரப்பு 3 குழியுடன் கூடிய காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 285 5860
(29762)(7.6.3)



'சுடர்ஒளி'
இந்த வார
இதழில்...

சீரடி சாயி பாபாவின்
அற்புதங்கள்
நிறைந்த
பரவசமூட்டும்
புதிய
ஆன்மீகத் தொடர்

'சாயியே சரணம்'

- வீழ்ந்ததால் எழுந்தவர்கள்
- ஆண்களை அலைய வைத்தல்
- இருளின் கதவைத் திறந்தவன் (தொடர்)
- ஈழத்துக் குறும்படங்கள்;
  அற்றுப்போகின்றதா அறம்?



கருவை
விற்கும்
பெண்கள்
திடுக்கிட வைக்கும்
உண்மைகள்

வெளிவந்துவிட்டது
(சி/12304)



இறுதி நாள் நிகழ்வின் போது மக்கள் சந்திப்பு

## அபிவிருத்தித் திட்டங்களுக்கான தரவு சேகரிக்கும் பணி நிறைவு

மன்னார்.பெப்.27
உள்ளூராட்சி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய மன்னார் மாவட்டத்தில் கிராமிய மட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் பங்கேற்பு ரீதியான அபிவிருத்தித் திட்டங்களுக்கான தரவுகள் சேகரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை முடிவுறுத்தப்பட்டதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இ.குமரேஸ் தெரிவித்தார்.
கடந்த 18ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தரவு சேகரிக்கும் பணி ஒரு வார காலத்தில் முடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரி வித்தார்.
மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட 15 கிராம அலுவலகர் பிரிவுகளை 03 பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு பிரிவுகளுக்கும் நகரசபை உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-56)

# கரும்புத் தோட்டக் காணியை கோருகிறது பலாலி இராணுவம்

*பொறியியல் பிரிவை அமைப்பதற்குத் தேவையாம்*

கிளிநொச்சி.பெப்.27
கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் அமைந்துள்ள கரும்புத் தோட்டக் காணியை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென தெரிவித்து இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்ட காணி அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.
அந்த கடிதத்தில் யாழ்ப்பாணம் பலாலியில் உள்ள இராணுவ பொறியியல் பிரி வுக்கு காணி தேவையெ னவும், இதற்கென கரும்புத் தோட்டம் அமைந்துள்ள 200 ஏக்கர் காணியை தம்மிடம் வழங்குமாறும் இராணுவத்தினர் கோரியுள்ளனர்.
ஆறு மாதங்களுக்கு முன்னர் கரும்புத்தோட்டப் பகுதிக்குவருகை தந்த சிரேஷ்ட அமைச்சர் லக்ஷ்மன் செனவிரட்ன, கரும்புத் தோட்டக் காணியை இராணுவத்தினரிடம் இருந்து பெற்று அதில் கரும்புச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்தார்.
இப்போதும் அந்தக் காணி இராணுவத்தின் கட்டுப்பாட்டிலே அமைந்துள்ள நிலையில் அதனை நிரந்தரமாகப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**❝சிரேஷ்ட அமைச்சர் லக்ஷ்மன் செனவிரட்ன, கரும்புத் தோட்டக் காணியை இராணுவத்தினரிடம் இருந்து பெற்று அதில் கரும்புச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்தார்.**

கரும்புச் செய்கையை ஊக்குவித்து அங்கு சீனித் தொழிற்சாலை ஒன்றை நிறுவி மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது குறித்து ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட நிலையில் கரும்புத் தோட்டக் காணியை இராணுவத்தினர் கையகப்படுத்த முற்படுவது குறித்து அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.
அத்துடன் இந்த விடயத்தில் வட மாகாண சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்மெனவும் மக்கள் கோரியுள்ளனர். (ஐ-18)



*கிளிநொச்சி நகரில் மாற்று வலுவுடையோர் சிரமமின்றி சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சேவை மையங்களில் விசேட நுழைவாயில் அமைக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கிளிநொச்சி செலான் வங்கியில் மாற்று வலுவுடையோருக்கான நுழைவாயிலை கரைச்சி கிழக்குப் பிரதேச மாற்று வலுவுடையோருக்கான இணைப்பாளர் எஸ்.பொன்கலன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. (ஐ-18)*

## பாடசாலைக்கு அடிக்கல்

மன்னார்.பெப்.27
மன்னார் மடு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள ஈச்சளவக்கை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஜப்பானிய தூதரகத்தின் அனுசரணையில் பிளான் ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் அமைக்கப் படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண கல்வி விளையாட்டு கலாசார அமைச்சர் த.குருகுலராஜா, ஜப்பானிய தூதரகத்தின் துணைச் செயலாளர், பிளான் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி, மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர். (ஐ-56)

## மாணவரை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

*வவுனியாவில் பாடசாலைக்கு அருகில்*

*வவுனியா இலங்கை திருச்சபை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் விற்கப்படுவதால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.*
*பாடசாலைக்கு அருகில் கடையொன்றில் போதைப் பொருள் கலக்கப்பட்ட வெற்றிலை பாக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இதனை மாணவர்கள் சிலர் திருட்டுத்தனமாக வாங்கி உட்கொள்வதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது.*
*இது குறித்து கவலை வெளியிட்டுள்ள பெற்றோர்கள் மாணவர்களது நன்மை கருதி இவ்வாறான போதைப்பொருள் விற்பனை செய்வதை சம்பந்தப் பட்டோர் தடை செய்ய நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-402)*

## மன்னாரில் சமுர்த்தித் திட்டம் சிறப்பாக இயங்குவதாக தகவல்

மன்னார், பெப்.27
மன்னார் மாவட்டத்தில் சமுர்த்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 20 மாதங்களே கடந்துள்ள நிலையில் அதன் வேலைத்திட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதாக சமுர்த்திப் பயனாளிகளும் சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர்.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவினால் 1996 இல் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தித் திட்டம் வடக்கில் இடம்பெற்ற போர் காரணமாக வடபகுதியில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2012 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டபோதும் அதற்கென சமுர்த்தி அதிகாரிகளோ முகாமையாளர்களோ நியமிக்கப்படாமல் கிராம சேவையாளர் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டது.
இதன்படி மன்னார் மாவட்டத்தில் 14 ஆயிரம் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.
மன்னாரில் முதலாவது சமுர்த்திக் கொடுப்பனவு கடந்த வருடம் நவம்பர் மாதம் வழங்கப்பட்டது.
மன்னாரிலுள்ள ஐந்து பிரதேச செயலகங்களிலும் சமுர்த்தி வங்கிகள், மற்றும் சமுர்த்தி மஹா சங்கம் என்பன அமைக்கப்பட்டு இப்போது வேலைகள் முழுமையாக நடைபெற்று வருகின்றன. அத்துடன் சமுர்த்தி ஊழியர்களும் வங்கி முகாமையாளர்களும் நியமிக்கப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன எனவும் பயனாளிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-56)

## அறுவடை இயந்திரத்தினுள் சீனியை போட்ட விசமிகள்

நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தினுள் விசமிகள் சீனியை போட்டதால் அந்த இயந்திரம் பழுதடைந்தது. இந்த சம்பவம் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பண்டாரவன்னி கிராமத்தில் நடைபெற்றுள்ளது.
அறுவடையில் ஈடுபட்டு விட்டு இயந்திரத்தை அன்றிரவு உரிமையாளர் வீட்டில் நிறுத்தி வைத்திருந்தவேளை விசமிகள் இயந்திரத்தினுள் சீனியை போட்டுச் சென்றுள்ளனர்.
மறுநாள் இயந்திரம் பழுதடைந்தது. அதனை சீர் செய்தபோது உண்மைதெரியவந்தது (ஐ-500)

# கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 4 வருட அபிவிருத்தித் திட்டங்கள்

*முதற்கட்டமாக கிராமங்கள் தோறும் தரவு சேகரிப்பு*

முல்லைத்தீவு.பெப்.27
முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒருங்கிணைந்த மக்கள் பங்களிப்புடனான நான்கு வருட அபிவிருத்தித் திட்டங் களை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் எஸ். ரவீந்திரநாதன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 55 கிராமங்களில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து மக்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் முதற்கட்டமாக தரவு சேகரிக்கப்படவுள்ளது.
குறிப்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 46 கிராமங்களிலும், வெலிஓயா பிரதேச செயலகத்திற்குட்பட்ட 9 கிராமங்களிலும் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்தத் தரவு சேகரிக்கும் நடவடிக்கைக்கு கிராமந்தோறும் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும். இதில் அந்தந்த கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்வர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-400)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் இழப்பீட்டுக் கொடுப்பனவு

முல்லைத்தீவு, பெப்.27
முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், இந்து கிறிஸ்தவ ஆலயங்களுக்குமான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் 280 குடும்பங்களுக்கும், இந்து கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் இழப்பீட்டு நிதி வழங்கப்பட்டது. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீர மைப்பு பிரதி அமைச்சர் கொடுப்பனவுகளை வழங்கினார்.
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் போர் காரணமாக உயிரிழப்புக்களைச் சந்தித்த 48 குடும்பங்கள், அங்க அவயவங்களை இழந்த, காயப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட 48 குடும்பங்கள், சொத்தழிவை எதிர்கொண்ட 184 குடும்பங்கள் என 280 குடும்பங்களுக்குப் போர் இழப்பீட்டுத் தொகையாக 25 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம், துணுக்காய், வெலிஓயா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இந்தத் தொகை வழங்கப்பட்டது.
இதேவேளை முல்லைத்தீவு செல்வபுரம் தேவலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஐந்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நட்டஈடு வழங்கப்பட்டது.
முல்லைத்தீவு, முள்ளியவளை கல்யாண வேல்முருகன் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டத்தின் இந்து ஆலயங்கள் ஐந்துக்கு தலா ஒரு லட்சம் வீதம் நட்டஈடு வழங்கப்பட்டது.



*பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு பிரதி அமைச்சர் இழப்பீடு வழங்குகிறார்.*

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் விதானகே, புனர்வாழ்வு அதிகார சபையைச் சேர்ந்த ப.சமரசிங்கா, புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர் சதீஸ்குமார், துணுக்காய் பிரதேச செயலர் சி. குனபாலன், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தி. தினேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-435)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சுதந்திரமான காத்திரமான விசாரணைக்கு அரசு வழி அமைப்பது எப்போது...?

இலங்கை அரசு, அந்நாட்டின் சகல பிரசைகளுக்கும், சகல உரிமைகளும் நீதி, நியாயம், உத்தரவாதம் என்பன சார்ந்து சமமாகக் கிடைக்க வகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, எங்கள் நாடு குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளார்.

அனைத்துலக மனித உரிமைகளை மீறியமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறியமை தொடர்பாக, சுதந்திரமானதும் நேர்மையுமான விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டதாகவும், ஆணையாளர் நேற்று முன்தினம் (25.02.2014 இல்) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அவரது அந்த அறிக்கை, தமிழ்ப் பிரதேசங்களின் மனித உரிமை மீறல்களை மட்டுமன்றி, நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நடந்தேறிய மீறல் சம்பவங்களையும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.

கொழும்பின் சிறிய புறநகர்ப் பகுதியான வெலிவேரியாவில், குடிதண்ணீர் மாசு அடைவது தொடர்பான தமது கோரிக்கையை வலியுறுத்துவதற்கு நிராயுதபாணிகளாகத் திரண்ட மக்கள் மீது, இராணுவம் தாக்குதல் நடத்தியமை குறித்து விசாரணை நடத்தப்பட்டபோதிலும், அது குறித்த அறிக்கை பகிரங்கப்படுத்தப் படவில்லை என்றும் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் சுட்டிக்காட்டி உள்ளார்.

அதேபோன்று, வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருபத்தேழு பேர் கொல்லப்பட்டதோடு 43 பேர் காயங்களுக்கு உள்ளானமை குறித்தும், வவுனியா சிறைச்சாலையில் படையினர் மேற்கொண்ட (தாக்குதல்) நடவடிக்கையின் போது கைதிகள் உயிரிழந்தமை குறித்தும் விசாரணைகள் நடைபெறுவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும், இதுவரை அது தொடர்பான அறிக்கை வெளியிடப்படவில்லை என்றும்-

இவை யாவற்றுக்கும் மேலதிகமாக, அரசாங்கம் தானே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் 285 பரிந்துரைகளில் 145 மட்டுமே ஆளும் தரப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டன- என்றும் மனித உரிமைகள் ஆணையாளரால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தமிழ் மக்களின் மிக முக்கிய விவகாரமாக உருவெடுத்துள்ள, அவர்களின் நிலத்தைப் பறிக்கும் மனித உரிமை மீறலுக்கு அரசு செவிசாய்ப்பதாக இல்லை என்பதும் அவரின் அறிக்கையில் காத்திரமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கைக்கு பயணம் செய்திருந்த வேளை மக்களின் காணிகளில் படையினரின் பிரசன்னத்தை இல்லாது ஒழிப்பதற்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்று, அவர் தெரிவித்த கருத்துக் குறித்தும் கவனம் செலுத்தப்படவில்லை!

அது மட்டுமன்றி, மாத்தளை மற்றும் மன்னார் பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட, கண்டுபிடிக்கப்பட்டு வரும் புதைகுழிகள் குறித்த விசாரணைகளை அனைத்துலக நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளலாம் என்றும், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் இலங்கை அரசுக்கு வழி சொல்லிக் கொடுத்துள்ளார்.

மேலும், நாட்டின் இரண்டு சிறுபான்மை இன மக்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது குறித்தும், மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டி உள்ளார்.

மக்களின் ஜனநாயக உரிமைகளின் முக்கியமான அங்கங்களின் பாதுகாவலர்களாக விளங்கும் ஊடகவியலாளர்கள், சட்டவாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், அரசின் அங்கங்களாகச் செயற்படுவோரால் துன்புறுத்தப்படுவது குறித்தும், இந்த நாட்டு அரசால் வேண்டிய, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பதனையும்-

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர், கனதியாகவும் காட்டமாகவும் தமது அறிக்கையில் எடுத்துக் கூறியுள்ளார்.

அரசின் மிகப் பெரிய கால இடையீட்டில் துணை இராணுவப் பிரிவினர் இன்னும் தடை செய்யப்படாதிருப்பது, அவர்களில் இருவர் அரசில் அமைச்சர்களாக அங்கம் வகிப்பது குறித்தும், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் காட்டமாக எடுத்துரைத்துள்ளார்.

இவற்றின் அடிப்படையிலும், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் இலங்கையில் தோல்வி அடைந்த நிலையிலுமே-

சுதந்திரமான, காத்திரமான அனைத்துலக விசாரணை வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இடித்து உரைத்துள்ளார்.

அனைத்துலக சமூகமும், மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகளும் இது குறித்து கருத்தைச் செலுத்திச் செயற்பட முனைவதற்கு, இதுவே தக்க வேளையாகும்.

# இந்தியாவின் திருகுதாளம்

## ஈழத் தமிழருக்கு இனிமேலும் நன்மை கிடையாது


சேரலாதன்

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்திய மத்திய அரசின் மீதான நம்பிக்கைகள் யாவும் தகர்ந்து தவிடுபொடியாகி விட்டன என்றுதான் கூற வேண்டும். மறைந்த முன்னார் பிரதமர் ராஜீவ்காந்தியின் ஆட்சிக் காலத்திலிருந்து முள்ளிவாய்க்கால் வரை இந்தியாவின் துரோகத் தனத்தால் பரிசாக வழங்கப்பட்ட இன்னல்கள் எண்ணிலடங்காதவை. ஆனால் பயங்கரவாதிகளை ஒடுக்குவதில் இலங்கைக்கு உதவுகின்றோம் என்று கூறிய இந்தியா, போர் ஓய்ந்த பின்னரும் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து இம்மியும் பின் வாங்கியதாகத் தெரியவில்லை.

இதற்கு முக்கியமானதொரு உதாரணமாக ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவினால் கொண்டு வரப்படவிருக்கும் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதில் இந்தியாவின் நழுவல் போக்கு மெல்ல மெல்ல அம்பலமாகி வருவதைக் குறிப்பிட முடியும். ஆரம்பத்தில் இந்தியா இதற்கு முழு அளவில் ஆதரவு வழங்கும் என்ற எதிர்பார்ப்பே நிலவி வந்தது. ஆனால் பிரேரணையின் உள்ளடக்கத்தைப் பார்த்த பின்னரே ஆதரவின் தன்மை தொடர்பாக இந்தியா முடிவுகளை எடுக்குமென இந்தியாவின் தரப்பிலிருந்து தற்போது கூறப்படுகின்றது. இது சென்ற தடவைபோன்று, இலங்கைக்கு எதிரான பிரேரணையை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையின் முன்னோடி எனக் கூற முடியும். மேலும் அமெரிக்கப் பிரேரணையில் உள்ள முக்கியமான சில சரத்துக்களுக்கு இந்தியா ஆதரவு வழங்க மாட்டாது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. இதனால் தனக்கு ஆபத்து வந்து விடுமோ என்ற இந்தியாவின் அச்சமே இதற்குக் காரணமாகும்.

இலங்கையில் தமிழர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு கொன்றொழிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என்பதை எவருமே மறுக்க முடியாது. இறுதிப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற நெருக்குதல் கூட அந்த நாட்டிலிருந்தே இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது. முப்பது ஆண்டுகளாக இலங்கை, இந்தியப் படைகளிடம் சரணா கதியடையாது நிலைத்து நின்ற விடுதலைப்புலிகளின் அழிவுக்கும் இந்தியாவே மூல காரணமாக விளங்கியது. ஆனால் போர் ஓய்ந்த பின்னராவது அதன் மனநிலையில் மாற்றம் வந்திருக்க வேண்டும். ஆனால் இது வரை அது சாத்தியமாகவில்லை.

இலங்கை என்னதான் இந்தியாவை எட்டி உதைத்தாலும், அதன் கால்களைத் தழுவும் பரிதாப நிலையில்தான் இந்திய வல்லரசு காணப்படுகின்றது. இலங்கையை அதட்டி ஒருவார்த்தையேனும் கூறக்கூடிய அளவுக்கு அந்த நாடு துணிவு பெற்றிருக்கவில்லை என்பது பல சந்தர்ப்பங்களில் நிரூபணமாகியுள்ளது. மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் உயிருக்கு உலை வைக்கும் முயற்சி முதலில் இலங்கை யில் தான் இடம்பெற்றது. 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப் பந்தத்தில் கைச்சாத்திடும் பொருட்டு அவர் இலங்கைக்கு வந்தபோது படை வீரர் ஒருவரின் தாக்குதலுக்கு ஆளானார். ஏதோ அதிர்ஷ்டவசமாக அவர் அந்தத் தாக்குதலில் இருந்து உயிர் பிழைத்துக் கொண்டார். தாக்குதலை நடத்திய படைவீரர் பெரிதாகத் தண்டனை எதையும் அனுபவிக்காத நிலையில் விடுவிக்கப்பட்டார். அப்போதைய இலங்கையின் ஜனாதிபதியான ஜே. ஆர்.ஜெயவர்த்தன இந்தச் சம்பவத்தை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. மாறாக 'கடுமையான வெயிலால் பாதிக்கப்பட்ட அந்தப் படைவீரன் செய்வதறியாத நிலையில் இதனைப் புரிந்து விட்டான்' என்று கூறிச் சமாளித்துக் கொண்டார்.



விவகாரம் அத்தோடு முடிந்துவிட்டது. ஆனால் 1991 ஆம் ஆண்டு அதே ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். அதில் தொடர்பு பட்டதாகக் கூறி கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே தமிழர்கள் என்று தான் கூற வேண்டும். தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை என கடுமையான தண்டனைகள் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. இவர்கள் அனைவரும் 23 ஆண்டுகால சிறை வாசத்தை அனுபவித்துள்ளனர். இந்த நிலையில் இந்தியாவின் உச்ச நீதிமன்றம் மரண தண்டனைக் கைதிகளுக்கான தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியதுடன் மாநில அரசு உரிய சட்ட விதிகளின் பிரகாரம் அவர்களை விடுவிக்க முடியுமெனவும் அதிரடியான உத்தரவொன்றைப் பிறப்பித்தது. இந்தத் தீர்ப்பினால் உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஆறுதலும் மகிழ்ச்சியும் கலந்த நிம்மதிப் பெருமூச்சை விடுத்தனர். ஆனால் இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத இந்திய மத்திய அரசு, அவசரம் அவசரமாக மனுவொன்றை உச்ச நீதிமன்றில் சமர்ப்பித்து முன்னைய தீர்ப்புக்கு இடைக்காலத் தடையை விதிப்பதற்கான சூழலை உருவாக்கி விட்டது. இதனால் சிறையில் வாடுகின்றவர்களின் நிலை தொடர்பாக எதுவித மாற்றமும் இது வரை ஏற்படவில்லை. மத்திய அரசின் இந்தச் செயலால் இந்தியாவில் மட்டுமல்ல உலகம் முழுவதிலுமே கடும் எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

இனியும் இந்தியா எமக்கு உதவ மாட்டாது என்ற எண்ணமே தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றிக் காணப்படுகின்றது. தமிழர்களை மேன் மேலும் அடித்துத் துவைத்து அவர்களின் மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்துவதுதான் இலங்கை அரசின் திட்டம் என்று கூறினால், இந்தியா அதற்கும் மேலாகச் செயற்படத் துணிந்து விட்டதையே அதன் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. இனியும் இந்தியாவை எமது தாய் நாடென்று கூறுவதில் அர்த்தமே இருக்கப் போவதில்லை. அந்த நாட்டை நம்புவதாலும் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

சிலர் இந்திய நாட்டின் மத்திய அரசில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது ஈழத் தமிழர்களுக்குப் பேருதவியாக இருக்குமெனக் கூறுகின்றனர். பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் இருந்தபோது தமிழர்களுக்காக பெரிதாக எதனைச் சாதித்து விட்டார்கள் என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆட்சிகள் மாறினாலும் இந்திய நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு விடப் போவதில்லை என்பதுதான் யதார்த்தமாகும். இதை நாம் மறந்து ஏமாந்து நிற்பதில் பயனொன்றும் கிடைக்கப் போவதில்லை.

எனவே இந்தியாவில் வாழும் தமிழ் உறவுகளின் அரவணைப்பு எமக்குக் கிடைக்குமே ஒழிய, ஒட்டு மொத்த இந்தியாவும் எமது பக்கம் நிற்கும் என்ற கனவை முதலில் நாம் கலைத்துக் கொள்ள வேண்டும். எமக்கான விடிவை நோக்கிய பயணத்தை எமது சொந்தக் காலின் மூலமாகவே நாம் மேற்கொள்ள வேண்டும். இதேவேளை நம்பிக்கைய வர்கள் எவராவது உதவ முயன்றால் அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியே எமக்குக் கிடைக்காது.

> இலங்கையில் தமிழர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு கொன்றொழிக் கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என்பதை எவருமே மறுக்க முடியாது. இறுதிப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற நெருக்குதல் கூட அந்த நாட்டிலிருந்தே இலங்கைக்கு கொடுக்கப்பட்டது. முப்பது ஆண்டுக ளாக இலங்கை, இந்தியப் படைகளிடம் சரணா கதியடையாது நிலைத்து நின்ற விடுதலைப் புலிகளின் அழிவுக்கும் இந்தியாவே மூல காரணமாக விளங்கியது.

# சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்போர் சிவலோக பதவிகளைப் பெறுவர்

மாசி மாதம் கிருஷ்ண பட்ச (தேய் பிறைக் கால) சதுர்த்தசி (பதினான்காம் நாள்) திதியிலே நள்ளிரவு வேளையில் சிவபெருமான் அரியும் அயனும் காணச் சோதி வடிவாய்த் தோன்றினார். அத்தினமே மகா சிவராத்திரி எனக்கொள்வது மரபு.

இந்தப் புண்ணிய தினத்தைச் சிவனுக்குரிய நாளெனக் கொண்டு, விரதம் அனுஷ்டிப்பது சிவனடியார்களின் வழக்கம். இந்த விரதம் சிவ விரதங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானது.

சிவராத்திரி விரதம் - நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி; மாதச் சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என்று ஐவகைப்படும். ஆண்டிலுள்ள இருபத்து நான்கு சிவராத்திரிகளிலும் சிவபூசை செய்து விரதம் காப்பது நித்திய சிவராத்திரி ஆகும்.

தை மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் பதின்மூன்று நாள்கள் வழிபடுவது பட்ச சிவராத்திரி; மாசி மாத கிருஷ்ண பட்ச சதுர்த்தசி நள்ளிரவிலே இலிங்கோற்பவ காலம் வருமாயின், அது மகா சிவராத்திரி ஆகும். பங்குனி மாத கிருஷ்ண பட்ச முதல் திருதியை, சித்திரை மாத கிருஷ்ண அட்டகம் முதலியன மாத சிவராத்திரி என்றும் திங்கட்கிழமை முழுவதும் அமாவாசை கூடி இருந்தால், அந்த நாள் யோக சிவராத்திரி என்றும் கைக்கொள்ளப்படுகிறது.

இந்த ஐவகைச் சிவராத்திரிகளுள் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியையே மகா சிவராத்திரி என்று விசேட நாளாக மதித்து விரதம் அனுஷ்டிப்பது சைவ சமயிகள் வழக்கம்.



சிவராத்திரி விரதம் - நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி; மாதச் சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என்று ஐவகைப்படும். ஆண்டிலுள்ள இருபத்து நான்கு சிவராத்திரிகளிலும் சிவபூசை செய்து விரதம் காப்பது நித்திய சிவராத்திரி ஆகும்.

**விரதம் அனுஷ்டிக்கும் முறை**

சிவராத்திரி தினத்தில் உபவாசம் இருத்தல் உத்தமம்; நீரேனும் பாலேனும் பருகுதல் மத்திமம்; பழம் மற்றும் சிற்றுண்டி வகைகளை உண்பது அதமம் என்றும் கருதப்படுகிறது.

இந்தத் தினத்திலே இராத்திரி நான்கு யாமமும் நித்திரை விழித்திருத்தல் வேண்டும். அவ்வாறு விழித்திருக்க இயலாதவர்கள் இலிங்கோற்பவ காலம் - வரையிலேனும் விழித்திருத்தல் வேண்டும். சிவராத்திரியில் பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலம் அதாவது நள்ளிரவு பன்னிரண்டு மணி வரையுமுள்ள காலம் நீங்கும் வரையிலேனும் நித்திரை விழித்து விரதம் காத்தல் நன்று.

**இலிங்கோற்பவர் தரிசனம்:**

சிவாலயங்களில் ஈஸ்வரனுடைய கருவறைக்குப் பின்புறம் உள் வீதியிலே மேற்கு நோக்கி அமைந்துள்ள கோட்டத்தில் இலிங்கோற்பவர் பிம்பம் இருப்பதைக் காண லாம். இலிங்கோற்பவ மூர்த்தி என்பது பரமசிவனுடைய அறுபத்து நான்கு மூர்த்தங்களுள் ஒன்று. சிவனுடைய உருவம் - மான் மழுவுடன் இருக்கின்றது; சிரசும் பாதமும் கண்களுக்குப் புலப்படா. கீழே வராக மூர்த்தி (பன்றி வடிவம் தாங்கிய திருமால்) காணப்படுகிறது. மேலே ஹம்ச மூர்த்தி (அன்ன வடிவம் தாங்கிய பிரம்மா) காணப்படுகிறது. ஆதியும் அந்தமும் இல்லாச் சோதி சொரூபமே இவ்விதம் இலிங்கோற்பவ மூர்த்தியாக நள்ளிரவில் விஸ்வரூபம் எடுத்துச் செருக்குற்ற பிரம விஷ்ணு மூர்த்திகளின் ஆற்றல் பரம்பொருளின் முன் எதுவும் செல்லாது என்பதை உணரச் செய்த நிகழ்வாகும். சிவராத்திரி நாளில் நிகழ்ந்த அற் புதக் காட்சியைச் சிலையாக வடித் துக் காட்டுவதே இலிங்கோற்பவ மூர்த்தி. ஆகவே சிவராத்திரி நாளில் சிவாலய தரிசனையுடன் இலிங்கோற் பவ தரிசனையும் இன்றியமை யாததென்று சைவ சமயிகள் நம்புகின்றனர்.

**சிவராத்திரி விரதப் பேறு:**

மகா சிவராத்திரி நாளன்று நான்கு யாமமும் நித்திரை விழித்து விரதம் அனுஷ்டிப்போர் உயர்ந்த பேறுகளைப் பெறுவர் எனச் சிவராத்திரி புராணம் செப்புகிறது. உணவின்றி உயிர் காப்பதற்காக நான்கு யாமமும் விழித்திருப்போரும் சிவலோக பதவிகளைப் பெறுவர் என்ற தளராத நம்பிக்கைசைவசமயிகளுக்குஉண்டு. எனவே, சிவ விரதங்களுள் மாசி மாத மகாசிவராத்திரி விரதம் தலையாய விரதம் என்பதும் அவ்விரதத்தைச் சைவ சமயிகள் அனைவரும் பெரிதாக மதித்துச் சிவ வழிபாடு செய்வர் என்பதும் மனம்கொள்ளற்பாலன.

*நன்றி:அருள்ஒளி.*

# வண்ணை வைத்தீஸ்வரருக்கு இன்று கொடியேற்றம்

சரித்திரப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரர் கோயிலின் 2014 வருடாந்த திவ்ய மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. சிவபெருமானுக்கு உரிய மகாசிவராத்திரி தினமான இன்றைய புனித புண்ணியநாளிலே தொடங்குகின்ற இந்த மஹோற்சவமானது தொடர்ந்து 19 நாள்களுக்கு நடைபெற்று பங்குனி உத்தர நாள் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுக்கு வரும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிரசங்கம் செய்த பெருமையையுடைய இந்தக் கோயில் யாழ்ப்பாண நகரின் மத்தியிலே காங்கேசன்துறை வீதியிலே கம்பீரமான இராஜகோபுரத்துடன் அழகாகக் காட்சியளிக்கின்றது. ஆதிபராசக்தி அம்பிகையான ஸ்ரீ வாலாம்பிகை சமேதராக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் வைத்தீஸ்வரர் இங்கு வந்து வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களைப் போக்கி ஆனந்த இன்ப வாழ்க்கை அளித்து அருளாட்சி புரிகின்றார்.

இந்தியாவிலே இருக்கும் வைத்தீஸ்வரர் கோயிலைப் போன்றே இலங்கையிலுள்ள இந்தக் கோயிலிலும் சிவாகம முறைப்படி கிரியைகள் இடம்பெறுகின்றன. தஞ்சை அரச பீடத்தை அலங்கரித்து ஆட்சியிலிருந்த மகாராஷ்டிர மன்னன் சந்திரபதி பிரதாப்சிங் மகாராஜாவினுடைய அரச கட்டளை பெற்று சிற்பசாஸ்திர வல்லுநர் ஸ்ரீ கண்ணாயிரஸ்தபதியார் மூலமாக இந்தக் கோயில் திருப்பணிகளுக்காக வைத்திலிங்கச் செட்டியார் பல விற்பன்னர்களை வரவழைத்து இலங்கையில் இந்தக் கோயிலைக் கட்டியதாக வரலாறு பேசுகின்றது.

இந்த வைத்தீஸ்வரர் கோயில் மூன்று வீதிகளை யுடையது. இரண்டாவது சுற்றுப்பிரகார வீதியில் தெற்குப் பக்கமாக சித்தாமிர்த புஷ்கரணி என்ற தீர்த்தக் கேணி அமைந்திருக்கின்றது. இங்கு நடைபெறும் திருவிழாக்களில் அம்மை அப்பனின் அலங்காரம் காண்பதற்கு அடியார்கள் பல இடங்களிலிருந்தும் வந்து சேருவார்கள். ஒவ்வொரு நாளும் விதவித அழகுமிக்க சாத்துப்படியுடன் வீதிவலம் வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த ஆலயத்தில் நடைபெறுகின்ற தேர்த் திருவிழா பக்திபூர்வமானது. ஐந்து தேர்கள் ஆலய வாயிலிலிருந்து புறப்பட்டு அழகுப் பவனியாக வரும் அலங்காரக் காட்சி அற்புதமயமாகவிருக்கும். இந்தப் பஞ்சரதப் பவனி காண யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் பக்தர்கள் படையெடுத்து வருவார்கள்.

பஞ்சரதப் பவனியில் முதலில் விநாயகப்பெருமான், அடுத்து முருகப் பெருமான், ஸ்ரீ சோமஸ்கந்தர், தையல்நாயகி, சண்டேஸ்வரர் என்று அடுக்கடுக்காக ஐந்து தேர்களும் ஆடி அசைந்து வரும் அற்புதம் சொல்லில் அடங்காது.

நேரந் தவறாத ஆறுகாலப் பூசைக் கிரமத்துடன் விளங்கும் இந்த ஆலயத்தைத் தரிசிப்பதற்குப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இன்று தொடங்கி தொடர்ந்து நிகழ்கின்ற எம்பெருமானுடைய திருவிழாக்களில் சைவ மக்கள் அனைவரும் பங்கு கொண்டு வைத்தீஸ்வரப் பெருமானின் திவ்ய பேரருட் கடாட்சத்துக்கு ஆளாகி உலகில் நலமுடன் வாழ எங்களை நாங்களே தயார்ப்படுத்திக் கொள்ள அவனருளையே நாடி நிற்போமாக!

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

## உலகளாவிய ரீதியில் இன்று சைவக் கொடி தினம்






வழமைபோல் இம்முறையும் சிவராத்திரி தினமாகிய இன்று 27 ஆம் திகதி வியாழனன்று சைவக் கொடியாம் நந்திக் கொடி தினம் இலங்கையிலும், உலகளாவிய ரீதியாகவும் கடைக்கொள்ளப்படத் திருவருள் பாலித்திருக்கின்றது. இந்தக் கொடி தினத்தன்று சைவ நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் நந்திக் கொடியை ஏற்றியும், உங்கள் இல்லங்களின் முன்னால் இக் கொடிகளால் அலங்காரம் செய்தும் எமது சைவ உணர்வுகளை வெளிப்படுத்தும்படி சைவ மக்களாகிய உங்களை வேண்டுகின்றோம். இக் கொடி தினத்தை ஒரு வெற்றிகரமான - முழுமையான சைவர்கள் தினமாக ஆக்குவது ஒவ்வொரு சைவ ம்க்களினதும் கடமையும் - காலத்தின் தேவைப்பாடுமாக இருக்கின்றது.

மாசி மாதத்தில் அபரபக்க சதுர்தசியில் மகா சிவராத்திரி தினத்தன்று விரதமிருந்து சிவனைச் சிந்தையில் வைத்துப் பூசிப்பது நன்று. விரதங்களில் மேன்மையானது மகா சிவராத்திரி விரதமாகும். முறைப்படி மகா சிவராத்திரியன்று விரதத்தை அனுஷ்டிப்பவருக்கு மரணம் சம்பவிக்கும் காலத்தில் வேதனையின்றி உயிர் துறக்க வாய்ப்பமையும் என்பது ஐதீகம்.

சிவராத்திரி தினத்தன்று தனது உயிரைக் காப்பாற்றுவதற்காக வில்வ மரத்தில் ஏறி இரவு முழுவதும் நித்தரையின்றி வில்வ இலைகளால் சிவலிங்கத்துக்கு பூசை செய்த வேடுவனுக்கே பரமசிவனின் பாதாரவிந்தகங்களில் சேர்வதற்கு பெரும் பேறு கிடைக்கப்பெற்றது என்றால் மகா சிவராத்திரியின் மகிமை வெளிப்படையாகின்றது. சிவனுக்கே உரிய ராத்திரி சிவராத்திரியாகும்.

இத்தகைய மகா சிவராத்திரி தினத்தில் உலக சைவப் பேரவையினால் சைவக் கொடி தினம் கொண்டாடப்படுவதுடன் உங்கள் அனைவரினதும் ஆதரவு கிடைக்கப்பெறுவது பெரும் பாக்கியமாகும். 2001 ஆம் ஆண்டு தொடக்கம் சைவக் கொடி தினம் மகா சிவராத்திரியன்று கொண்டாடப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது நாட்டிலும் - உலகளாவிய ரீதியிலும் - எமது புலம்பெயர் இந்து சமுதாயத்தினிடையேயும் பிரசித்தி பெற்று சைவத்தின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது இக் கொடி தினம்.

கடந்த காலங்களில் இக் கொடிதினமானது உலக சைவப் பேரவையின் அங்கத்தவர்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர், இந்துப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் இந்து நிறுவனங்கள் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நாட்டின் பல பாகங்களிலும் விமரிசையாக நடைபெற்றமை மெச்சத்தக்கதாகும். இம்முறையும் இது சிறப்பாக அமைய அனைவரினதும் ஒத்தாசைகளை பேரவை வேண்டி நிற்கின்றது.

இக் கொடி தினத்தில் பெறப்படும் கொடி நிதியை எமது நாட்டின் சைவ நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் பாதிக்கப்பட்ட இந்து மக்கள் அனைவரினதும் மேம்பாட்டுக் காக விசேடமாக வறிய மக்களின் கல்வி மேம்பாட்டுக்குச் செலவு செய்வது என்பதில் பேரவை உறுதியாக உள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம் என்று பேரவையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கீரிமலை நகு

# தேர்த்திருவிழா சிறப்



நகு

"பூவா ரம
மோவா
மாவா வெ
போவா வெ

27.02.2014 வியாழக்கிழமை -
வசந்தமண்டப பூஜை
ரதாரோகணம்
ரதாவரோகணம் (பச்சை
இரவு நான்கு ஜாமமும் சிவராத்
நள்ளிரவு 12.00 மணிக்கு இலி
இடபாருடராக கற்பூர ஜோதியுடன்
28.02.2014 வெள்ளிக்கிழமை
கொடியிறக்கம்.



## அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம், கீரிமலை, அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய இரதோற்சவம் இன்று நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயிணைந்த சரித்திரப்பிரசித்தி வாய்ந்த இத்தலம் புனிதப் பிறவி எடுத்த மனித குலம் வணங்க வேண்டிய ஒன்றாகும்.

வழிபடும் அடியார்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் நகுலேஸ்வரப் பெருமானின் திருவருட்கடாட்ஷம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கிறோம். இன்று நிகழும் இந்தத் தேர்த்திருவிழா சிறப்புற எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை உளமாரப்பிரார்த்தித்து ஆசி நல்கி நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம்.

## சிறப்புற பிரார்த்திக்கின்றோம்



ஈழத்திருநாட்டின் வரலாற்றில் முதன்மை மிக்க தலமாக விளங்குவது கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோவில். இத்திருக்கோயிலின் மேன்மைக்கு இலக்கணமாக விளங்குவது கண்டகி தீர்த்தம். பாவ வினைகளை போக்கி மோட்சம் நல்கும் சிவசேஷ்த்திரம் எனப் பல பண்டைய நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இப் புண்ணிய தலத்தை போரின் அனர்த்தங்களால் இழந்து தவித்த சைவத் தமிழர்கள் பல வருட இடைவெளிக்குப் பின் நகுலேஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா நடைபெறுவது சிறப்புக்குரிய விடயமாகும். இராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்களின் தளராத முயற்சியால் ஆலயம் மீளவும் கட்டியெழுப்பப்பட்டு. இன்று ஆலய உட்பிரகாரம் முழுவதும் புதிய கோயிலாக கட்டப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது. இறை நியதிப்படி யாவும் நடந்து முடிந்தது. எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறப் பிரார்த்தித்து எனது வாழ்த்துரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

-செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்-

## குருக்களின் அருளாசியுரை



திருப்பெருமா மேருவரைச் சிகரமூன்றுட் சேருமிரு சிகரமாய் திகழுமீழத் துரப்பெருமாமுகமெனும் யாழ்ப்பாணம் தன்னில் உத் தரத்திற் கீரிமலை உறைந்து நாளும்.

விருப்பமரு நகுலேஸ்வரரருளைக் கொண்டு மேவிய வங்கர் கோயில் விளங்குவாய்ந்த திருப்பணிகள் செய்பவரும் செய்விப் போரும் திரவியங்களீபவரும் சிறந்து வாழீ

"நமஸ்சம்பலேச மயோபவேச நமஸ்சங்காராயச நமஸ்சிவாயச"

ஆதி அந்தம் இல்லா அரும் பெருஞ்சோதியும் பஞ்ச கிருத்தியங் களுக்கு காரணமானவரும் கண்டகி தீர்த்தம், தலம், மூர்த்தியும் ஒருங்கே அமையப் பெற்றதும் புராணகாலச் சிறப்புபெற்றதுமான, பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றானது கீரிமலை நகுலேஸ்வரம் எனப் பெயர் பெற்ற திவ்ய தலத்தில் நித்தியசான்னித்தியத் துடன் உறைந்திருக்கின்ற நகுலேஸ்வரப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் 06.02.2012 மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் அனர்த்தம் காரணமாக கோயில் முற்றாக சேதமடைந்தது. நகுலேஸ்வரப் பெருமானின் திருவருளாலும் இலங்கை நாட்டில் உள்ள சைவ அன்பர்கள், புலம் பெயர்ந்து வாழும் சைவ அன்பர்கள் அனைவரினதும் பேராதர வோடும் பெருமுயற்சியினாலும் இவ் ஆலயமானது அதிசிறந்த சிற்பாகமமுறைப்படி புதிய மண்டபங்கள் அமைத்து வர்ண வேலைகளுடன் கலையம்சத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கின்றது.

எல்லா சைவ அன்பர்களின் பேருதவியோடு மிக விரைவில் இராஜகோபுரம் அமைய இறை திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

வடமொழி, தஷிண கைலாச மான்மியம், மத்ஸிய புராணம், ராமாயணம், மகாபாரதம் மற்றும் பல தமிழ் நூல்களும் இத் தலத்தின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக் கூறுகின்றன.

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் இவ்வாலயத்தில் இரவு பகல் தொண்டாற்றிய தொண்டர்களுக்கும், எமது நாட்டு மக்களுக்கும், புலம் பெயர் வாழ் மக்களுக்கும், அரசாங்கத் துறையினருக்கும், உலக மக்களுக்கும் பேரருள் கிடைத்து பேரானந்த பெரு வாழ்வு வாழ எனது அருளாசியை வழங்குகின்றேன்.

இன்று நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரர் தேரேறி வந்து எல்லோருக்கும் இன்னருள் பாலிப்பாராக

'சர்வே ஜனா சுகினோ பவந்து'

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

குறிப்பு: பக்தர்கள் கண்டகி தீர்த்தத்திலிருந்து எடுத்து வரப்பட்ட தீர்த் தத்தை தங்கள் திருக்கரங்களால் சிவராத்திரி தினத்தன்று சகஸ்ர லிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்து தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

-ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்-

## சிவாலய வர

யாழ்ப்பாணத்திலே மாவிட்ட
சுவாமி கோயிலுக்கு வடமேற்கே 2 மைல்
உள்ளது. கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகா
சுவாமி திருக்கோயில் வரலாறு மிகவும் புராதனம
கொண்டது. இதனுடையகாலம் 4ஆம் நூற்றாண்டு என்பது ஆ
நம் ஈழநாட்டுத் திருத்தலங்களில் இன்று பஞ்ச ஈஸ்வரங்களா
கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னீஸ்வரம், தொண்டீஸ்வரம் அ
இருந்த காலத்தில் அதனைப் புதுப்பித்து புனருத்தாரணத் திருப்பணி
ஆண்டு வைகாசி மாதம் 24ஆம் திகதி சைவ மக்களின் விடி வெள்ளியாக
கையொப்பத்தோடு விஞ்ஞாபனம் செய்தார்.

"நகுலேஸ்வரம் என்னும் கோயில் யாழ்ப்பாணத்திலே வட பாகத்திலே சாக
மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் மிக்கது. நகுலமுனி, முசுகுந்தன், அர்
தலம், இஷ்ட சித்திகளைக் கொடுக்கும் தலம். இது போர்த்துக்கேயர் காலத்திலே இ
திலும் சுருக்கமாகவும் தட்சண கைலாச புராணத்திலே விரிவாகவும் சொல்லப்பட்டு இ
"நகுலேஸ்வர மான்மியம்" என்ற நூலுக்கு சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் வழங்கி

மேலும் நகுலேஸ்வர சிவாலய வரலாறு பற்றி அறிந்த வரையில் 18நூல்கள் காணப்ப
இயற்றிய ஈழமண்டல சதகநூலில் சாமகானம் பரவிய இடம் வீணாகானபுரம் என்ற பெய
ணம். இவ்வாறு நகுலாசல மகிமை பேசப்படுகின்றது. ஈழமண்டல சதகம் என்கிறார் தமி
விஜய மன்னன் புதுப்பித்த திருத்தலமென யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது.

ஆரம்பகாலத்தில் திருத்தம்பலேஸ்வரம் என அழைக்கப்பட்ட இத்திருக்கோயில் நகு
பெற்றமையாலும் கீரிமலை நகுலேஸ்வரம் எனப் பெயர் பெறுகின்றது. கீரிமலையும்
பிணைந்தது.

இத்தனை மகிமைவாய்ந்த நகுலேஸ்வர திருத்தலமானது வேத விற்பன்னர்களாகிய ஸ்ரீ
கா.சபாபதிக்குருக்களினதும் ஸ்ரீமத் கா.தியாகராசக் குருக்களினதும் பெருமுயற்சிகளினா
போற்றப்பெறும் நகுலேஸ்வர சிவாலயத்தை தமது தந்தையார் சிவஸ்ரீ தி. குமாரசாமிக் கு
ஆண்டு முதல் இன்றுவரை நகுலேஸ்வர ஆதீன மேலாளராகத் தொண்டு ஆற்றி
நகுலேஸ்வரக்குருக்கள். இங்கு சிவராத்திரி உற்சவம், வருடப்பிறப்பு உற்சவம், மாசிம
அடியார்கள் தமது பிதிர் வழிபாட்டுக்கும் பாவ விமோசனத்துக்கும் உகந்த கீரிமலையில்
எண்ணிறைந்த பல்லாயிரவர் பங்குகொண்டு நகுலேஸ்வரப் பெருமானையும் அம்மை
எங்கள் நாட்டில் நிகழ்ந்த மிகவும் சோகம் மிகுந்த துன்பகரமான யுத்தத்தினால்
நகுலேஸ்வரர் சிவாலயம். இதனால் 16.10.1990முதல் இராஜராஜஸ்ரீ கு
திருக்கோயிலைவிட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்ட
பொருள்செய்யாது சிவபெருமானைப் போல பிச்சாடன வடிவம் கொண்டு
இடங்களுக்கும் சென்று திருப்பணி நிதி சேர்த்து கும்பாபிஷேக நன்னீ
கோயிலைத் தரிசிக்க வைத்திருக்கின்றார்.

நகுலேஸ்வரர் திருக்கோயிலின் வரலாற்றில் சுருக்கத்தின் சு
நாட்டில் வாழ்கின்ற சைவத் தமிழ் மக்களுக்கும் ஏனைய அ
மறந்து சாந்தியும் சமாதானமும் ஏற்பட எல்லாம் வல்ல ஸ்ரீ
வரப் பெருமானை வழிபாடு செய்து தேர்த் திருவிழா


விளம்பர அனுசர

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆனைவிழுந்தான் பிள்ளையார் கிறசர் ANAVILUNTHAN PILLAIYAR CRUSHER இளவாலை வடக்கு. | பிரகலாத் பவான் சைவ உணவகம் சகல உணவு வகைககளும் ஓடருக்கு பெற்றுக் கொள்ளலாம். நகுலேஸ்வரம் வீதி, கீரிமலை. | டினு மல்ரி சென்ரர் கட்டுவன் றோட், ஏழாலை | இளவரசி சேலைச் சோலை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | கந்தன் ஸ்ரோர்ஸ் மெயின் வீதி, பண்டத்தரிப்பு. 021 300 2770 கே.கே.எஸ். வீதி, மாவிட்டபுரம். 0772658030 | Air Com Travels & Tours சகல நாடுகளுக்குமான விமான ரிக்கற்றுகள் துரித கதியில் செய்துதரப்படும். 06, Stanley Road, Jaffna. | இ.ச.பே.நாகரத் சக நிறுவன இல.52, 5 கஸ்தூரியார் யாழ்ப்பாண |
| மின்சாரப்பொருள்கள் இலத்திரனியல் பொருள்களை நியாயமாகவும் தரமானதாகவும் பெற்றுக்கொள்ள சுந்தர்சன் யாழ்.வீதி, மானிப்பாய். TP: 021225 5136, Fax: 021225 5136 | அபிராமி சூ சென்ரர் இல. 155,156, மொடேன் மார்கற், யாழ்ப்பாணம். | அசல் 22 கரட் தங்கத்தில் நவீன காலத்துக்கேற்ற புதிய டிசைன்களில் செய்துகொள்ள சிறந்த ஸ்தாபனம் ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் K.T. பிளாசா பிரதான வீதி, சங்கானை. தொ.பே. 021 321 2399 | வர்ண உலகின் புரட்சி கந்தவேலன் ரேடர்ஸ் இல. 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2822 | அசல் 22 கரட் தங்கத்தில் நவீன காலத்துக்கேற்ற புதிய டிசைன்களில் செய்துகொள்ளசிறந்த ஸ்தாபனம் சிறி தேவி கருமாரி நகைமாடம் 83/1, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம். | சிவசம்பு களஞ்சியம் அபிஷேக பல்பொருள் வாணிபம் 03, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | டோணி நகைத் தொழி 82, ஈச்சமோட்டை யாழ்ப்பாணம் 077 888 619 |

# நகுலேஸ்வரம்


# றப்பு மலர் 27.02.2014



## நகுலேசர் திருவந்தாதி

"பூவா ரடிநகு லானனன் போற்றிப் புகழ்ந்து நித
மோவா தொழுகு மருவிநீ ராடி யுழைந்திடலு
மாவா வெனவரு ளான்முக மாற்று மவனி ருக்கப்
போவா ரெவர்பிற தெய்வத்தை நாடிப் புறம்புறமே"

ாழக்கிழமை - தேர்த்திருவிழா, சிவராத்திரி
ண்டப பூஜை - காலை 07.00
ணம் - காலை 08.00
ாகணம் (பச்சைசாத்தி இறங்குதல்) பிற்பகல் 3.00 மணி
மும் சிவராத்திரி விசேட அபிஷேகம், பூஜைகள், பஞ்சமுக அர்ச்சனை,
மணிக்கு இலிங்கோற்பவ பூஜை, இரவு 01.00 மணிக்கு சோமாஸ்கந்தர்
ூர ஜோதியுடன் வெளி வீதி உலா வருவார்.
ள்ளிக்கிழமை உதயத்தில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம், இரவு





## ய் வரலாறு

திலே மாவிட்டபுரம் கந்த மேற்கே 2 மைல் தூரத்தில் கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத ஸ்ரீ நகுலேஸ்வர வும் புராதனமான அற்புதமான வரலாற்றைக் ண்டு என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு ஆகும். ஈஸ்வரங்களாகக் கருதப்படுவது திருக்கேதீஸ்வரம், திருக் ாண்டீஸ்வரம் ஆகும். நகுலேஸ்வர சிவாலயம் சிதைவடைந்து த் திருப்பணி வேலைகள் நடைபெற வேண்டுமென்று 1878ஆம் வெள்ளியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் தமது

ாகத்திலே சாகர சங்கம புண்ணிய தீர்த்தக் கரையிலே இருக்கின்றது. இது முசுகுந்தன், அர்ச்சுனன், நளன், ஸ்ரீராமன் முதலிய பலராலும் பூசிக்கப்பட்ட காலத்திலே இடிபட்டது. இதன் பெருமை சூதசங்கிதையிலும், பஞ்ச புராணத் சால்லப்பட்டு இருக்கின்றது" என நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர் உரைசெய்த புலவர் வழங்கிய முகவுரையில் காணப்படுகின்றது.
ால்கள் காணப்படுகின்றன. இவற்றில் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்கள் ரம் என்ற பெயருடையதாயிற்று. அன்றைய வீணாகானபுரமே இன்றைய யாழ்ப்பா என்கிறார் தமிழ் மூதறிஞர் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். டுகின்றது.
ாயில் நகுல முனிவரின் வருகையாலும் நகுலமுனிவருக்கு கீரிமுகம் நீங்கப் கீரிமலையும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்

னர்களாகிய ஸ்ரீமத் கு.கார்த்திகேயக் குருக்களினதும் அவரது புதல்வர்களாகிய ஸ்ரீமத் முயற்சிகளினால் 1878ஆம் ஆண்டு மீண்டும் இச்சிவாலயம் கட்டப்பட்டது. இன்று குமாரசாமிக் குருக்கள் 1947ஆம் ஆண்டு சிவபதம் அடைந்ததன் பின் 1948ஆம் ாண்டு ஆற்றி வருகின்றார் நகுலேஸ்வர அனுக்கிரகம் பெற்ற இராஜராஜஸ்ரீ ற்சவம், மாசிமகத் தீர்த்தம் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. சைவ உலகில் வாழும் த கீரிமலையில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தம் ஆடுவதற்கு ஆடி அமாவாசையில் னையும் அம்மையையும் வழிபாடு இயற்றுதல் கண்கொள்ளாக் காட்சியாகும். யுத்தத்தினால் பெரும் பாதிப்பையும் பெரும் அழிவையும் சந்தித்தது இந்த ாஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஐயா தமது குடும்பத்துடன் நிலை ஏற்பட்டது. குருக்கள் ஐயா தமக்கு ஏற்பட்ட துன்பங்களையும் வம் கொண்டு சைவமக்கள் வாழும் புலம்பெயர் நாடுகளுக்கும், பல ிஷேக நன்னீராட்டுப் பெருவிழாக் கண்ட நகுலேஸ்வரப் பெருங்

ருக்கத்தின் சுருக்கமே இங்கு தரப்பட்டுள்ளது. இன்று நம் ஏனைய அனைத்து மக்களுக்கும் சோக வாழ்க்கையை லாம் வல்ல ஸ்ரீ நகுலாம் பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ் தேர்த் திருவிழாவைத் தரிசிப்போமாக.

## நலமெல்லாம் தரும் நகுலேஸ்வரம்

பொல்லா வினையறுக்கும்
பெருங்கொடுநோய்தானறுக்கும்
நல்லாதரவுண்டாம் நீராட
எல்லா அழகுவளம் உண்டாகப்
பூவுலகில் நல்லாரை தோற்றுவிக்கும்
நல்ல தூயப் புனித நீரூறும்
பூமுடி அணிநாகர் போற்றிவந்திக்கும்
திருத்தம்பலேஸ்வர இலிங்கம்.

இலங்கையில் இலிங்க வழிபாடுகளிலே திருக்கேதீச்சரம், திருக் கோணேச்சரம், முன்னேச்சரம், தம்பலேஸ்வரம் (நகுலேஸ்வரம்), ஒட்டுசுட்டான் தான்தோன் றீஸ்வரம், மட்டக்களப்பு சுயம்புலிங்க தான்தோன் றீஸ்வரம் என்பன தனிச்சிறப்புப்பெற்று விளங்கு கின்றன.

நாயன்மார்களால் சிவபூமி எனப் போற்றப்பட்ட நமது ஈழ வள நாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றையும் கொண்ட கோயில்களுள் கீரிமலை நகுலேஸ்வரம் தொன்மையும் நீண்ட வரலாற்றையும் கொண்ட ஒரு கோயிலாகும். பல வரலாறுகளைத் தன்னகத்தே கொண்ட நகுலேஸ்வரத்தில் பின்வருவன குறிப்பிடத் தக்க இடத்தைப் பெறுகின்றன. வான்மீகியின் இராமா யணத்தில், இராமனால் இராவணன் சங்காரம் செய்யப் பட்ட பின்னர் ஏற்பட்ட பிரமகத்தி தோஷத்தில் இருந்து விடுபடுவதற்கு நகுலேஸ்வர தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்ததாகக் கூறப்படுகிறது. இவ்வாறாக நளமகா ராசனும் சனிபீடையினாலாகிய துக்கத்தை ஆற்றும் பொருட்டு கங்கா சமுத்திர சங்கம தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து நகுலேஸ்வரரை விதிப் படி பூசித்து அப்பீடையில் இருந்து நீங்கினான். இவ்வாறாகப் பலரும் இவ்ஆலய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தமது தோஷங்களையும் பாவங்களையும் நீக்கி இறைய்ருள் பெற்றுள்ளனர்.



க.கு.க.சிவபாலன்.

## ஈழத்து நகுலேஸ்வரத்தில் சிவனின் தேரோட்டம் காண வாரீர்



திருமூலரால் சிவபூமியென வர்ணிக்கப்பட்ட ஐந்து சிவாலயங்களில் ஒன்றாக விளங்குவது நகு லேஸ்வரப் பெருமானுடைய சிவாலயம். சிவ விர தங்களில் மகத்துவமிக்க சிவராத்திரி விரத நாளிலே சிவன் தேரேறி அருள் பாலிக்கின்ற திருக்காட்சியை ஈழத்தமிழ் மக்கள் வடபுலத்தில் பக்தி பரவசத்துடன் ஆண்டுதோறும் கொண்டாடுகின்ற பெருவிழா நகுலேஸ்வரப் பெருமானுடைய திருவிழா. மறுநாள் கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் பல்லாயிரக் கணக்கான சிவபக்தர்கள் தீர்த்தமாடும் திருக்காட்சி அற்புதம் மிக்கது. சங்கார தொழிலை நிறைவேற்ற பெரு மான் தேரேறிவரும் திருக்காட்சி காண வாரீர் என வேண்டி அவனரு ளாலே அவன் தாள் பணிவோமாக.

மதுரகவி.காரை எம்.பி. அருளானந்தன்
பணிப்பாளர்- சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகம்.

## நகுலேஸ்வரரின் தேர்வடம் பிடித்திட வாரீர்...

மங்கலம் பொங்கி மாசிமாத தேய்பிறையில்
அங்கோர் திரயோதசி- சதுர்த்தசியின் சங்கமத்தில்
பொங்கிருள் நடுநிசியில் சக்தி-சிவரூபங்கள்
லிங்கத் திருமேனி கொண்ட உத்தம காலமதில்
எங்குமிலா பெருமையுடன் மகா சிவராத்திரி தினமதில்
பஞ்ச ஈஸ்வரங்களின் இதய ஸ்தான நகுலேஸ்வரமதில்
தஞ்சமென்ற அடியார்க்கு அருள் பாலிக்க வின்று
நஞ்சுண்ட கண்டர் வருகிறார் தேரேறி
வாருங்கள் சிவனருளால் தேர்வடம் பிடித்திட
சேருங்கள் பசித்திருந்து விழித்திருந்து நமசிவாய
ஓதுங்கள் மகா சிவராத்திரி வேளையில் - மறு நாள்
ஆடுங்கள் சாகரசங்கமமாம் கண்டகி தீர்த்தம்

தெல்லியூர் தேவி

வளர்மதி
புடைவையகம்
கோயில் தேவைக்கான சகல விதமான
பொருள்களும் பெற்றுக்கொள்ளலாம்
288 (156), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சாரங்கா
நாணயமாற்று சேவை
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6972 T.P: 222 6972, Fax.No: 222 8869




நதியா நகை மாடம்
இல.02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3479
கிளை
கவுசன் நகைமாடம்
இல. 129, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏசியன்
பெயின்ற்ஸ்
யாழ்ப்பாண இரும்பகம்
32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7028

அனுசரணை

ப.நாகரத்தினம்
நிறுவனம்
இல.52, 54
தூரியார் வீதி,
ழ்ப்பாணம்.




தவம் போட்டோ
அன் கலர் லாப்
THAVAM
PHOTO & COLOR LAB
167, Navalar Road, 362,
Kasthuriyar Road, Jaffna. 0777 570 123

அண்ணா
கோப்பி
அண்ணா நிறுவனத்தின் புதியதோர்
உற்பத்தி அண்ணா நூடில்ஸ்
உடனடித் தயாரிப்பு உண்ணச்
சுவையான உணவு அண்ணா
உற்பத்தி விற்பனை நிலையங்கள்
எல்லா இடங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்
துரை வீதி, இணுவில்

இர்ராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6953

பட்டாபி
படமாடம்
கண்ணாடி வகைகளின்
ஏக விநியோகஸ்தர்
64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4351

MITHURSIKAN
CONCRETE
PRODUCT CENTER
கே.கே.எஸ் வீதி,
தெல்லிப்பழை.

ாணிகா
த் தொழிலகம்
சமோட்டை வீதி,
ாழ்ப்பாணம்.
77 888 6191

க.கு.கந்தையாபிள்ளை
இல.318, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஸ்ரீ காளி
கிறீம் கவுஸ்
கட்டுவன் வீதி, மல்லாகம்.
தொ.பே. 0770870516




ஐங்கரன்
கிறீம் ஹவுஸ்
கந்தரோடை,
சுன்னாகம்.

Gift Selected from
FASHION HOUSE
பெஷன் ஹவுஸ்
No: 203(65), K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 8713
Fax: 021 222 3034
website: fashionhousejaffna.com

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான
வகைகள் அனைத்தையும்
ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
அம்பிகா கிறீம் கவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(C/12104)(10.6.3)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.



**இடபம்**: வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதரவகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.



**மிதுனம்**: அநாவசிய பேச்சை தவிர்க்கப் பாருங்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.



**கடகம்**: குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**சிங்கம்**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.



**கன்னி**: திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**துலாம்**: மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வாகனச் செலவு விலகும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.



**தனுசு**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**மகரம்**: புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். சிலர் உங்களை மட்டம் தட்டிப்பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம். உத்தியோகத்தில் பிறரின் குறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டாம்.



**கும்பம்**: தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். சில காரியங்களை அலைந்து. திரிந்து முடிக்க வேண்டி வரும். திடீர்ப் பயணங்கள் உண்டு. வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத் தில் சக ஊழியர்களுடன் மோதல்களைத் தவிருங்கள்.



**மீனம்**: தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளைப் பெறுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

## நாளை

**மாசி-16 வெள்ளிக்கிழமை | 28.02.2014**

திதி: சதுர்த்தி பி.ப.04.47 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ.09.45 வரை

சுபநேரம்: 06.28-07.58 வரை
இராகுகாலம்:.10.58-12.28 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...

## ஹிந்துவும் கிரேக்கனும்



முன்னேற்றத்தின் சின்னங்களாக மூன்று மலைகள் விளங்குகின்றன. இந்தோ – ஆரிய நாகரிகத்தின் சின்னம் இமயமலை ; ஹீப்ரு நாகரிகத்தின் சின்னம் சினாய் மலை; கிரேக்க நாகரிகத்தின் சின்னம் ஒலிம்பஸ் மலை. ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த போது, கடினமாக உழைக்க முடியாத அளவு வெப்பம் அதிகமாக உள்ளதைக் கண்டார்கள். அதனால் அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். இதனால் அகநோக்கு வளர்ந்தது. மதத்தை உருவாக்கினார்கள். மனத்தின் சக்திக்கு எல்லை இல்லை என்பதைக் கண்டார்கள். எனவே, இதில் வல்லமை பெற முயன்றார்கள். மனிதன் என்று அழைக்கப்படும் இந்த உடற்கூட்டின் உள்ளே எல்லையற்ற ஏதோ ஒன்று அடங்கியுள்ளது. அது இணையற்ற ஆற்றலுடன் வெளிவரக் காத்திருக்கிறது என்பதைக் கண்டார்கள். இந்த அடிப்படையில் ஒரு தத்துவத்தை உருவாக்குவதே அவர்களுடைய முக்கிய நோக்கமாக இருந்தது.

ஆரியர் கூட்டத்தின் மற்றொரு பிரிவினர் இயற்கை அழகு தவழும் சிறு நாடாகிய கிரீஸுக்குச் சென்றனர். இயற்கையும் தட்ப வெப்ப நிலையும் அரண் செய்யவே , புறப் பொருள்களில் அவர்களின் நாட்டம் சென்றது. புறக்கலையையும் புற விடுதலையையும் வளர்த்தனர். கிரேக்கர்கள் அரசியல் விடுதலையை நாடினர்; இந்துக்களோ எப்போதும் ஆன்மிக விடுதலையை நாடினர். இரண்டும் ஒருதலையானவையே. தேசப் பாதுகாப்பு பற்றியோ தேசபக்தி குறித்தோ இந்தியன் போதுமான அளவு அக்கறை கொண்டது இல்லை. அவன் தன்னுடைய மதம் ஒன்றையே காத்து நிற்பான். ஆனால் அதேசமயம் கிரேக்க நாட்டிலும், கிரேக்க நாகரிகம் தொடர்ந்துள்ள ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மக்கள், தேசமே முதன்மையானது என்று கருதுவார்கள். ஆன்மிக விடுதலையில் மட்டும் கவனம் செலுத்தி, சமூக விடுதலையில் கவனம் செலுத்தாது இருப்பது ஒரு குறையே. சமூக விடுதலை யில் மட்டும் கவனம் செலுத்தி ஆன்மிகத்தில் கவனம் செலுத்தாது இருப்பது அதைவிடப் பெரிய குறையாகும். ஆன்மா, உடல் ஆகிய இரண்டின் சுதந்திரத்துக்காகவும் நாம் முயலவேண்டும்.

# நிலவைத் தாக்கிய சிறிய கோள்



நிலவை சிறு கோள் ஒன்று தாக்கிய சுவாரஸ்யமான சம்பவத்தை தொலை நோக்கி மூலம் கண்டதாக ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த வானவியல் ஆய்வாளர் ஜோஸ் மரியா மடீடோ என்பவரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சந்திர மண்டலத்தை ஆராயும் இரு தொலை நோக்கிகளை வைத்து தான் கண் காணித்து வந்தபோது, வீடுகளில் பயன்படுத்தப்படும் குளிர் சாதனமான 'பிரிட்ஜ்' போன்ற பரப்புக் கொண்ட அந்தக் கோள் நிலவைத் தாக்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்தச் சமயத்தில் யார் நிலவைப் பார்த்திருந்தாலும் சாதாரணமாகவே இந்நிகழ்வைக் கண்டிருக்க முடியும் என்றும் அவர் கூறி யுள்ளார்.

இந்தத் தாக்குதல் எட்டு நிமிடங்கள் வரை நீடித்த நீண்ட நிகழ்வாக இருந்தது. அந்தக் கணத்தில் தான் ஓர் அரிதான மற்றும் அசாதாரண காட்சி கண்டதை உணர்ந்ததாக மக்களிடையே அவர் தெரிவித்தார்.

அந்தக் கோள் போன்ற பாறையின் எடை சுமார் 400 கிலோவாகவும், 2 அடி சுற்றளவும், 1.40 மீற்றர் உயரமும் கொண்டதாக இருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | 7 | 6 | | | | |
| 8 | | | | | 5 | 9 | | |
| 3 | 5 | 6 | 2 | | | | 1 | |
| 5 | 4 | 1 | 3 | | | 7 | 6 | |
| | | | | 7 | | | | |
| | 6 | 7 | | | 1 | 4 | 3 | 8 |
| | 2 | | | | 6 | 5 | 9 | 4 |
| | | 4 | 9 | | | | | 2 |
| | | | | 2 | 7 | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 5 | 4 | 7 | 8 | 2 | 9 |
| 5 | 9 | 2 | 3 | 8 | 1 | 7 | 6 | 4 |
| 4 | 7 | 8 | 6 | 9 | 2 | 1 | 3 | 5 |
| 6 | 5 | 9 | 4 | 1 | 3 | 2 | 7 | 8 |
| 3 | 4 | 1 | 2 | 7 | 8 | 9 | 5 | 6 |
| 2 | 8 | 7 | 9 | 6 | 5 | 3 | 4 | 1 |
| 7 | 6 | 4 | 8 | 2 | 9 | 5 | 1 | 3 |
| 9 | 1 | 3 | 7 | 5 | 6 | 4 | 8 | 2 |
| 8 | 2 | 5 | 1 | 3 | 4 | 6 | 9 | 7 |



பாதுகாப்பு சேவைகள் கல்லூரிக்கான ஐந்து மாடிக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்லூரிக்கான தரச் சான்றிதழை கல்லூரி அதிபர் புபுதித்த விக்கிரமசிங்கவிடம் வழங்கினார். அருகில் பிரதி அமைச்சர் மொகான் லால் கிரேரோ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் காணப்படுகின்றனர்.

# வடக்கில் படைக் குறைப்பு எப்போதும் நடைபெறாது

## உறுதியாகக் கூறினார் கோத்தபாய

தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதை தடுப்பதற்காவே வடக்கில் இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை எந்தவொரு சூழ்நிலையிலும் இலங்கை அரசு, கலைக்கவோ, குறைப்புச் செய்யவோ மாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினர் அதனைக் களமாகப் பாவித்து. இராணுவத்தில் படைக்கலைப்பைச் செய்யுமாறு இராஜதந்திர முனையில் அழுத்தங்களைக் கொடுத்தாலும், அது மட்டும் நடக்காது என்று கோத்தபாய குறிப்பிட்டதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**நாட்டில் புரட்சியை ஏற்படுத்த முயற்சி**

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த கொழும்பிலுள்ள நோர்வே மற்றும் பிரிட்டன் தூதர்கள், இராணுவத்தில் படைக்கலைப்புச் செய்வது சாத்தியமா என்று யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் அவர்களின் திட்டத்தின்படி, ஐ.நா. மனிதஉரிமைகள்ஆணையாளர் நவநீதம்பிள்ளை கூட, படைக்கலைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார். பெரியளவிலான படைக்கலைப்பு, ஒரு பெரிய சமூக எழுச்சியை ஏற்படுத்தும்.

**பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும்**

எந்தவொரு விவேகமுள்ள அரசும், போர்க்களத்தில் உயிரைப் பணயம் வைத்துப் போராடிய படையினரை வீட்டுக்கு அனுப்புமா? படைக்கலைப்பு நாட்டில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தும். அரசியல் கொந்தளிப்பையும், சமூக பொருளாதார உறுதியற்ற நிலையையும் உருவாக்கும்.

ஒரு வேளை, படையினரை வீட்டுக்கு அனுப்பி வைத்து. மிகப்பெரிய நெருக்கடிக்குள் எம்மைச் சிக்க வைக்கலாம் என்று விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்கள் எதிர் பார்க்கிறார்கள். போருக்குப் பிந்திய மீட்புத் திட்டங்களில் ஆயுதப்படைகள் பணியாற்றுகின்றன. அவர்களினால் எல்லா சமூகங்களும் பயனடைகின்றன. பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும்எதையும்இலங்கை அரசு முன்னெடுக்காது.

**அமெரிக்காவே படைக் குறைப்புச் செய்யவில்லை**

அமெரிக்கா தனக்கு நெருக்கமான கூட்டாளி நாடுகளின் பாதுகாப்புக் குறித்து மட்டுமே கரிசனை கொள்கிறது. போர் முடிவுக்கு வந்த பின்னர், யாழ்ப்பாணத்தில் இராணுவத் தலையீடுகள்குறைக்கப்பட்டது குறித்துஅமெரிக்கா நன்றாகவே அறியும்.

ஆனாலும், வடக்கு மாகாணத்தில் போர்க் காலத்தில் உள்ளது போன்று படையினர் நிலைகொண்டுள்ளது போன்றே அவர்களின் தற்போதைய கருத் துக்கள் அமைந்துள்ளன. தமது குடிமக்களினதும், கூட்டாளி நாடுகளினதும் பாதுகாப்புக்காக அமெரிக்கா தனது படைகளைதனதுநாட்டு எல்லைகளுக்குவெளியே நிறுத்தி வைத்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்றிணையும் முயற்சிகளை மேற்கொள்ள மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, எமது படையினரை நாம் நிறுத்தி வைத்துள்ளதை, மட்டும் அவர்களால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை?-என்றார்.(ச-5)

# பயங்கரவாதம் தலைதூக்க அரசு இடமளிக்க மாட்டாது

## நாமல் எம்.பி. கூறுகிறார்



நாமல் எம்.பி.

நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க அரசு இடமளிக்காது. சர்வதேசசூழ்ச்சித்திட்டங்களைமுறியடிப்பதற்கு ஆளும் கட்சியின் கரத்தைப் பலப்படுத்த வேண்டியது அவசியமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். கெஸ்பேவா பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மீண்டும் பயங்ரவாதம் தலைதூக்க வேண்டும் என்பதே சிலரின் நோக்கமாக அமைந்துள்ளது.

மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க அரசு ஒருபோதும் இடமளிக்காது. நாட்டில் பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. தேர்தலில் மக்கள் எடுக்கக்கூடிய தீர்மானம் குறித்து சர்வதேசசமூகம் கண்காணித்து வருகின்றது-என்றார். (ச)

# தேசிய சிவராத்திரி இரத்தினபுரியில்

## இந்து கலாசார திணைக்களம் ஏற்பாடு

*கொழும்பு,பெப்.27*

*இந்து சமய கலாசார திணைக்களமும், இரத்தினபுரி இந்து பரிபாலன சபையும் இரத்தினேஸ்வரம் சிவன் கோவில் நிர்வாக சபையும் இணைந்து நடத்தும் தேசிய சிவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை இரத்தினபுரியில் நடைபெறவுள்ளது.*

*இன்றைய தினம் காலை கோவிலில் வசந்த மண்டப திறப்பு விழாவும், கொடிக்கம்பம் நட்டு வைத்தலும் இடம்பெறும்.*

*இந்த நிகழ்வில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன, புத்த சாசன மத விவகார பிரதி அமைச்சர் எம். கே. ஏ. டி. எஸ். குணவர்தன ஆகியோர் கலந்துகொள்வர். (ச)*

31ஆம் நாள் நினைவஞ்சலி
அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
நாகப்பு நல்லையா
[ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், விவாகப் பதிவாளர்]

உதயம்
30★05★1942

அஸ்தமனம்
28★01★2014

கடந்த 28.01.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் நாகப்பு நல்லையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.02.2014) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி ஆராதனையிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வேளையில் உதவி செய்த அனைவருக்கும் காலமான செய்தி கேட்டு நேரிலே வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், நினைவு மலரை வெளியிட அயராது உழைத்த திருமதி பிரேமா மதுரநாயகம்(உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும் படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

"பிரகஸ்பதி"
மாலாவத்தை, புலோலி வடமேற்கு,
புலோலி.021 226 3984
குடும்பத்தினர்.
(சி/12595)(3.6.4)

4ஆம் வருட நினைவஞ்சலி

திருமதி வசந்தாதேவி தண்டாயுதபாணி



தாய் மடியில்
30.07.1939

இறைவன் மடியில்
27.02.2010

அன்பு உள்ளங்களில்
என்றென்றும்
நிறைந்திருக்கும் தேவி......

நீங்கா நினைவுடன்:
கணவர், உறவினர்கள்.
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
(20774)(12)(6)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராசையா ஜெயகோபால்
( தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்-1 பௌதீகவியல்துறை விஞ்ஞான பீடம்-யாழ் பல்கலைக்கழகம்)

தோற்றம்
28★06★1961

மறைவு
27★02★2012

அறிவில் ஆதவனாய் எமக்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷமே
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் மாறாது உங்கள் நினைவுகள்
ஆயிரம் உறவுகள் எம்மோடு இருந்தாலும் உங்களைப் போல்
இனி தொன்று காணோம் நியாயமான பேச்சும் எதற்கும்
அஞ்சா நெஞ்சமும் கொண்டவரே
இறைவனின் குரல் கேட்டு சென்றீர்களோ!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.
(45030)(3.6.4)

என்றும் நீங்கா நினைவுகளுடன்
அன்பு மனைவி

# செட்டிகுளம் பிரதேச சபை அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2014

முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தினால் 01.01.2013 செட்டிகுளம் பிரதேச சபைக்கு அனுமதிக் கப்பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாக கீழ்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொது நிபந்தனைகள்:

01. இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதியம் உரித்துடையதும் ஆகும்.
02. ஊழியர் விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஒய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத்தகைமைகள்:

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கும் மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஒய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பாக உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி செட்டிகுளம் பிரதேச சபை எல்லைக்குள் 03 (மூன்று) வருடங்களுக்கு குறையாத நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் பிரதேசசெயலாளர் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)
05. தொழிநுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங் களையும் கொண்டிருத்தல் வேண்டும்.
06. ஏற்கனவே பிரதேச சபையில் ஒப்பந்த,தற்காலிக,அமைய அடிப்படையில் கடமைபுரிபவர்களும் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படும் முறை அரச சேவை மாகாண ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சை ஒழுங்கு விதிக்கமைய ஒழுகுதல் வேண்டும்.

விண்ணாப்பிக்கும் முறை:

01. செட்டிகுளம் பிரதேசசபையின் பிரதான அலுவலகத்தில் ரூபா 100.00 இனைச்செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப்பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
02. விண்ணப்பப்படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக்கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு செயலாளர், செட்டிகுளம் பிரதேச சபை, செட்டிகுளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 19.03.2014 இற்கு முன் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுதிகதிக்கு (19.03.2014) பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
05. ஆள் சேர்ப்புத்திட்ட விதிகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, பின்னரோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத்தெரியவரும் எச்சந்தார்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 19.03.2014

**பதவி வகை: 01**

| தொ. இல. | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | காரியாலய காரியசகாயர் - தரம் III | 02 |
| 02 | நூலக பரிசாரகர் - தரம் III | 01 |

கல்வித்தகைமைகள்:

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங் கலாக ஆகக்குறைந்தது ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் (05)ஐந்து பாடங்கள் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

மாதாந்த அளவுத்திட்டம்
24.08.2007 ஆம் திகதிய சுற்றிக்கை.
இலக்கம் 06 / 2006 (IV) இதற்கமைவாகPL- 1 - 2006 - A (11730 - 120 x 10 - 130 x10 - 145 x 10 - 160 x 12 - 17600)

**பதவி வகை: 02**

| தொ. இல. | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 03 | வேலை/வெளிக்களத் தொழிலாளி | 03 |
| 04 | சுகாதாரத்தொழிலாளி | 07 |

கல்வித்தகைமைகள்

கௌரவ ஆளுனரினால் அனுமதியளிக்கப்பட்டபடி தரம் 08 கல்வித்தகைமையாகக்கொள்ளப்படும்.

மாதாந்த சம்பள அளவுத்திட்டம்
24.08.2007 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றிக்கை.
இலக்கம் 06 /2006 (02) (IV) இதற்கமைவாக PL - 1 - 2006 - A (11730 - 120 x 10 - 130 x10 - 145 x 10 - 160 x 12 - 17600)

**பதவி வகை: 03**

| தொ. இல. | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 05 | மின்னிணைப்பாளர் - தரம் III | 01 |
| 06 | ஆயுள்வேத மருந்தாளர் (டிஸ்பென்சர்) - தரம் III | 01 |

கல்வித்தகைமைகள்:

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.ஒரே தடவையில் (05)ஐந்து பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமைகள்:

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதி திகதி அன்று 06 மாதங்களுக்கு குறையாதவகையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில், கல்வி நிறுவனத்திலிருந்து துறைசார் பயிற்சிசான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் தேவை ஏற்படின் தொழில் தகைமை பரிசீலிக்கப்படும்.

மாதாந்த அளவுத்திட்டம் 24.08.2007 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றிக்கை
இலக்கம் 06 /2006 (IV) இதற்கமைவாக PL - 2 - 2006 - A (12210 - 130 x 10 - 145 x 10 - 160 x 10 - 170 x 12 - 18600)

**பதவி வகை: 04**

| தொ. இல. | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 07 | சாரதி - தரம் III | 04 |

கல்வித்தகைமை:

கௌரவ ஆளுனரினால் அனுமதியளிக்கப்பட்டபடி தரம் 08 கல்வித்தகைமையாகக் கொள்ளப்படும்.

ஏனைய தகைமைகள்

1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை / தனியார் மோட்டார்கள் 24 அந்தருக்குக் குறையாத பார ஊர்தி செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று வருடத்திற்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் வாகனசாரதியாக 3 வருட அனுபவத்திற்கான சான்றிதழ்.
3. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 5 அடி $2\frac{1}{2}$ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக்கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையைக் கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெருக்கள் விதிமுறைகள் பற்றிய சிறந்த அறிவைக்கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு:-சாரதி நியமனம் பெறுவோர் குப்பை, மலக்கழிவு அகற்றும் வாகனம் ஆகியவற்றை ஓட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

மாதாந்த அளவுத்திட்டம் 24.08.2007 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றிக்கை
இலக்கம் 06 /2006 (IV) இதற்கமைவாக PL - 3 - 2006 - A (12,470 - 130 x 10 - 145 x 10 - 160 x 10 - 170 x 12 - 18,860)

**பதவி வகை: 05**

| தொ. இல. | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 08 | கனரக இயந்திரம் இயக்குநர் - தரம் III | 02 |

கல்வித்தகைமைகள்:

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் (05)ஐந்து பாடங்கள் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமைகள்:

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதிதிகதி அன்று 06 மாதங்களுக்கு குறையாதவகையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் ,கல்வி நிறுவனத்திலிருந்து துறைசார் பயிற்சிசான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தேவை ஏற்படின் தொழில் தகைமை பரிசீலிக்கப்படும்.

மாதாந்த அளவுத்திட்டம் 24.08.2007 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றிக்கை
இலக்கம் 06 /2006 (IV) இதற்கமைவாக PL - 3 - 2006 - A (12,470 - 130 x 10 - 145 x 10 - 160 x 10 - 170 x 12 - 18,860)

சுப்பிரமணியம் விஜயதாஸ்,
செயலாளர்,செட்டிகுளம் பிரதேசசபை,

திகதி.25.02.2014

(சி.12303) (45.6)

# 1,500 வீடுகள் சம்பூர் மக்களுக்கு

## இந்தியத் திட்டத்தை வழங்குமாறு பிரதியமைச்சருக்கு ஆலோசனை



*பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான சுசந்த புஞ்சி நிலமே அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்து ரையாடினார்.*

திருகோணமலை,பெப்.27

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் வேண்டுகோளுக்கிணங்க திரு கோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் மற்றும் மூதூர் பகுதியில் 1500 வீடுகள் நிர்மாணிக்க அனுமதி கிடைத்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு நடை பெற்ற போரால் இடம்பெயர்ந்து தற்போது சம்பூர், பட்டித்திடல், கிளி வெட்டி இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களை மீள்குடிய மர்த்தும் திட்டம்குறித்து பொருளா தார அபிவிருத்தி அமைச்சில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலை மையில் ஆராயப்பட்டது.

கடந்த காலப் போரால் மூதூர் பிர தேச செயலர் பிரிவுகளில் பாதிக் கப்பட்ட தமிழ், முஸ்லிம் ; சிங் கள மக்களுக்காக இந்திய அர சால் வடபகுதி மக்களுக்காக வழங் கப்படும் இந் திய வீட்டுத்திட்டம் போன்று மூதூர் பிரதேசத்தி லுள்ள மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று திருகோண மலை மாவட்ட அபிவிருத்தி குழு வின் தலைவரும், பொருளா தார அபிவிருத்தி பிரதி அமைச்சரு மான சுசந்த புஞ்சி நிலமே, ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச் சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோ ரிடம் தொடர்ச்சியாக விடுத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதனையடுத்து, தற்போது இடை தங்கல் முகாம்களில் உள்ள மக்க ளுக்கு இந்திய அரசால் வழங் கப்ப டும் வீட்டுத்திட்டங்களை வழங்கு மாறு பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமைக்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. (ச)

# சாய்ந்தமருது கடற்கரையில் மீட்கப்பட்ட மர்மப்பொருள்



*மர்மப் பொருளைப் பார்வையிடும் படையினர்.*

*சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை அந்தப் பகுதி மீனவர்களால் இந்தப் பொருள் அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து கல்முனைப் பொலி ஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் புலனாய்வுப் பிரிவினரும் சம்பவ இடத்துக்குச் சென்று மர்மப் பொருள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.*

*இந்த மர்மப் பொருள் இந்தியாவில் பாவிக்கப்படும் கண்ணீர்ப் புகைக் குண்டாக இருக்கலாம் என்று விசேட அதிரடிப் படையினர் சந்தேகிக்கின்றனர்.*

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஒருவர் சிக்கினார்

கல்முனை,பெப்.27

கல்முனை பொலிஸ் பிரிவில் திருட்டு மின்சாரம் பெற்ற ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய் யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து வந்த இலங்கை மின்சார சபையின் விசேட சோத னைக் குழுவினரும் தாமும் இணைந்து நடத்திய பரிசோதனையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவரை கல் முனை நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்தியபோது அவர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். எதிர்வரும் 18 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று பொலி ஸார் கூறினர். (ச)

# பாலச்சந்திரன், இசைப்பிரியா பற்றியும் நவிப்பிள்ளையின் அறிக்கை பேசுகிறது

ஜெனிவா, பெப்.27

மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மனித உரிமை சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில், இறுதிப் போரின் போது படைகளிடம் சரணடைந்த போராளிகள், புலிகளின் தலைவர் பிரபாகரனின் புதல்வர் பாலச்சந்திரன், கேணல் ரமேஷ், புலிகளின் ஊடக தொடர்பு பிரிவு பணியாளர் இசைப்பிரியா மற்றும் பலர் கொலையுண்ட விடயங்கள் தொடர்பாக சனல்-4 வெளியிட்ட ஆவணப்படங்கள், அவைகள் தொடர்பான இலங்கை அதிகாரிகளின் பிரதிபலிப்புகள் குறித்தும் தெரிவித்துள்ளார்.



பாலச்சந்திரன்

இந்த விடயங்கள் தொடர்பான இலங்கை அரசின் செயற்பாடுகள் திருப்தியில்லாமையால் சர்வதேச விசாரணை பொறிமுறையொன்று அமைக்கப்படும் பட்சத்தில் இவை பற்றியும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகவே அறிக்கையில் இவை சேர்க்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

சிறைக் கைதிகள் மற்றும் சரணடைந்தவர்கள் கொலை செய்யப்பட்டமை என்ற தலைப்பில் அவர் குறிப்பிட் டிருப்பதாவது:- 2009 ஆம் ஆண்டு ஆயுத மோதல் முடிவுக்கு வந்ததன் பின்னர் போரின் இறுதிக் காலச் சம்பவங்கள் தொடர்பான ஒளிப் படங்களும் வீடியோப் படங்களும் வெளியாகியுள்ளன. அவை கைதிகள் சரணடைந்த பின்னர் அல்லது பாதுகாப்புப் படைகளின் காவலில் இருந்த போது அவர்கள் கொல்லப்பட்டனர் என்பதைக் காண்பிக்கின்றன.

2011 ஜூன் மாதம் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மனித உரிமைகள் சபைக்கு தொழில்நுட்ப அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார். 2009 ஒகஸ்ட் 4 ஆம் திகதி சனல்-4 வெளியிட்ட வீடியோ காட்சியின் உண்மைத்தன்மையை வெளிக்காட்டுவதாக அது இருந்தது. 2009 செப்ரெம்பரில் அரசு தனது சொந்த தொழில்நுட்ப ஆய்வு முடிவுகளை அறிவித்தது. அதில் சிறப்பு அறிக்கையாளரின் கண்டுபிடிப்புக்களை கேள்விக்குரியதாக்கியிருந்தது.

இதற்கு பதிலாக சிறப்பு அறிக்கையாளர் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ளவென சுயாதீன நிபுணர் குழுவை நியமித்தார். அந்தக் குழு முதலில் கண்டறியப்பட்டவைகளை உறுதி செய்தது. இந்த விடயம் தொடர்பாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது உண்மைத்தன்மை குறித்து ஒரு முடிவுக்கு வராத நிலையில் மேற்கொண்டும் ஆய்வுகள் நடத்துமாறு அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. இந்த விடயம் இப்பொழுது இராணுவ நீதிமன்றத்தின் ஆய்வில் இருப்பதாக அரசு கூறுகிறது. அதன் முடிவுகள் இன்னமும் வெளிவரவில்லை.

**பாலச்சந்திரன் பற்றிய படங்கள்**

2013 பெப்ரவரியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் இலங்கைப் படைகளின் காவலில் பதுங்குக் குழியொன்றின் மேல் உயிருடன் அமர்ந்திருப்பதைக் காட்டும் படங்களும் அதன் பின்னர் இறந்த நிலையிலான அவரது உடல் மார்பில் குண்டுகள் துளைத்திருந்த படங்களும் தொடர்ச்சியாக வெளிவந்திருந்தன. ஒரு சில மணிநேரம் முன் பின்னராக ஒரே கமராவால் இந்தப் படங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

**கேணல் ரமேஷ் தொடர்பான படங்கள்**

சனல்-4 மற்றும் வேறு வகையான வீடியோ மற்றும் புகைப் படங்களில் ரி.துரைராஜசிங்கம் (கேணல் ரமேஷ்) இலங்கை இராணுவத்தினரால் விசாரிக்கப்படுவது காட்டப்படுகின்றது. பின்னர் அவரது சிதைவுற்ற உடலின் படம் வெளியாகி யுள்ளது. கேணல் ரமேஷின் நிலைமை குறித்த சாட்சியங்களும் ஆதாரங்களும் அவர் பாதுகாப்புப் படைகளின் காவலில் இருந்த போதே கொல்லப்பட்டார் என்பதாக காட்டுகின்றன.

**இசைப்பிரியாவின் படுகொலை**

தமிழீழ விடுதலைப் புலிகளின் பத்திரிகை மற்றும் தொடர்பாடல் பிரிவின் உயர்மட்ட உறுப்பினர் சோபனா (இசைப்பிரியா) வின் கொலை பற்றிய சனல்-4 புகைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் அவர் விசாரணையின்றி அந்த இடத்திலேயே படையினரால் கொல்லப்பட்டார் என்பதைக் காட்டுவதாக இருக்கின்றனவென்று சிறப்பு அறிக்கையாளர் அறிவித்துள்ளார். வீடியோ மற்றும் படங்களில் காட்டியிருப்பதன்படி அவரது மேலாடைகள் இழுத்து ஒதுக்கப்பட்டு அவரது வெறும் மேனி தெரியும்படி செய்யப்பட்டிருந்துள்ளது. 2013 நவம்பரில் சனல்-4 வெளியிட்ட படங்களில் இராணுவத்தால் அவர் உயிருடன் பிடிக்கப்படுவது காட்டப்பட்டுள்ளது.



இசைப்பிரியா

மேற்கூறிய மூன்று சம்பவங்கள் தொடர்பாகவும் அரசு வெளியிட்ட கருத்துக்களில் குறித்த படங்களும் நிகழ்வுகளும் உறுதிபடுத்தப்படாமலும் நிரூபிக்கப்படாமலும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெள்ளைக்கொடி சம்பவங்கள்**

2009 மே 18 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்க உயர்மட்டத் தலைவர்கள் பத்திரமாக சரணடையலாம் என்று அரசு உறுதி வழங்கியிருந்த நிலையிலும் சட்டவிரோதமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்களை செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழு ஆராய்ந்துள்ளது.

அரசின் உயர்மட்ட அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் பொதுக் கூட்டங்களிலும், சர்வதேச மேடைகளிலும் இது பற்றி முரண்பாடான விவரங்களை வெளியிட்டுள்ளார்கள்.

குறித்த சம்பவம் பற்றிய பின்புலம் தெளிவில்லாது போனாலும் புலிகள் அமைப்பின் தலைவர்கள் சரணடைய விரும்பினார்கள் என்பதான முடிவுக்கு நிபுணர்குழு வந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான ஆதாரங்கள் தற்போது நாட்டுக்கு வெளியிலுள்ள தரப்புகளிடமிருந்து வந்துகொண்டே இருக்கின்றன.

வெள்ளைக்கொடி சம்பவம் குறித்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது தர்க்க ரீதியில் அலசவோ புலனாய்வு செய்யவோ தவறியிருக்கிறது. ஆனால் இராணுவ ஜெனரல்கள் மற்றும் அரச அதிபர்களின் சாட்சியங்களை குறிப்பிட்டுள்ளது. அவர்கள் இந்தக் குற்றச் சாட்டுகளை நிராகரித்துள்ளார்கள்.

இதுபற்றி அரசு வெளியிட்ட கருத்தில் நம்பகமான சாட்சியங்கள் இல்லாமையால் மேற்கொண்டும் விசாரணைகள் நடத்தப்படவில்லை என்று அறிவித்துள்ளது. (ப)


## மரணஅறிவித்தல்



### நாராயணபிள்ளை சுப்பிரமணியம்

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், 39/1, மெல்போட் கிரசென்ட், தெஹிவளை என்ற முகவரியை வதிவிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் (25-02-2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், நவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிமலராஜ் (ராஜூ - பிரான்ஸ்), நாகரஜனி(ரஜனா- கொழும்பு), முத்துக்குமார் (ரவி- சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணானந்தராசா (பிரிவு உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), கலாரஞ்சனி (பிரான்ஸ்), வனஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரஷாந் (பிரான்ஸ்), பிரஷன்யா (Associate Q.A Engineer),பிரதீஷா, (உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி), விதுஷாந், யனுஷாந், டினூஷா (பிரான்ஸ்), மிதுஷா, பத்மிஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்றைய தினம் புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் 39/1, மெல்போட் கிரசென்ட், தெஹிவளை என்ற முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (27-02-2014) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : கருணானந்தராசா ( மருமகன் )
தொலைபேசி : 0112716314,0775554710

(C/12248)(2.6)


# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## கூட்டமைப்பின் தலைவருக்கு ரெலோ கடிதம்

அம்பாறை, பெப்.27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை மிக விரைவாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இந்தக் கோரிக்கை விடுக்கபட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் எதிர் நோக்கி நிற்கும் மிக முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விவாதித்து, தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

கடந்த வடமாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் ஒரேயொரு முறை நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் இதுவரையில் கடந்த நான்கு மாதங்களாக எந்தவொரு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் கூட்டப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக எமது மக்கள் மத்தியில் பல்வேறுதரப்பட்ட அபிப்பிராயங்கள் மேலெழுத் தொடங்கியுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)


## மரண அறிவித்தல்



### சின்னப்பு நல்லையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கலைவாணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு நல்லையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (26.02.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், வெள்ளிமலையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, மகாலிங்கம், திரவியம், சரஸ்வதி மற்றும் கனகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், கலாவதி, குமாரராஜன், சந்திரிகா, சுசீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரகுலிங்கம், ஜெயமலர், திருச்செந்தூர் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ணுப்பிரியா, செந்தூரன், மதுஷா, மயூரன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்றவர்களான நல்லூரான், கிருஷ்ணசாமி, முருகையா மற்றும் சிவசிதம்பரம், விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

(45124)(12.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# அம்பலமாகின்றன புலிகள்மீது சுமத்திய பொய் குற்றச்சாட்டுகள்

*போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் அறிக்கை மூலம் என்கிறார் அனந்தி சசிதரன்*

யாழ்ப்பாணம்,பெப்.27

மாவிலாறு விவகாரத்தை தீர்த்து வைப்பதில் இலங்கை அரசு ஆர்வமோ அக்கறையோ கொண்டிருக்க வில்லை. இதுவே பிரச்சினை முற்றுவதற்கு காரணம் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹென் றிசன் குறிப்பிட்டுள்ளமைக்கு நன்றி சொல்வதாகத் தெரிவித்துள்ள திருமதி அனந்தி சசித ரன் இதன்மூலம் தனது கணவர் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் சுமத்தப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுக்கள் அம்பலப் படுத்தப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

விடுதலைப்புலிகள் மாவிலாறை பூட்டியமையே மீண்டும்போர் ஆரம்பமாக காரணமாக இருந்ததாக பரப்புரை செய் யப்பட்டு வருகின்றது. "இந்த விவகாரங் களில் தொடர்புபட்டவராக எனது கணவரும் அப் போதைய திருமலை மாவட்ட அரசியல்துறை பொறுப் பாளராக இருந்தவருமான எழிலனின் செயற்பாடுகளை சிலர் அண்மைக்காலமாக மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்று விமர்சித்து வருகின்றனர்.

இத்தகைய அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களுக்கும் பதிலளிப்பதாகவே, இலங்கையின் முன்னாள் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் தலைவர் உல்ப் ஹென் றிசன், சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி அமைந்துள்ளது. மாவிலாறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அப்போது எனது கணவர் விடுதலைப் புலிகளது தலைமையின் பணிப்புரைக்கு ஏற்ப முக்கிய பங்களிப்பு செய்திருந்தார். அந்தக் காலப் பகுதியில் இரு தரப்புகளிடையேயும் இணக்க நிலையை ஏற்படுத்த கடுமையாகப் பாடுபட்டவர் போர் நிறுத்தக்கண் காணிப்பு குழு தலைவர் உல்ப் ஹென் றிசன். உண்மையில் இலங்கை அரசு தமிழ் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளைக் கூடத் தீர்த்து வைக்க விருப்பம் கொண்டிருக்க வில்லை. அதனாலேயே மாவிலாறு பிரச்சினையை தீர்த்து வைக்காது கைவிட்டதுடன், வீணான சீண்டல்களிலும் ஈடுபட்டு போரை மீள ஆரம்பிக்க இலங்கை அரசே காரணமென்பது தெளிவுபட அம்பலமாகியுள்ளது. எனது கணவர் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் சுமத் தப்பட்ட பொய்க்குற்றச்சாட் டுக்கள் இதன் மூலம் அம்பலப்படுத்தப்படுகின்றன. சுமார் எட்டு வருடங்கள் கடந்துவிட்ட போதும் தனது மனச்சாட் சிப்படி உண்மைகளை கூறிய இலங்கையின் முன்னாள் போர் நிறுத்தக்கண் காணிப்பு குழுத் தலைவர் உல்ப் ஹென்றி சனுக்கு நன்றிகளைத் தெரி விப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## சாயி பஜனை

பருத்தித்துறை சத்திய சாயி சேவா நிலை யத்தினரின் சாயி பஜனை நிகழ்வு நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை கைதடி முதியோர் இல்லத்தில் இடம்பெற்றது. இல்லத்தில் தங்கி யுள்ள முதியோரின் உள ஆற்றுகைக்காக நடத்தப் பட்ட பஜனையில்அனைவரும் கலந்து கொண்டனர். (ஓ-9)


## TRADE FINANCE & INVESTMENTS PLC

(Registered with the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No. 78 of 1988)

KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI.

### பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு

| Model | Reg. No. |
|---|---|
| ROAD MATE OPEN TRUCK | NPQY-3830 |
| CB TWISTER - HONDA | NPXU-9694 |
| HF-DELUXE | NP BAN-4285 |
| YAMAHA-SZ | NPXZ-5935 |
| HF-DELUXE | NPBAI-4840 |
| TRACTOR-MF135D | 36SRI0943 |
| LORRY-ISSUZU | 26-5162 |
| PLEASURE-HERO | NPBAA-6385 |
| PLEASURE-HERO | NPBAC-6689 |
| TRACTOR -MF240 | 37-9401 |
| APACHE-TVS | NP BAK-9669 |
| PASSION-PRO | NP BAD-9582 |
| DISCOVER-125 | NP BAD-3925 |
| HF-DELUXE | NPXY-8310 |

(43534)(10.6)

★ பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

★ திங்கள்-வெள்ளி வரை கிளிநொச்சி கிளையில் (8 a.m-5.30 p.m)

மேலதிக விவரங்களுக்கு:

**021 228 0110, 021 228 0108**



## ST.JOHN'S COLLEGE, JAFFNA.
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.
THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY

ADMISSION-2015 FOR GRADE 1, GRADE 4, GRADE 6, GRADE 10 & A/L

### தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2015

01. அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 03.03.2014 முதல் 17.03.2014 வரை பெற்றுக் கொள்ளலாம்.
    ஆ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
    இ. விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 25.03.2014 செவ்வாய்க்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்ரோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
03. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அந்தத்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=
05. வயதெல்லைகள்:
    அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2009இற்கும் 31.01.2010இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
    ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2006 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
    இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2004இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
    ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2000இல் அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 12 (A/L-2017 Batch) விண்ணப்பதாரி 01.02.1998இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 11.10.2014 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

1) தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
2) தரம் 12 இற்கு (A/L-2017 Batch) தமிழ்மொழி மூலம் (தொழில்நுட்பத்துறை, விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்), ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/L 2015/2016இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 03.01.2015 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 07.01.2015 ஆரம்பமாகும்.
3) சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ஆங்கில மொழி மூலம் 2017 Batch ) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.
4) The Jaffna Academy and School of Technology இல் Gr.5 மற்றும் 2ஆம் தடவையாக O/L, A/L எடுக்கும் மாணவர்களினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(சி/12309) (7.0) **அதிபர்கள்.**



## குருக்கள் தேவை

கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம் அறியத்தருவது. ஆலயத்திற்கு பிரதமகுருக்கள் தேவை. குருக்கள் பட்டம் தரித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். 30 நாள்களுக்குள் தொடர்பு கொண்டு விவரங்களை நேரிலே தெரியப்படுத்தவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

ஆலய பரிபாலகர் தீபாணந்தன் - 077 652 0315,

தர்மகர்த்தா சந்திரமூர்த்தி - 077 417 3180

**021 226 0052**

(சி12312)(12.6.)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### அழைப்பின் பேரில் பேருந்து ஒன்றினை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், கிளிநொச்சியில் அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல்/விவசாய பீடங்களின் உத்தியோக பூர்வ தேவைக்காக அப்பீடங்களிற்குத் தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு (On Call) ஆங்கில இலக்கப் பதிவுடைய கீழ்க் குறிப்பிட்ட வகை பேருந்து ஒன்றின் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி உதவியாளருடன், எரிபொருள், காப்புறுதி, திருத்தவேலைகள் போன்றவற்றுடன், கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப் படுகின்றது. மேலும் வாகனங்களின் ஆரம்ப கிலோமீற்றர் கணிப்பீடுகள் யாவும் அறிவியல்நகரில் அமைந்துள்ள பீடங்களில் இருந்து கணிப்பீடு செய்யப்படும்.

### பேருந்து ஆசன எண்ணிக்கை 54 அரை சொகுசு

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக வாகனம் ஒன்றிற்கு ரூபா 1000.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கிளிநொச்சியில் அறிவியல்நகரில் அமைந்துள்ள பிர்திப் பதிவாளர்/பொறியியல் பீட அலுவலகத்தில் மேற்படி பணத்தினைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 2014.03.11 பி.ப. 03.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியுள் இடலாம். கேள்விப்பத்திரப்படிவம் மற்றும் நிபந்தனை விவரங்களை நிர்வாகக் கிளையில் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம் அல்லது கிளிநொச்சியில் அறிவியல்நகரில் அமைந்துள்ள பிரதிப்பதிவாளர்/பொறியியல் பீட அலுவலகத்தில் பார்வையிடலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி12308)(12.6.) **பதிவாளர்**



அருள்மழை பொழியும் சிவபெருமானின் சிவராத்திரிப் பெருவிழா இந்த ஆண்டும் திருக்கேதீஸ்வரத்தில் சிறப்பாக நடைபெற பிரார்த்திக்கின்றோம்



## ஆச்சி பூட் சென்ரர்
**117, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**

Tel: 021 222 2092

**திருமண, பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் பாடசாலைகள், கல்வித் திணைக்களங்கள் போன்றவற்றில் நடைபெறும் வைபவங்களுக்கு எம்மிடம் குறைந்த விலையில் தரமாகவும் சுவையாகவும் உணவுகளைப் பெற்றுக்கொள்ளலாம். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு எமது சேவையினை திறம்பட தொடர முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.**

(சி/14778) (45.6)

மாநகரசபை எல்லைக்குள் இலவச விநியோகம்

## ஆச்சி கொட் பூட்
**கைதடி கிழக்கு, கைதடி.**

Tel: 021 205 7455/ 077 329 4341

## வெற்றி, தோல்வியை மாணவர் சமமாகப் பார்க்க வேண்டும்

### உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

மாணவர்கள் மத்தியில் நடத்தப்படுகின்ற மெய்வன்மைப் போட்டிகளின் போது வெற்றி தோல்விகளைச் சரிசமமாகப் பார்க்கின்ற பண்பு மாணவர்கள் மத்தியில் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.தர்மபாலன்.

முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அதிபர் பா.நேசராசா தலைமையில் இடம்பெற்ற போது அங்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் உரை நிகழ்த்தும் போது இன்றைய இந்த மெய்வன்மைப் போட்டிகளைப் பார்க்கின்ற போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. இந்தச் சிறார்களுடன் இணைந்து பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளனர். ஆனால் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்த விளையாட்டு நிகழ்வின் போது மாணவர்கள் மத்தியில் பொறாமையை வளர விடாது பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் வெற்றி தோல்விகளைச் சரியாகப் புரிந்து கொள்ளும் வகையில் விடயங்களை அறிவுறுத்த வேண்டும். இந்த வகையில் முன்பள்ளி சிறார்களுக்கும் முக்கிய இடம் கொடுத்து அவர்களையும் விளையாட்டு நிகழ்வில் பங்கு பெற வைத்த பாடசாலை அதிபர் மற்றும் விளையாட்டுக் குழு நிர்வாகிகளுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

> மாணவர்கள் மத்தியில் பொறாமையை வளர விடாது பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் வெற்றி தோல்விகளைச் சரியாகப் புரிந்து கொள்ளும் வகையில் விடயங்களை அறிவுறுத்த வேண்டும்.

இனிவரும் காலங்களிலும் விளையாட்டு நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற வாழ்த்துகின்றேன் என்று தெரிவித்தார். (க-421)


## உதயனின் சூரியகாந்தி பரிசு மழை வெற்றியாளர்கள்

சூரியகாந்தியின் கொண்டாடுங்கள் குதூகலியுங்கள், பரிசு மழையில் போட்டித் தொடரின் கடந்த 16 ஆம் திகதிய போட்டியின் வெற்றியாளர்களுக்கான பரிசுக் கூப்பன் வழங்கும் நிகழ்வு நேற்று புதன் கிழமை உதயன் பணிமனையில் நடைபெற்றது. பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 50 வெற்றியாளர்களுக்கு பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்றவர்களில் சிலர் கருத்து தெரிவிக்கையில், வாசிப்பதற்கு ஆர்வம் குறைந்திருப்பவர்களும் இவ்வாறான போட்டிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் வாசிப்பில் அதீத ஈடுபட்டினை செலுத்துவர். எமக்கும் போட்டிகளில் கலந்துகொள்ள முடிவதோடு பத்திரிகை வாசிப்பதிலும் ஆர்வமாக உள்ளது எனத் தெரிவித்தனர்.

இவர்களுக்கான பரிசுகளை நல்லூர் அன்னை நாகா பூட்சிற்றி, யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டல், உடையார்கட்டு தாய் அன்பு புத்தக சாலை, புதுக்குடியிருப்பு பொதிகை மல்ரி சென்ரர், முல்லைத்தீவு அறிவொளி புத்தகசாலை, மின்சார நிலைய வீதி ராசி செலக்ஸன், யாழ்ப்பாணம்கிருபாலேணார்ஸ், பருத்தித்துறை வீதி செந்தூர்க் குமரன் களஞ்சியம், கோப்பாய் லக்கி பான்ஸி ஹவுஸ், கோப்பாய் முருகன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால் கண்ணன் களஞ்சியம், நெல்லியடி கோகில்ஸ் பேபி நீட்ஸ், யாழ்ப்பாணம் லலிதா ஜுவலறி ஆகிய நிறுவனங்கள் வழங்கியிருந்தனர்.

பரிசுக் கூப்பனில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பரிசுத் தொகைக்குப் பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-10-20)



பிரதம ஆசிரியரிடம் இருந்து பரிசு பெறும் மாணவி



பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனுடன் வெற்றியாளர்கள்

## ஒட்டுசுட்டான் செல்லும் ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடியில்

### ஒழுங்கான பஸ் சேவை இல்லாமையே காரணம்

கிளிநொச்சி, பெப்.27

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு பிற இடங்களில் இருந்து ஆசிரியர்கள் சென்று வருவதில் இடர்கள் காணப்படுகின்றன.

சுமார் 60 ஆசிரியர்கள் வரையில் தினமும் இங்கு வந்து கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரச பணியாளர்களுக்கான பஸ் சேவைகள் மாங்குளம் வழியாக துணுக்காய்க்கு மட்டுமே இடம்பெறுவதால் மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட் டான் பகுதிக்குச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள்இடர்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், முத்துஐயன்கட்டிலுள்ள பாடசாலைகள் ஆகியவற்றுக்குப் பணி நிமித்தம் செல்லும் ஆசிரியர்களும் , உத்தியோகத்தர்களும் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் இடம்பெறும் அரச பஸ் சேவை ஒழுங்காக இடம்பெறாத காரணத்தால் இவர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்வதுடன் மாங்குளம் சந்தியில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவலத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர். (க-18)



புதுமாத்தளன் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் யூ.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தின் 3.8. மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட ஆறு வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத்தை மேற்படி நிறுவனத்தின் கிளிநொச்சி அலுவலகத்தின் பொறுப்பாளர் மெரின் டின் கஜ்டோம் கஜ் நேற்று முன்தினம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (க)

## கல்லாவில் குளத்துக்கு நீர்

பூநகரி, பெப்.27

பூநகரியிலுள்ள கிராஞ்சி கிராமத்தில் உள்ள கல்லாவில் குளத்தை புனரமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கரியாலை நாகபடுவான் குளத்திலிருந்து கழிவு நீர் வீணாகச் செல்லும்நிலையில் கல்லாவில் குளத்தைப் புனரமைப்பதன் மூலமாக 200 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ள முடியும் என கிராஞ்சி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

விளாத்திமோட்டை, கோயில் பட்டிக்குளம், தாமன் தாழ்வு குளங்கள் ஊடாக கல்லாவில் குளத்தில் நீர் நிரப்பப்பட்டால் மீதி நீரைக் கொண்டு பொன்னா வெளிக்குளத்தையும் நிரப்ப முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-18)

# போர்க்காலங்களால் இனம்புரியாத வேதனைகள்

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப்.27

போர்க் காலங்களோ அதற்கு பிற்பட்ட காலங்களோ எங்களுக்குள்ளே இனம்புரியாத வேதனைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. போரால் பாதிக்கப்பட்டிருந்தோம் அப்போதுவேறுவிதமானவேதனை. இப்போது எங்களுடைய சமூகத்திலே நடைபெறுகின்றவைகளை பார்க்கின்ற போது இன்னொரு வகையான வேதனை. ஏறக் குறைய 35 வருடங்களுக்கு முன் னர்இருந்தஎங்களுடைய விழுமியங்களை நாம் தொலைத்து விட்ட நிலையிலே இன்று புதிய சமூக ஒழுங்குக்குள்ளே நாம் வந்திருக்கின்றோம். தறிகெட்ட நெறிகெட்ட வாழ்வுதான் எங்களுடைய வாழ்வு என்றநிலை உருவாகிக் கொண்டு இருக்கின்றது என்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்ஓய்வுபெற்றஅதிபர்இ.ஓங்காரமூர்த்தி தெரி வித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இடம் பெற்றது. இதன் போது பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே இவ்வாறு தெரி வித்தார்.அவர் அங்கு மேலும் கூறியதா வது:-

"எங்களைப்பொறுத்தவரையில் எங்களுடையகலாசாரஒழுங்கு நடை முறைகள் எங்களிடம் இருந்து விலகிப்போய்க்கொண்டிருக் கின்ற சூழ்நிலையில் எங்களுடைய கல்விப்பாரம்பரியமும் வீழ்ச்சி நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. ஏறக் குறைய 200 மாணவர்களுக்கு மேலே விஞ்ஞானப் பிரிவில் இருந்து பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தில் தற்போது 100 இற்கும் குறைவானோரே தகுதியானவர்களாகக் காணப்படுகின்றனர். நாம் அனைத்திலும் எங் களை இழந்து கொண்டிருக்கின்றோம். மன ரீதியாக அனைவரும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மனங் களில் மாற்றம் ஏற்படுத்தப்படாதவிடத்து எதனையும் சாதித்துக் காட்ட முடியாது.

விளையாட்டு நிகழ்வுகள் முன் மாதிரியாக இருக்கின்றன. சிறந்த உள ஆரோக்கியம் ஏற்பட வேண்டுமானால் நல்ல உடல் ஆரோக்கியம் வேண்டும். நல்ல உடல் ஆரோக்கியம் வேண்டுமானால் மாணவர்கள் தங்களை முழுமையாக விளையாட்டுகளில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஆனால்

> ஏறக்குறைய 35 வருடங்களுக்கு முன்னர் இருந்த எங்களுடைய விழுமியங்களை நாம் தொலைத்து விட்ட நிலையிலே இன்று புதிய சமூக ஒழுங்குக்குள்ளே நாம் வந்திருக்கின்றோம்.

எங்களுடைய மாணவர்களுக்கு குழுவாக இயங்கும் தன்மை, எதிர்காலத்தில் பெறப் போகும் வெற்றி என்பன தொடர்பாக அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளுக்கு யாரைக் குறை சொல்வது? ஒட்டு மொத்தமாக எல்லோருமே மாற வேண்டும். இந்தமாற்றத்தின் ஊடாகத் தான் எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்ப முடியும்.

அதிகூடிய புகைப்பொருள்கள், மதுவகையினை விற்பனை செய்கின்ற பிரதேசமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. ஏன் இந்த மாற்றம்? ஆரம்ப காலத்தில் மாணவர்கள் வீட்டுக்கடமைகளை செய்ததன் பிற்பாடு பாடசாலைகளுக்கு வந்தார்கள். இன்று எமது பிள்ளைகள் மத்தியில் வீட்டில் வேலை செய்கின்ற பழக்கங்கள் இல்லை. உடல் உழைத்து முயற்சி செய்யும் நோக்கம் இல்லை. உழைப்பு இல்லாமல் பிறரைச்சுரண்டும்நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம். எந்த உடல் உழைப்பும் இல்லாமல் நாம் எங்களை வளப்படுத்திக் கொள்ள நினைக்கின்றோம். அதற்கு எங்களுடைய கடந்த கால நிலைமைகள் காரண மாக இருக்கலாம். வெளிநாடுகளில் இருந்து எங்களுக்கு கிடைக்கக்கூடிய பொருளாதார உதவிகள் எங்களை பிழை யாக வழிநடத்துகின்றன. பிழையான எண்ணக் கருக்களை தூண்டி விட்டிருக்கின்றன"-என்றார். (வ-86)

# தேசத்தின் மகுடம் கண்காட்சி நீடிப்பு

*அதிகளவு வெளிநாட்டவரும் பங்கேற்பு*

கொழும்பு,பெப்.27
குளியாப்பிட்டியில் மிகவும் பிரமாண்டமான முறையில் இடம்பெற்று வரும் தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி மேலும் இரண்டு நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்றுடன் நிறைவு பெறவிருந்த தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி எதிர்வரும் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவின் தலைவரும், தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் வேண்டுகோளையடுத்தே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்காட்சியை மேலும் 2 நாள்களுக்கு நீடிக்கத் தீர்மானித்துள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டுக்கான தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியைப் பார்வையிட ஐந்தாவது நாளான நேற்று முன்தினமும் பல லட்சக்கணக்கான பொது மக்கள் வருகை தந்து பார்வையிட்டுள்ளனர்.

உள்நாட்டவர்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டவர்கள் பலரும் இந்தக் கண்காட்சியை பார்வையிட இந்த முறை வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# டெங்கு நோய் உயிரிழப்புகள் இலங்கையில் குறைவு

## சுகாதார அமைச்சர் தகவல்


மைத்திரிபால சிறி சேன

கொழும்பு,பெப்.27
டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் அரசின் ஒன்றிணைந்த வேலைத் திட்டத்தின் பயனாக டெங்குநோயால் உயிரிழப்போரின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்க முடிந்துள்ளது என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

டெங்கு நோயின் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளிக்கும் கருத்தரங்கு நேற்று முன்தினம் தகவல் தொடர்பாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ள சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் நாளுக்கு நாள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்பும் அதிகரித்து வருகின்ற நிலையில் எம்மால் டெங்கால் மக்கள் உயிரிழக்கும் வீதத்தை குறுகிய காலத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்துள்ளது.

உயிரிழப்பு வீதம் குறைக்கப்பட்ட போதிலும் டெங்கு நோய்த் தாக்கம் தொடர்ந்தும் எமக்கு அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறது.

டெங்கு நோயினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டில் 181 ஆக இருந்து 2013 ஆம் ஆண்டில் 68 ஆக குறைவடைந்துள்ள நிலையில் 2014 ஆம் ஆண்டில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 10 பேரே உயிரிழந்துள்ளனர்.

டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளானோரின் எண்ணிக்கையும் உயிரிழப்பும் ஒப்பீட்டளவில் மேல் மாகாணத்திலும் கொழும்பு மாவட்டத்திலுமே அதிகரித்துக் காணப்படுகிறது- என்றார். (ச)

# வடக்கு நெடுஞ்சாலை நிர்மாணப்பணி ஆரம்பம்

கொழும்பு,பெப்.27
தலைநகர் கொழும்புக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான வடக்கு அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை வீதி அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பணிகள் மூன்று கட்டங்களாக நடைபெறுகின்றன. இதற்கு 600 பில்லியன் ரூபா நிதியை சீனா வழங்கியுள்ளது என்றுவீதி அபிவிருத்தித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எந்திரமுல்லையில் இருந்து தம்புள்ள வரையில் தனியான நெடுஞ்சாலையாக இது நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் தம்புள்ளயில் இருந்து யாழ்ப்பாணம் வரையில் ஏ9 வீதியுடன் இந்த நெடுஞ்சாலை இணைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# சுகாதார பீடத்துக்கான நான்காம் வருட பிரவேசத்துக்கு சராசரி புள்ளி குறைப்பு

## ஆராய்கிறது பல்கலை மானியங்கள் ஆணைக்குழு

பேராதனை பல்கலைக்கழகத்தின் சுகாதார பீடத்தின் நான்காம் ஆண்டு பிரவேசத்துக்கான சராசரிப் புள்ளியை குறைப்பதற்கு, பல்கலைக்கழக செனட் சபை தீர்மானித்துள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

மூன்றாம் ஆண்டு மாணவர்கள், நான்காம் ஆண்டுக்குப் பிர வேசிப்பதற்கான சராசரிப் புள்ளி தற்போது 2.8 ஆக காணப் படுகிறது என்றுஆணைக்குழு வின் தலைவர் ஷனிக்கா ஹிரிம்புரேகம குறிப்பிட்டார்.

இந்த பெறுமதியை குறைக்குமாறு பல்கலைகழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அவர் கூறினார்.

அதற்கமைய, சராசரி புள்ளியை குறைப்பதற்குப் பேராதனைப் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது. இதற்கு, சட்டமா அதிபர்திணைக்களத்தின்ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப் படவுள்ளன என்று அவர் சுட்டிக் காட் டினார். (ச)

# பாதாள உலகக் குழு தேர்தல் பரப்புரையில்

*அவதானம் செலுத்துமாறு பொலிஸ் தலைமையகம் உத்தரவு*

கொழும்பு,பெப்.27
பாதாள உலகக் குழுவினர் தேர்தல்பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதினைந்து பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 181 பேர் இவ்வாறு பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காக அவர்கள் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த கால தேர்தல்களின் போதும் இந்தப் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகள் குறித்து அவதானமாக இருக்குமாறு பொலிஸாருக்கு, பொலிஸ் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

பரப்புரைப் பணிகளுக்கு பாதாள உலக குழுவினரை இணைத்துக் கொள்ள வேண்டாம்என்றுவேட்பாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்தார். (ச)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை காணிக்கை(பிலிப்)



இல. 11, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் துரை காணிக்கை கடந்த (24.02.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதித் திருப்பலி இன்று (27.02.2014) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 11 சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாதநாயகி சிற்றம்பலம்



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதநாயகி சிற்றம்பலம் 25.02.2014 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரி, சிவலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், வினாசித்தம்பி பொன்னையா, கலாலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமியும், சுபாங்கர், சுஷாங்கர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2014) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத் துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்.
077 5380 477
0044 7447949830

(சி/12318) (10.8)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் நவரட்ணம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் ராஜவீதி, நல்லூர் மற்றும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நவரட்ணம் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்) நேற்றுமுன்தினம் (25.02.2014)செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஜீவமணியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், நிர்மலா, ஜெயந்தி, அன்ரன், செல்ரன் ஆகியோரின் தந்தையும், சத்தியநேசன், தேவறஞ்சன், எல்சி, சிறிமலர் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சகோதரி செல்வரட்ணம், தங்கரட்ணம் -ராஜசூரியர், சுகிர்தமலர்- செல்லப்பு மற்றும் புனிதமலர்-செல்லத்துரை, தங்கமலர்-கிருபைராஜா, அரியமலர்-ராஜரட்ணம் ஆகியோரின் சகோதரனும், எஸ்தர், போல் ஜோயன்னா, ஜொவீற்றா, ஜெசி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் இன்று (27.02.2014) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6/10, Fuludagoda றோட், கல்கிசை.

தகவல் : மனைவி, பிள்ளைகள்.
2718903, 077 1513733

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**காணியுடன் வீடு விற்பனைக்கு**

யாழ். திருநெல்வேலி. வளாக லேன் (பல்கலைக்கழக பின்புறம்) இல் 2 பரப்புக்காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:- 0770200700 0778446263

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

பூச்சி நீக்கப்பட்ட ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 071 3998855

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1979 இல் பிறந்த ஆஸ்திரேலியா PR உள்ள Bachelor of Bio medical Science முடித்த நல்ல வேலையில் உள்ள பாவம்-15 அஸ்வினி நட்சத்திரம் உடைய மணமகனுக்கு அழகான, மெல்லிய Doctor, Dentist, CIMA, etc மணமகள் தேவை.
தொடர்பு: 0061 46931 4965
075 033 7071
E-mail:jabo@live.com.au
(45125) (10.6)

**உடனடித் தேவை**

தரமான, சுத்தமான ஒடியல், புளுக்கொடியல் சிறுதொகையாகவும், மொத்தமாகவும் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: அண்ணா பாம், இணுவில், மருதனார்மடம்.

# ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவளிப்பதா? எதிர்ப்பதா?

*ஜப்பானின் முடிவு இறுதி நேரத்தில்*

கொழும்பு,பெப்.27

இலங்கையின் நிலைமையை ஜப்பான் மதிப்பீடு செய்து வருகின்றது.அதன் பின்னரே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்யும் என்று இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிரோ ஹோபோ தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்று ஜப்பான் இன்னும் முடிவு செய்யவில்லை' என்று ஜப்பானியத் தூதுவர் நொபுஹிரோ ஹோபோ குறிப்பிட்டார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிப்பதா,எதிர்ப்பதா என்று ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்துக்கு முன்பாகவே முடிவு செய்யப்படும். இதற்காகச் சிறப்புக் குழுவொன்று ஜெனிவாவுக்குச் செல்லும். நாட்டின் நிலைமையையும் ஜப்பான் மதிப்பீடு செய்து வருகிறது என்று தூதுவர் மேலும் கூறினார்.

ஜப்பானியத் தூதுவர் நொபுஹிரோ ஹோபோ கடந்த வாரம் அரச அதிகாரிகள் மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். இதன் போது, நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு நிலைமை குறித்துக் கருத்து வெளியிட்ட ஜப்பானியத் தூதுவர் நொபுஹிரோ ஹோபோ,

வடக்கு-கிழக்கில், அபிவிருத்தியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.அங்கு இன்னும் நிறையச் செய்ய வேண்டியுள்ளது.மார்ச் மாதத் தொடக்கத்தில் மீண்டும் வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளேன். ஒரு ஆண்டுக்கு முன்னர், வடக்கில் இருந்ததை விட இப்போது அங்கு நிலைமைகளில் முன்னேற்றம் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ் கைதிகள்

மகஸின் சிறைச்சாலை யில் உயிரிழந்திருந்ததன் பின்னணியில், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உபதலைவர் ஆறு.திருமுருகன் தேரரிடம் கோரினார்.

நீங்கள் தெரிவித்தால் அரசியல்வாதிகள் கேட்பார்கள். எனவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்குமாறு திருமுருகன் தேரரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது அருகில் நின்றிருந்த யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, ஆன்மிக நிகழ்வில் அரசியலைக் கலக்க வேண்டாம் என்று தெரிவித்தார். இதனையும் பொருட்படுத்தாது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தேரரிடம் வலியுறுத் தப்பட்டது.இதற்குரிய நடவடிக்கை மேற்கொள்வதாகத் தேரர் குறிப்பிட்டார். (த-5)

### உலகம்

வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்தத் திட்டத்துக்கு அவுட்டர்நெட் (Outernet) எனப் பெயரிட்டுள்ளனர்.

உலகின் மக்கள் தொகை யில் 40 வீதமானவர்கள் இணைய வலையமைப்பில் இணைத்துக்கொள் ளப்படாத நிலையில் தற்போதும் இருப்பதாக எம்.டி ஐ.எவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சில நாடுகளில் இணையப் பாவனை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதுடன், சில தொலை தூரக் கிராமப் புறங்களுக்கு இணையப் பாவ னையை வழங்குவதானால் அதிகம் செலவு செய்ய நேர்வதாகவும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இந்த இலவச இணைய சேவையை வழங்க குறித்த நிறுவனம்திட்டமிட்டுள்ளது. (த-5)

### பா.ஐ.க.

இதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.நான் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலத்தில் இலங்கையைக் கையாள்வதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

ஆனால் தற்போதைய காங்கிரஸ் அரசினால் இலங்கை தொடர்பில் எதுவும் செய்ய முடியவில்லை.இலங்கையில் நடந்தேறிய இரத்தம் தோய்ந்த இறுதிக்கட்டப் போரில் காங்கிரஸ் அரசும் தொடர்புபட்டிருப்பதால், ராஜபக்ஷ அரசை அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை-என்றார்.

(த-5)

### தீர்மானத்துக்கு

டில்லிக்குச் சென்று, இலங்கையில் தூதரகங்களைக்கொண் டிராத நாடுகளிடம் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவு வழங் குமாறு கோரியிருந்தார்.

அதேபாணியில், கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்த பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கின்,அங்குள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் இராஜதந்திரிகளைச் சந்தித்து, அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து கொண்டு வரவுள்ள இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

#### நியூயோர்க்கிலும் ஆதரவு திரட்டல்

அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின், நியூயோர்க்கிலுள்ள ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதிகள் பலரையும் சந்தித்துள்ள, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே. சிசின், ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவு தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், உறுப்பினரல்லாத ஏனைய நாடுகளிடம், இணை அனுசரணையைப் பெறுவதற்கு ஆதரவு தேடியும், அமெரிக்காவும் பிரிட்டனும் பரப்புரைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன என்பது குறிப்படத்தக்கது. (த-5)

### இலங்கை

தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதனால் தமது கடல் வளம் அழிக்கப்படுவதாக இலங்கை மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதேவேளை இலங்கைக் கடற்படை அத்துமீறி இந்தியக் கடல் எல்லைக்குள் புகுந்து தம் மீது தாக்குவதாகவும், கைது செய்வதாகவும் இந்திய மீனவர்கள் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

இதற்கமைய இரு நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சு கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி டில்லியில் இடம்பெற்றிருந்தது.இந்திய-இலங்கை மீனவர்கள் இடை யிலான பேச்சில் எடுக்கப்படும் முடிவை இரு நாடுகளும் ஏற்கும் என்று அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சில் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இரு தரப்பும் கைது செய்து தடுத்து வைத்துள்ள மீனவர்களை விடுதலை செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அமைய இரு தரப்பு மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.இதன் பின்னர் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி சென்னையில் இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் பேச்சு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் பேச்சில் இலங்கைக் கடற்பரப்புக்கு 8 கிலோ மீற்றர் தொலைவில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடலாம் எனவும், பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு மீன்பிடி நடவடிக்கைகளை இந்திய மீனவர்கள் நிறுத்தி வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், அடுத்தகட்ட பேச்சு கொழும்பில் இடம்பெறும் என்றும் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதி இரு தரப்பு மீனவர்களுக்கிடையிலான பேச்சு இடம்பெறவுள்ளது.

இந்தப் பேச்சில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ள தாகக் கடற்றொழில் நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது. (த-5)

### இலங்கையின்

யாளரின் அறிக்கை வெளியாகி அதன் சலசலப்பு அடங்குவதற்கு முன்னர் இலங்கைக்கு எதிரான மற்றொரு அறிக்கையும் வெளியாகின்றது.

#### வருடாந்த அறிக்கை

இலங்கை உள்ளிட்ட உலகின் அனைத்து நாடுகளினதும் மனித உரிமைகள் நிலை குறித்து விளக்கும் இந்த முக்கிய அறிக்கை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரியினால் இன்று வெளியிடப்படவுள்ளது.

இன்று முற்பகல் 11.30 மணியளவில் வொசிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடக அறையில் இந்த அறிக்கை வெளியாகும்.

#### பொறுப்புக் கூறல் வலியுறுத்தப்படும்

இதையடுத்து, ஜனநாயகம், தொழிலாளர் விவகாரங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலர் உஸ்ரா சீயா, இந்த அறிக்கை தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளதுடன் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளிப்பார்.

இலங்கைப் போரின்போது இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக்கூறப்படாமை, நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படாமை குறித்து தொடர்ச்சியாக அமெரிக்கா கவலை வெளியிட்டு வந்துள்ளது.

#### காட்டமான குற்றச்சாட்டுக்கள்

அண்மைக்காலமாக ஊடகங்கள், மதச் சிறுபான்மையினர், மனித உரிமை ஆர்வ லர்கள், நீதித் துறையினர் மீதான தாக்குதல்கள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் கவலை வெளியிட்டு வந்துள்ளனர்.இந்த நிலையில் குறித்த அறிக்கையில் இலங்கை குறித்து காட்டமான குற்றச்சாட்டுகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரத் தயாராகிவரும் அமெரிக்கா ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாக இன்னும் ஒருவாரமே உள்ள நிலையில் இந்த அறிக்கையை வெளியிடவுள்ளமை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. (த-5)

### இரணைமடு

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சர்ச்சைகள் தோன்றியுள்ளன. கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் குளத்து நீரை யாழ்ப்பாணத்துக் கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தமது தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னரே யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரைக் கொண்டு செல்வது பற்றி யோசிக்க வேண்டும் என்று அவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

இதனால் இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப்பாணம் கொண்டு வருவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனினால் கடந்த டிசெம்பர் மாதம் நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

15 பேரைக் கொண்ட இந்த நிபுணர் குழு கடந்த இரு மாத காலமாகத் தொடர் கூட்டங்களை நடத்தி வந்தது. நிபுணர் குழுவின் செயற்பாடுகளில் ஒருவர் பங்கெடுக்கவில்லை. எஞ்சிய 14 பேரே தொடர்ச்சியாகச் சந்திப்புக்களை நடத்தி வந்தனர்.

இவர்களில் 9 பேர் இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரும் திட்டம் தேவையில்லை என்றும் 5 பேர் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,இந்த அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு-கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையில் இன்று யாழ்.பொது நூலகத்தில் முக்கிய கலந்துரையாடல்ஒன்று இடம்பெறவுள்ளது.

முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவினர் திட்டத்தை மேற்கொள்ளும் தம்மோடு எந்தக் கலந்துரையாடல்களையும் நடத்தவில்லை என்று திட்டக் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளதுடன், தமது கருத்துக்களையும் அறிக்கையில் உள்வாங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் எனத்தெரியவருகின்றது. (த-5)

### விவசாயிகள்

களைச் சந்தித்து கருத்தை அறிந்திருக்கின்றேன். விவசாயிகளின் கோரிக்கை இரணைமடுத் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்கின்ற உரிமை முழுமையாக பாதுகாக்கப்படவேண்டும் என்பதேயாகும்.அது ஒரு நியாயமான விண்ணப்பம். விவசாயிகளின் விண்ணப்பம் தொடர்பாகப் பல விடயங்களை சொல்லி யிருக்கின்றார்கள். அதனை நாங்கள் அறிந்துள்ளோம்.நல்ல முடிவு எடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்திலும் எல்லோருடைய கருத்தையும் கேட்போம். அங்கு நடைபெறும் விடயங்கள் தொடர்பாக நான் ஒன்றும் தற்போது சொல்லமுடியாது. நாளைக்கு (இன்று) யாழ்ப்பாணத்தில் கூட்டம் முடிந்த பின்னர் அது பற்றிக் கூறுவோம்-என்றார்.

கிளிநொச்சி இரணைமடுக் கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் மனு ஒன்றினையும் தலைவர் இரா.சம்பந்தனிடம் கையளித்துள்ளது.

(த-18-55-400)

### தமிழக

ஈடுபட்டதாகத் தெரிவித்துத் தமிழக மீனவர்கள் 38 பேர் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களின் விளக்கமறியல் மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 2 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 49 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் மார்ச் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 12 ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 29 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 116 பேரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையிலும் அவர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து அறிவுறுத்தல் கிடைக்காமையினாலேயே தமிழக மீனவர்களின் விடுதலை தாமதமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5-4-17)

### மகனின்

லேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் கோபிதாஸின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.இதனையடுத்து அவரது சொந்தவூரான புலோலி மந்திகைக்கு நேற்றுக் காலை உடல் கொண்டு வரப்பட்டது. கோபிதாஸின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கோபிதாஸின் தந்தையான விஸ்வலிங்கம் தெரிவிக்கையில்,

1992 ஆம் ஆண்டு பிரிட்டனுக்குச் சென்ற எனது மகன் 2002,2004 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இலங்கைக்கு வந்து சென்றிருந்தார்.2007 ஆம் ஆண்டு இங்கு வந்தபோது கட்டுநாயக்காவில் வைத்து அவரைக் கைது செய்திருந்தனர்.

எனது மகன் விடுதலைப் புலிகளுக்கு பிரிட்டனில் நிதி சேகரித்ததாகச் சொல்லப்படுவதில் எந்த உண்மையுமில்லை. இருப்பினும் அவருக்கு 2011 ஆம் ஆண்டு 5 ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதித் துத் தீர்ப்பளித்தனர். அதிலும் முதலில் 2 ஆண்டுகள் என்று எழுதப்பட்டுப் பின்னர் 5 ஆண்டுகள் என்று நீதிபதி மாற்றியமைக்கு எதிராகவும் எனது மகனினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

எனது மகனுக்கு 5 ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர், பிரிட்டன் சிறைச்சாலைக்கு மாற்றப்படுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுப் பிரிட்டனும் அதற்குச் சம்மதித்து அந்த ஆவணங்கள் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு அனுப்பப்பட்டன.

ஆனாலும் அவர் எதுவித நடவடிக்கைகளும் எடுக்க வில்லை. அவ்வாறு அவரை பிரிட்டனுக்கு மாற்றியிருந்தால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டிருக்கும்.எனது மகனை இரண்டு தடவைகள் சிறைச்சாலையில் ஏற்கனவே தாக்கியிருந்தார்கள்.கடந்த வருடம் கூட எனது மகன் தன்னை எப்படியாவது பிரிட்டனுக்கு மாற்றுமாறு கோரியிருந்தார் - என்றார்.

அண்ணாவுக்கு எதையாவது நாங்கள் கொண்டு சென்றால்மனிதாபிமானமற்ற முறையில் அவற்றைச் சோதனை போடுவார்கள். சாப்பாட்டுப் பார்சலைக் கூட தடியை விட்டுக் கிளறுவார்கள். ஆனால் சிங்களக் கைதிகளுக்குச் சாப்பாடு கொண்டு சென்றால் அவ்வாறு செய்யமாட்டார்கள். ஒரு முறை தேயிலை கொண்டு சென்று கொடுக்கும்போது அதைத் தூக்கி எறிந்தார்கள். அதன் பின்னர் இருநூறு ரூபா பணத்தைக் கொடுத்த பின்னரே கொடுக்க விட்டார்கள்' என்கிறார் கோபிதாஸின் சகோதரர்.

தாங்கள் மீளவும் விசாரணை செய்வதற்கோ மேலதிக விசாரணைக்கோ விரும்பவில்லை. இனி விசாரணை செய்து என்ன பலன். சம்பந்தப்பட்டவரையே இழந்து விட்டோம். விசாரணை மீளவும் நாங்கள் கோரினால் அதனைச் செய்யப் போவதும் இலங்கை அரசே.இதனால் எந்த மாறுதலும் ஏற்படாது.

சம்பவம் நடந்த இடம் சிறைச்சாலை. சிறைச்சாலையிலுள்ள ஏனைய கைதிகள் சுதந்திரமாகச் சாட்சி சொல்ல முன்வரமுடியுமா ? இதனை இத்தோடு முடித்துக் கொள்வதாக கோபிதாஸின் உறவினர்கள் தெரிவித்தனர். (த-5)

# டயமன்ஸ் - நவஜீவன்ஸ் அணிகள் இறுதியாட்டத்தில் இன்று மோதல்



உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி


வதிரி டய மன்ஸ் விளையாட்டுக் கழக அணி

யாழ்ப்பாணம், பெப்.27
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுரா டீ சில்வா கலந்து கொள்ளவுள்ளார். (த-23)

## வடமராட்சி லீக்கின் அங்குரார்ப்பணம் நாளை

யாழ்ப்பாணம், பெப்.27
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அல்வாய் தெற்குக் கிராம அலுவலர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.


இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோ லீக்கை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

இதில் கௌரவ விருந்தினர்களாக இலங்கை உதைபந்தாட்டச் சம்ளேனத்தின் செயலாளர் உபாலி ஹேவகே, நிறைவேற்றுப்பணிப்பாளர் அனுரா டீ சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்குத் தேவையான பந்துகள் வழங்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் ம.நவநீதமணி தலைமையில் அல்வாய்தெற்கு கிராம அலுவலகர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோ, இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் உபாலி ஹேவகே, நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுரா டீ சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## வவுனியா யங்ஸ்ராரின் பூப்பந்தாட்டப் போட்டி



யாழ்ப்பாணம், பெப்.27
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வடக்கு-கிழக்கு மாகாணப் பூப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடத்தும் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் வவுனியா நகர சபை உள்ளரங்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான ஒற்றையர் ஆட்டம், 20 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான ஒற்றையர், இரட்டையர் ஆட்டம், 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர், இரட்டையர் ஆட்டம், ஆண், பெண் இருபாலாருக்குமான ஒற்றையர் ஆட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர், தலைவர் ஆகியோரிடம் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டம்

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி இன்று வியாழக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## கூடைப்பந்தாட்ட இறுதியாட்டம் இன்று

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை மாலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவனும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன், ரில்கோ ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.தியாகராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பெண்களுக்கான இறுதியாட்டம் மாலை 5 மணிக்கும் 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டம் மாலை 6 மணிக்கும், ஆண்களுக்கான இறுதியாட்டம் இரவு 7 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (த)

## அரிப்பு சென்.ஜோசப் சம்பியன்


சென்.ஜோசப் வி.க. அணி


சென்.ஜேம்ஸ் வி.க. அணி

யாழ்ப்பாணம், பெப்.27
முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அரிப்பு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரிப்பு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் அரிப்பு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குப் படையான் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அரிப்பு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி 12:8 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. (த-23)

## உடுப்பிட்டி மகளிர், மெதடிஸ்த பெண்கள் கரப்பந்தில் வெற்றி



யாழ்ப்பாணம், பெப்.27
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும்,17 வயது மற்றும் 19 வயதுப் பிரிவுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையும் வலயச் சம்பியன்களாகின.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், சென் தோமஸ் வித்தியாலய அணியும் மோதின. இதில் 2:0 என்ற அடிப்படையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பிய னாகியது.

இதில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையும், சென் தோமஸ் வித்தியாலய அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தினை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பெற்றது.

இறுதியாக இடம்பெற்ற 19 வயதுப் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மோதின. இதில் 2:1 என்ற அடிப்படை யில் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தினை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது. (த-400)

# வென்றது கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகம்



கோலுக்குச் செல்லும் பந்தை வீரர் ஒருவர் தடுக்கிறார்

வலி.வடக்கு, பெப் 27
தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளை யாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

அராலி அண்ணா விளையாட்டுக் கழகத்துக்கும் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல்பாதி ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்தது.

இதன்போது கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்குக் கிடைத்த தண்டனை உதையை அது உரிய முறையில் பயன்படுத்தத் தவறிய நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.


இரண்டாம் பாதி ஆட்டத்தில் மீண்டும் ஒரு தண்டனை உதை கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்குக் கிடைத்தது. அவர்கள் அதனைக் கோலாக்கி ஆட்டத்தைச் சமநிலைப்படுத் தினர்.

போட்டி சம நிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து சமநிலை தவிரிப்பு உதைகள் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

அண்ணா விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கப்பட்ட 5 சமநிலை தவிர்ப்பு உதைகளில் இரண்டை வீரர்கள் வெளியே அடிக்க ஒரு பந்தைக் கோல் காப்பாளர் தடுக்க இரண்டு கோல்கள் பெறப்பட்டன.

கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் தனக்கு வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு தண்டனை உதை களில் ஒன்றை வெளியே அடிக்க ஒன்றைக் கோல் காப்பாளர் தடுக்க 3 கோல்கள் பெறப்பட்டன.

ஆட்ட நிறைவில் 3:2 கோல்கள் என்ற நிலையில் சண்டிலிப் பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகம் அண்ணா விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)



# கலாநிதியானார் கங்குலி


இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்து பல சாதனைகளைப் படைத்துள்ள சௌரவ் கங்குலி தற்போது கிரிக்கெட் வர்ணனையாளராக உள்ளார்.

வெளிநாடுகளில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் அதிக தொடரை கைப்பற்றிய முதல் இந்தியஅணித்தலைவர் என்ற பெருமைக்குரியவரான இவருக்கு மேற்கு வங்காள மாநிலம் ஷிப் பூரில் உள்ள வங்காளப் பொறியியல் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

விரைவில் இந்திய அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ள மேற்படி பல்கலைக்கழகம் தற்போதைய பெயருடன் நடத்திய கடைசிப் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் வேந்தரும் மேற்கு வங்காள மாநில ஆளுநருமான எம்.கே.நாராயணன் இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவராக அர்ப்பணிப்புடன் செயல்பட்டமைக்காக கங்குலிக்கு இந்தக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப் படுவதாகக் கூறி வாழ்த்தினார்.

இதனை ஏற்றுக் கொண்ட கங்குலி இதற்கு முன்னதாக பல பட்டங்களைப் பெற்றிருந்தாலும் சொந்த மண்ணில் (மேற்கு வங்காளம்) உள்ள பல்கலைக்கழகம் அளிக்கும் இந்தப் பட்டம் பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இந்த மேடையில் ஏறி கௌரவப் பட்டத்தைப் பெறுவேன் என்று நான் நினைத்துப் பார்த்ததே இல்லை' என்று நெகிழ்ச்சியுடன் கூறினார். (து-400)



# ரபேல் நடால் முதலிடத்தில்

உலக ரென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் தர வரிசையில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் முதலிடத்திலும், சேர்பியா வீரர் நோவாக் ஜோகோவிச் 2ஆவது இடத்திலும், சுவிட்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா 3ஆவது இடத்திலும், ஸ்பெயின் வீரர் டேவிட் பெரர் 4ஆவது இடத்திலும், ஆர்ஜென்ரினா வீரர் டெல்பெட்ரோ 5ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

டெல்லி ஓபன் பட்டத்தைக் கைப்பற்றிய இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் 18 இடங்கள் முன்னேறி 78ஆவது இடம் பிடித்துள்ளார். 2011ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சோம்தேவ் 62 ஆவது இடத்தை பிடித்ததே அவரது சிறந்த தர வரிசையாகும். டெல்லி ஓபன் போட்டியில் முதல் சுற்றில் தோல்வி கண்டு வெளியேறிய இந்திய வீரர் யுகி பாம்ப்ரி 3 இடங்கள் பின்தங்கி 146ஆவது இடம்பிடித்துள்ளார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்திய வீரர் லியாண்டர் பயஸ் 10 ஆவது இடத்தில் தொடருகிறார். இந்திய வீரர்கள் ரோகன் போபண்ணா 16ஆவது இடத்திலும், மகேஷ்பூபதி 41ஆவது இடத்திலும், திவிஜ் ஷரன் 65ஆவது இடத்திலும் உள்ளனர்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா 11ஆவது இடம் பிடித்துள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் முதலிடத்திலும், சீன வீராங்கனை லீ நா 2ஆவது இடத்திலும், போலந்து வீராங்கனை ராட்வன்ஸ்கா 3ஆவது இடத்திலும், பெலாரஸ் வீராங்கனை அஸரென்கா 4ஆவது இடத்திலும், ரஷ்ய வீராங்கனை ஷரபோவா 5ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர். (து-400)

# டெஸ்ட்டுக்கு கோஹ்லிதான் பொருத்தமான தலைவர்



இந்திய கிரிக்கெட் அணி வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து தோல்வியை தழுவி வருகிறது. இதனால் அணித்தலைவர் டோனி கடும் விமர்சனத்துக்கு உள்ளானார். அவரை டெஸ்ட் தலைவர் பதவியில் இருந்துநீக்கவேண்டும்என்று கோரிக்கை எழுந்துள்ளது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் காயம் காரணமாக டோனி விளையாடவில்லை. இதனால் விராட் கோஹ்லி தலைவராகப் பணியாற்றுகிறார்.

இதற்கிடையே டெஸ்ட் அணிக்கு விராட் கோஹ்லியே பொருத்தமான தலைவர் என்று ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் இயன் சப்பல் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

ஒருநாள் போட்டியைப்பொறுத்தவரை டோனி சிறந்த அணித் தலைவர். இதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் இல்லை. நடு வரிசையில் களம் இறங்கும் அவர் ஆட்டத்தைச் சிறப்பாக நிறைவு செய் வார். 20/20 போட்டியிலும் அவர் தான் சிறந்த அணித்தலைவர். ஆனால் டெஸ்ட் போட்டியைப் பொறுத்தவரை டோனி சிறப்பாகச் செயல்படவில்லை. தற்காப்பில் கூடுதல் கவனம் செலுத்து கிறார்.

டோனி தலைவர் பதவியில் இருந்து கண்டிப்பாக நீக்கப் படவேண்டும்.

அவருக்குப் பதிலாக விராட் கோஹ்லியை தலைவராக நியமிக்கலாம். ஆக்ரோஷமாக திகழும் அவர் டெஸ்ட் அணித் தலைவர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்- இவ்வாறு இயன் சப்பல் கூறியுள்ளார். (து-400)

# பாகிஸ்தான் இறுதிக்கு




19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற போட்டியில் 3 இலக்குகளினால் பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 50பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில் ரூட்ஸ் 76 ஓட்டங் களையும், ரையன் கிய்கின்ஸ் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பாகிஸ்தானின் பந்து வீச்சில் சியா உல் ஹக், அமட் பட், கர்மாட் அலி ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றி னர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி போராடி 49.1 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. எட்டாவது இலக்கு இணைப்பாட்டமாக 63 ஓட்டங்கள் பெறப்பட்டன. சௌட் ஷகீல் 45 ஓட்டங்களையும், ஷபார் கோஹர் ஆட்டமிழக்காமல் 37ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மத்தியூ பிஷர், ரொப் சயர், ரொப் ஜோன்ஸ் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர். (து-400)

# முதலிடத்தில் டி வில்லியர்ஸ்



டெஸ்ட் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டது. இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டிய லில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் (935) முதலிடத்திலும், தென்னாபிரிக்காவின் அம்லா(879), இலங்கையின் சங்கக்கார(879) 2ஆம் இடத்திலும் உள்ளனர். நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நான்கு இன்னிங்சிலும் சேர்த்து, 214 ஓட்டங்கள் எடுத்த இந்தியாவின் விராட் கோஹ்லி(784 புள்ளி) முதல் முறையாக 8ஆவது இடம் பிடித்தார். மற்றொரு இந்திய வீரர் புஜாரா(819 புள்ளி) 7 ஆவது இடத்தில் நீடிக்கிறார்.

சகல துறைஆட்டக்காரர் பட்டியலில் இந்தி யாவின் அஷ்வின்(373) தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். அணிகளுக்கான பட்டியலில் தென்னாபிரிக்கா(133) முதலிடத்திலும், இந்திய அணி(112) இரண்டாவது இடத்திலும், ஆஸ்திரேலியா(111) மூன்றாவது இடத்திலும் நீடிக்கின்றன. (து-400)

# இந்தியா அபார வெற்றி



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் இந்தியா 6இலக்குகளால் பங்களாதேஷை பெரு வெற்றி கொண்டது. ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இதில் முதல் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தானை வீழ்த்தியது.

நேற்று இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்போட்டியில் இருந்து காயம் காரணமாக டோனி விலகியதால் விராட் கோஹ்லி தலைவராச் செயற்பட்டார்.

தொடக்க ஆட்டக்காரர்களாக பங்களாதேஷைச் சேர்ந்த அனாமுல் ஹக்யூ- சம்சூர் ரஹ்மான் களம் இறங்கினார்கள். ரஹ்மான் 7 ஓட்டங்களில் முகமது சமி பந்தில் ஆட்டம் இழந்தார். அதன்பின் வந்த மொஹிமுல் ஹக்யூ 23 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அப்போது பங்களாதேஷ் அணி 12.1 பந்துப்பரிமாற்றங்களில் 49 ஓட்டங்கள் எடுத்திருந்தது.


அதன்பின் 3ஆவது இலக்குக்கு அனாமுல் ஹக்யூடன் முஷிபிக்யூர் ஜோடி சேர்ந்தார். இருவரும் இந்திய அணியின் பந்து வீச்சை சவாலாக எதிர்கொண்டுஓட்டங்கள் சேர்த்தனர்.

அனாமுல் ஹக்யூ சிறப்பாக விளையாடி77ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ரஹிம் 117 ஓட்டங்கள்குவித்து ஆட்டம் இழந்தார். இறுதியில் பங்களாதேஷ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 7 இலக்குகள் இழப்பிற்க 279 ஓட்டங்கள் குவித்தது.

இந்திய அணி தரப்பில் முகமது சமி 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 50ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 4 இலக்குகளையும் பிரவின்குமார், ஆரோன், அஷ்வின் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பின்னர் 280 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2 ஆவதாக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி கோஹ்லியின் சதத்தின் உதவியுடன் 49 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இந்திய அணி சார்பாக விராட் கோஹ்லி 122 பந்துகளில் 136 ஓட்டங்களையும் ரகானே 73 ஓட்டங்களையும் பெற்று ஆட் டமிழந்தனர். பந்து வீச்சில்ருபெல் கோஷைன், ரசாக், ரகிம், சோக் ஹஷி ஆகியோர் தலா ஒரு இலக்குகளைக் கைப் பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக சதம் விளாசிய விராட் கோஹ்லி தெரிவு செய்யப்பட்டார். (த-400)

# ஸ்கந்தா நிதான ஆட்டம்



வீரர்களின் போர் என வாணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையேயான இரண்டுநாள் கொண்ட கிரிக்கெட் போட்டி நேற்று முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இரு கல்லூரிகளின் மாணவர்கள். ஆதரவாளர்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் ஆரம்பமாகியது.

14 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தப் போட்டியில் இரு அணிகளும் சம பலம் கொண்ட அணிகளாகவும் அனுபவம் மிக்க வீரர்களை கொண்ட அணிகளாகவும் காணப்படுகின்றமையால் போட்டியின் முடிவுகளை பெரும்பாலும் வெற்றி தோல்வியை எதிர்வு கூற முடியாத நிலைமையே காணப்பட்டது. விருந்தினர்கள் மற்றும் இரண்டு அணிகளும் கல்லூரிகளின் பாண்ட் வாத்தியக் குழுக்களின் அணி வகுப்பு மரியாதையுடன் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். தொடர்ந்து தேசியக் கொடியினை பிரதம விருந்தினராக கலந்கொண்ட தியாகராசா துவாரகேஷ்வரன் ஏற்றி வைக்க மகாஜனாக் கல்லூரியின் கொடியை கல்லூரி அதிபர் எம்.மணிசேகரனும் ஸ்கந்தவரோதயக் கல்லூாயின் கொடியினை அதிபர் ஆர்.ஈஸ்வரதாசனும் ஏற்றி வைத்தார்கள்.

மைதானத்தில் இரு அணிகளும் விருந்தினர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பூவா தலையா போட்டதில் மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்று துடுப்பாட்டத்தில் ஈடுபட்டது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீரன் கே.கே.கதியோனினன் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது மகாஜனாக் கல்லூரி வீராகள் தடுமாறிய நிலையில் வீரர்களின் போரின் 14 ஆவது போட்டி யாரும் எதிர்பார்க்காத ஒரு முடிவை அடையும் நிலையை எட்டியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் உட்பட அனைவரும் சோபிக்காத நிலையில் முதல் இனிங்சில் 23.3 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களை மட்டும் பெற்றது. ரி.டிலோசன் 27 ஓட்டங்களையும் ஜே.மயுரன் 18ஓட்டங்களையும் எஸ்.கபிலன் 09 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 05 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கே.கே.கதியோன் 5.3 பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 05 இலக்குகளையும் கே.பிரசாத் 03பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும் பி.சுஜிதரன் 06பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கை யும் கைப்பற்றினர்

பந்து வீச்சில் அதிரடியை காட்டிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி துடுப்பாட்டத்திலும் அசத்தியது. மு.ரி.சரத்குமார் ஜெ. ஜனக்சன் அரைச்சதம் கடந்த நிலையில் 46.2 பந்துப்பரிமாற்றங்களில் 232 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

ரி.சரத்குமார் 26 பந்துகளில் எட்டு நான்குகள் நான்கு ஆறுகளுடன் 77ஓட்டங்களையும் ஜெ.ஜனக்சன் 44 பந்துகளில் எட்டு நான்குகள் நான்கு ஆறுகளுடன் 67ஓட்டங்களையும் பி.சுஜிதரன் 32ஓட்டங்களையும் கே.கே.கதியோன் கே.சயந்தன் முறையே 27, 18 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 05 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு சளைக்காது பந்து வீசிய் மகாஜனாக் கல்லூரி வீரன் ஜெ. ஜனந்தன் 13.2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 61 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளையும் ஆர்.ரிஷாத் 08 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும் எஸ்.கஜந்தன் 07 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும் ஜெ.மயுரன் 05 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்

இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி மீண்டும் முதல் இன்னிங்சில் விட்ட தவறை விடத் தொடங்கிய நிலையில் குறிப்பாக கள நிலமையை உணராது ஓட்டங்களை பெற எத்தனித்த வீரர்கள் 21 பந்துப்பரிமாற்றங்களில்04 இலக்குகளை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

எம்.பவன் 13 ஓட்டங்ளை பெற்றதோடு டிலொசன் 34 ஓட்டங்களுடனும் நிஷாந்தன் 03 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காது உள்ளனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த கே.கே.கதியோன் 02 இலக்குகளையும் ஜெ. ஜெனக்ஷன். பாலபிரசாந்த் ஆகியோர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்று வியாழக்கிழமை 9.00 மணிக்கு மீண்டும் போட்டி ஆரம்பமாகவுள்ளது. (த-400-86)

★ இத்தாலி பறக்க அரிய வாய்ப்பு
★ சுவிஸ், ஜேர்மனி, ஸ்பெயின் செல்ல சில காலம் போதும்.
★ கனடா படிக்க உழைக்க கையிலுள்ள காசே போதும்
திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090
www.thisaivisa.Com

மேலும் 3 குடும்பங்கள் விசா வென்றன
★ சாதனைப் பயணம் தொடர்கிறது.
ஆஸி விசா குடும்பமாக வெல்வது எளிது.
55 வயதுக்குட்பட்டவரா நீங்கள் விரைந்து வாருங்கள் நாங்கள் பார்த்துக் கொள்வோம்.
திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090

PHYSICS
A/L - 2016
பொறியியல் (MECHANIC)
ஆரம்பம்:- 3/3/2014 Mon 6.30 a.m
விரைவான கற்றலுக்கான Short Method பயிற்சியுடன்.
திரு.ம.ஸ்டேல்மன் - Bsc, T.P 077 6116724
இல 10/10, மந்திரீஸ் றோட், யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகாமை கிழடெக் கல்நிலை முன்பாக)

பதவி வெற்றிடம்
அலுவலக இணைப்பாளர்:- (பெண்கள்)
★ பட்டதாரிகள் மாத்திரம் 50 வயதுக்குட்பட்டவர்கள் மாத வேதனம் 25000/= 2வருட சேவைக்கான ஒப்பந்தம் 6 மணிக்கே பணி நிறைவடையும்.
★ அலுவலக உதவியாளர் (ரிமோஸ்) ஆண்/பெண் 8 ஆம் தர சித்தி, வயது 45 இற்குள்
2 வருட சேவை ஒப்பந்தம், 6 மணிக்கே பணி நிறைவடையும்.
நேர்முகத்தேர்வு:- 01/03/2014 பி.ப. 5.00 மணி
திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
அன்பான வாடிக்கையாளர்களே !
நளின் நிறுவனத்தின்
சேவைகள் மற்றும் விலைகள் தொடர்பான விபரங்கள் இன்றுமுதல்
உத்தியோக பூர்வ இணையத்தளத்திலும்
உத்தியோக பூர்வ சமூக வலைத்தளத்திலும்
www.nit.lk
facebook/nalin_it

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliiyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்
Batch1: 03.03.2014
Batch2: 08.03.2014
Batch3: 10.03.2014
Batch4: 15.03.2014

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.